
கல்கி



KALKI டிசம்பர் 30, 1951 4 அணா

"லக்ஸ் டாய்லட் சோப் மிகவும் அற்புதமான அழகு சாதனம்"



என்று சொல்கிருர்

பத்மினி



இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும்
சுத்தமானதுமான சோப்
உங்கள் சருமத்தை வசீகர
மாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 206-X30 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 11
இதழ் 22

1951 டிசம்பர் 30

கர ௵
மார்கழி 15

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 22

ஒரு கேள்வி: அநேக பதில்

புதிய ஆங்கில ஆண்டு 1952-ம் வருஷம் பிறக்கப் போகிறது. புதிய ஆண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாடெங்கும் ஜனநாயகக் கொண்டாட்டம் - தேர்தல் திருவிழா - நடைபெறும். திருவிழாக்களில் மக்கள் சாதாரணமாக அடையும் ஆனந்தத்தையும் நாம் அநுபவிப்போம்; சிரமங்களையும் அநுபவிப்போம். நாலாபுறமும் "எனக்கு வோட்டு" "உனக்கு வோட்டு" என்ற கூச்சல்கள் கிளம்பிக் காது செவிடுபடச் செய்யும். விளம்பரக் காகிதங்கள் பறக்கும். சுவர்கள் விகாரமான கிறுக்கல்களால் நாசமாகும். "வாழ்க!" கோஷங்களும் "ஒழிக!" கோஷங்களும் வானளாவும்.

இவ்வளவுக்கும் மத்தியில் இந்நாட்டு மன்னர்களாகிய வாக்காளர்கள் பிறந்த நாட்டுக்குத் தங்கள் கடமையை ஆற்ற வேண்டும். வோட்டுரிமை பெற்ற ஒவ்வொருவரும் தவறாமல் வோட்டுச் சாவடிக்குச் சென்று வோட்டுப் போடவேண்டும்; ஒவ்வொருவருக்கும் இரண்டு வோட்டுக்கள் உண்டு. சென்னை இராஜ்ய சட்ட சபைக்கும் இந்திய பார்லிமெண்டு மக்கள் சபைக்கும் தனித்தனியே வோட்டுப் போடவேண்டும். சில தொகுதிகளில் மூன்று வோட்டுக்களும் நாலு வோட்டுக்களும் கூட உண்டு. பிற்பட்ட வகுப்பாருக்கு அதாவது ஹரிஜனங்கள் முதலியவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் உள்ள இடத்தில் இப்படி அதிகப்படி வோட்டுக்கள் உண்டு. அந்த அதிகப்படி வோட்டுரிமையையும் தவறாது பயன்படுத்த வேண்டும். ஒரே பெட்டியில் இரண்டு வோட்டுச் சீட்டுக்களைப் போடக் கூடாது; தனித்தனிப் பெட்டிகளிலேதான் போடவேண்டும்.

ஒவ்வொரு வோட்டுச் சாவடியிலும் பற்பல சித்திர விசித்திர சின்னங்களைக் கொண்ட வோட்டுப் பெட்டிகள் இருக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பெரும்பாலான வாக்காளர்கள் 'இரட்டை மாட்டுச் சித்திரம் பொறித்த காங்கிரஸ் பெட்டி எங்கே?' என்றுதான் பார்ப்பார்கள். பார்த்து அதில் தங்கள் வோட்டைப் போடுவார்கள். தமிழ் மக்களின் தேசபக்தியும் காங்கிரஸ் அபிமானமும் பிரசித்தி பெற்றவை. எப்படிப்பட்ட சோதனைகளுக்கும் பொய்ப் பிரசாரங்களுக்கும் ஈடு கொடுக்கக் கூடியவை. ஆகையால் "யாருக்கு வோட்டுப் போடுவது?" என்ற கேள்வி, நம் தமிழ் நாட்டில் அவ்வளவு முக்கியமான கேள்வி அல்ல. காங்கிரஸுக்கு வோட்டுப் போடுவது என்பது மக்களின் மனதில் உறுதியாகியுள்ள முடிவு.

எனினும் இந்த ஜனநாயக யுகத்தில்,—முதன் முதலில் இந்நாட்டில் சர்வஜன வாக்குரிமை அடிப்படையிலே நடக்கும் தேர்தலில்,—நம்பிக்கையினால் மட்டும் வோட்டுப் போட்டு விடக்கூடாது. காரண காரியங்களையும் பலாபலன்களையும் நன்கு தெரிந்துகொண்டுதான் நம் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும். அப்படித் தெரிந்து கொள்வதற்கும் தெரிந்தவர்கள் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்வதற்கும் சிறந்த சாதனமாக, ஒரு கேள்வி கேட்டுக் கொள்வோம்.

காங்கிரஸுக்கு ஏன் வோட்டுக் கொடுக்க வேண்டும்?—என்பதுதான் அந்தக் கேள்வி.


முன்னொரு சமயம் 'பல கேள்வி: ஒரே பதில்' என்ற தலைப்பில் நாம் எழுதியிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

இன்றைக்கு "ஒரு கேள்வி" கேட்டுக் கொண்டு, அதற்குப் "பல பதில்கள்" உண்டு என்பதைப் பார்க்கலாம்.

காங்கிரஸுக்கு ஏன் வோட்டுப் போட வேண்டும்?—நல்லது: காரணங்களைச் சொல்கிறோம். அவற்றை எண்ணிக் கணக்கு எடுத்துக்கொண்டு வாருங்கள்.

காங்கிரஸுக்கு எதற்காக நம் எல்லாருடைய வோட்டுக்களையும் போடவேண்டும்? ஏனென்றால்:

1. காங்கிரஸுக்குக் கொடுக்கும் வோட்டு நம் ஒப்பற்ற தலைவர் பண்டித ஜவாஹர்லால் நேருவுக்குக் கொடுக்கும் வோட்டாகும்.



உங்கள் கப்பலுக்கு

"இந்தியாவின் நாலாயிரம் தொகுதிகளிலும் நான் அபேட்சகனாக நிற்கிறேன்" என்று நேருஜி சொல்லி யிருக்கிறார்.

அவரைக் காட்டிலும் சிறந்த அபேட்சகர் இன்னொருவர் இருக்க முடியுமா!

இணையிலாச் செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்த நேருஜி முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் மகாத்மாவின் தலைமையை ஏற்றுத் தியாக வாழ்க்கையை மேற்கொண்டு தேசத்தொண்டில் இறங்கினார். அதுமுதல் இன்று வரையில் அவர் நாட்டுக்காகச் செய்திருக்கும் தியாகங்களுக்கும் அநுபவித்த கஷ்டங்களுக்கும் அளவு உண்டா! செய்திருக்கும் தேச சேவைக்கு விலை மதிப்பு உண்டா!

சர்வதேசங்களின் முன்னிலையில் இன்று பாரத நாடு சிறப்புற்றுத் தன் மதிப்புடன் தலை உயர்ந்து நிற்கிறது. அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன் முதலிய வல்லரசுகள் இந்தியாவின் நட்புக்குப் போட்டியிடுகின்றன.

இத்தகைய மகத்தான சிறப்பை இந்தியாவுக்கு அளித்த மகான் ஜவாஹர்லால் நேரு அல்லவா!

இன்று இந்திய நாட்டுக்குத் தலைமை தாங்கி அரசாங்கத்தை நடத்த நேருஜியைப்போல் தகுதி வாய்ந்தவர் யாரும் இல்லை. அவருடைய தகுதியில் பத்தில் ஒரு பங்கு உள்ளவர் கூட இல்லை.

நேருஜியின் தலைமை இந்தியா தேசத்துக்கு மிக அவசியமானது; இன்னும் சில காலத்துக்கு அவர் தலைமை இன்றியமையாதது.

இந்தப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால்தான் நேருஜியின் தலைமை நம்முடைய தேசத்துக்குக் கிடைக்கும்.

ஆகையால் காங்கிரஸுக்குத்தான் நம் வோட்டுக்களைப் போட வேண்டும்.

2. ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் இந்தியா தேசம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்தது. "வந்தேமாதரம்" என்று சொன்னால் கடுங்காவல் தண்டனை என்று இருந்த காலம் நம்மில் பலருக்கு நினைவு இருக்கும். அதனாலேயே,

> **"வந்தேமாதரம் என்றுயிர் போம்வரை**
> **வாழ்த்துவோம் முடி தாழ்த்துவோம்"**

என்று கவியரசர் பாரதியார் பாடினார்.

அப்படி அடிமைப் பட்டுச் சிறுமைப் பட்டிருந்த பாரத நாட்டில் பலமுறை விடுதலைப் போர் நடத்தி அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த ஸ்தாபனம் காங்கிரஸ் மகாசபைதான்.

ஆகையால் காங்கிரஸ் மகா சபைக்கே நம் வோட்டை அளிக்க வேண்டும்.

3. தாதாபாய் நௌரோஜி, கோபால கிருஷ்ண கோகலே, லோகமான்ய திலகர், கப்பலோட்டிய தமிழர், மகாகவி பாரதி, தேசபந்து தாஸ், மோதிலால் நேரு, எல்லாருக்கும் மேலாக மகாத்மா காந்தி,—ஆகிய ஒப்பற்ற தேச பக்தத் தலைவர்கள் பேணி வளர்த்த ஸ்தாபனம் காங்கிரஸ் மகாசபை.

ஆயிரமாயிரம் தேசத் தொண்டர்கள் கண்ணீர் சிந்தியும் இரத்தம் சிந்தியும் போற்றி வளர்த்த ஸ்தாபனம் காங்கிரஸ் மகாசபை.

நம் அன்னையரும் சகோதரிமாரும் எத்தனையோ பேர் தியாகத் தீயில் நின்று அருந் தவம் செய்து வளர்த்தது காங்கிரஸ் ஸ்தாபனம்.

அத்தகைய காங்கிரஸுக்கே நம்முடைய வோட்டைத் தர வேண்டும்.

4. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழும் சில பொதுத் தேர்தல்கள் நடந்தன. அவற்றில் வரி கொடுப்பவர்கள், படித்தவர்கள் முதலியோர்தான் வோட்டுக் கொடுக்கலாம் என்ற வரம்புகள் இருந்தன.

காங்கிரஸ் தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பைப் பூரணமாக ஏற்றுக் கொண்டு நாலு வருஷங்கள் தான் ஆகி யிருக்கின்றன.

இதற்குள் புதிய சுதந்திர அரசியல் திட்டத்தை வகுத்து, வயது வந்தவர்களுக்கெல்லாம் சமத்துவமான சர்வஜன வாக்குரிமையைக் காங்கிரஸ் மகா சபை அளித்திருக்கிறது.

ஆண்களுக்கு எல்லா வகையிலும் நிகராகப் பெண்களுக்கும் வாக்குரிமை கிடைத்திருக்கிறது.


மொத்தம் 17 கோடி மக்களை இந்நாட்டு மன்னராகச் செய்திருக்கிறது.

உலக சரித்திரத்தில் வேறு எந்த நாட்டிலும் சுதந்திரம் கிடைத்த நாலு வருஷத்திற்குள்ளே சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் பொதுத் தேர்தல் நடந்ததில்லை.

இவ்வாறு உலக சரித்திரம் அறியாத அற்புதத்தைச் செய்து நம் எல்லாருக்கும் வாக்குரிமை அளித்த காங்கிரஸுக்கு வோட்டுப் போடாமல் வேறு யாருக்குப் போடுவது!

வேறு யாருக்கேனும் போட்டால்,

> **"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
> **செய்ந்நன்றி கொன்ற மகற்கு."**



எத்தனை கலபதிகள் வேண்டும்?

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு நாம் உதாரணங்கள் ஆவோம்.

எனவே காங்கிரஸுக்கே நம் வோட்டுக்கள்.

5. பெரிய ஸ்தாபனங்களின் மீது நாளடைவில் மாசு படிவது உலக இயற்கை; குற்றங் குறைகள் சேர்வதும் இயற்கை. பெரும்பாலான ஸ்தாபனங்கள் மாசுகளைப் போக்கிக் கொள்ள முயல்வதில்லை; குறைகளையே குணங்களாகப் பறை சாற்றிக் கொள்ளவும் தொடங்கி விடும்.

ஆனால் காந்தி மகான் வளர்த்த காங்கிரஸ் மகாசபை அடிக்கடி ஆத்ம பரிசோதனை செய்து கொள்கிறது; குற்றங் குறைகளைக் களையவும் மாசுகளைப் போக்கிக் கொள்ளவும் முயல்கிறது.

சமீபத்தில் பண்டித நேரு அத்தகைய பெரு முயற்சி ஒன்று தொடங்கியதை நாம் அறிவோம். தேர்தலுக்குப் பிறகு அந்த முயற்சியை மேலும் நடத்திப் பூரண வெற்றியாகச் செய்வதாகவும் உறுதி பணித்திருக்கிறார்.

இவ்வாறு குற்றங் குறைகளைத் தெரிந்து களைந்து கொள்ளும் புனிதமான காங்கிரஸுக்கு வோட்டுக் கொடுக்காமல் வேறு யாருக்குக் கொடுப்பது!

மற்ற ஸ்தாபனங்கள் குற்றங் குறைகளையே குணங்களாகச் சொல்லித் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் ஸ்தாபனங்கள் அல்லவா!

ஆதலின் நம் வோட்டுக்கள் காங்கிரஸ் மகா சபைக்குத்தான்.

6. காங்கிரஸை இன்று எதிர்த்து நிற்கும் கட்சிகளில் முக்கியமானவை பிரஜா கட்சி, சோஷலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி.

இந்த மூன்று கட்சிகளில் எதுவும் மொத்தத் தொகுதிகளில் பாதித் தொகுதிகளுக்குக்கூட அபேட்சகர்களை நிறுத்தி வைக்கவில்லை. எனவே, இந்தக் கட்சிகளில் எதனாலும் தனிப்பட இயங்கி இராஜ்யத்தை நடத்த முடியாது.

பிரஜா கட்சி—சோஷலிஸ்ட் கட்சிகளின் திட்டங்களுக்கும் காங்கிரஸ் வேலைத் திட்டத்துக்கும் வித்தியாசம் அதிகம் கிடையாது. ஆனால் "நாங்கள் இன்னும் நன்றாக அமுல் நடத்துவோம்" என்று சொல்கிறார்கள். காங்கிரஸைவிட நன்றாக நடத்துவதற்கு அவர்களிடம் போதுமான ஆள் பலம் இருக்கிறதா! தலைவர்கள் இருக்கிறார்களா!

பிரஜா கட்சித் தலைவர் ஆச்சாரிய கிருபளானி ஒரு சிறிய முனிசிபாலிடியைக்கூடத் திறமையாக நடத்த முடியாதவர். அவரைச் சேர்ந்தவர்களில் பொது மக்களுக்குத் தெரிந்தவர்கள் அதே ரகத்தைச் சேர்ந்தவர்கள் தான். மற்றவர்கள் அதிகார பதவிகளுக்காகப் புதிதாக வந்து சேர்ந்தவர்கள்; அல்லது காங்கிரஸில் பதவிப் போட்டி போட்டுத் தோல்வி அடைந்து வந்து சேர்ந்தவர்கள்.

சோஷலிஸ்ட் கட்சியில் தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயண் ஒருவர்தான் திறமை வாய்ந்தவர். அவருடைய சகாக்கள் நாலைந்து பேர் வாய்ப்பார்த்தல் போடும் இலட்சியவாதிகள். மற்றவர்கள் ஊர் பேர் தெரியாதவர்கள்; அல்லது புதிதாக வந்து சேர்ந்தவர்கள். இத்தனை வருஷமாக முயன்றும் சோஷலிஸ்டுகள் தங்கள் கட்சியையே திறம்பட அமைக்க முடியவில்லை. அரசாங்கத்தை எப்படி நடத்தப் போகிறார்கள்!

மூன்றாவதான கம்யூனிஸ்ட் கட்சியினர் நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து கலகத்தையும் குழப்பத்தையும் விளைவிக்க முயன்று வந்தார்கள். அந்த முயற்சி பலிக்காமல் இப்போது தேர்தலில் போட்டியிட முன் வந்திருக்கிறார்கள். இவர்களிடம் தற்சமயம் நாட்டின் ஆட்சியை ஒப்புவிப்பது வீட்டுக் குழந்தையைக் காட்டுக் கரடியிடம் ஒப்புவிப்பது போலாகும்.

மற்றும் சில சில்லறைக் கட்சிகள் இந்தத் தேர்தலுக்காக மட்டுமே தோன்றியிருக்கின்றன. அவற்றில் சில கட்சிகள் இப் பெரிய மாகாணத்தில் இரண்டு அபேட்சகர்களையோ, மூன்று அபேட்சகர்களையோ நிறுத்தி வைத்திருக்கின்றன! இவர்கள் ஜயித்து வந்தால் என்ன காரியத்தைச் சாதிக்க முடியும் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

நாட்டின் அரசாங்கத்தை நல்ல முறையில் நடத்தித் தேசத்தில் சுபிட்சத்தை உண்டாக்கக் கூடிய கட்சி இன்று காங்கிரஸைத் தவிர வேறு இல்லை.

ஆகையால் காங்கிரஸுக்கே நமது வோட்டைக் கொடுக்க வேண்டும்.

7. வேறு எந்த மாகாணத்திலும் இல்லாத அதிசயமாக இந்தத் தமிழ் நாட்டில் மட்டும் திராவிடக் கட்சி என்பதாக ஒன்று இருக்கிறது. இக் கட்சி இப்போது இரு கிளைகளாகப் பிரிந்து வேலை செய்கிறது. இக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்தியா சுதந்திரம் பெற்ற அன்று கறுப்புக் கொடி ஏற்றித் துக்கம் கொண்டாடியவர்கள். "கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டும்" "உச்சிக் குடுமியை ஒழிக்க வேண்டும்" "திரு

குழந்தைக்கு யார் வேண்டும்?



நீற்றையும் காமத்தையும் அழிக்க வேண்டும்'' என்பது போன்ற அபூர்வமான 'சீர்திருத்த'க் கொள்கை உடையவர்கள். ஆலயங்களின் விஷயத்தில் கஜினி முகம்மது—கோரி முகம்மது பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இப்பொழுதுத் தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்தவில்லை. ஆனால் காங்கிரஸுக்கு எதிராக யார் நின்றாலும் அவரை ஆதரிப்போம் என்று முனைந்திருக்கிறார்கள். 'கிடைத்த தடியைக் கொண்டு காங்கிரஸ் பாம்பைக் கொல்லு!' என்று பிரசாரம் செய்கிறார்கள். அப்படிக் கிடைக்கும் தடி 'பிராமணத் தடியா யிருந்தாலும் பாதகமில்லை' என்கிறார்கள். திராவிடக் கழகத்தார் இப்படி மூர்த்தண்யமாகக் காங்கிரஸை ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஒரு காரணமே தேச பக்தர்கள் இத்தேர்தலில் காங்கிரஸை ஒருமுகமாக ஆதரிப்பதற்குப் போதிய காரணமாகும்.

ஆதலின், நம்முடைய வோட்டுக்கள் காங்கிரஸுக்கேதான்.

8. காங்கிரஸை எதிர்த்துச் சுயேச்சை அபேட்சகர்கள் பலர் ஆங்காங்கு நிற்கிறார்கள்.

சுயேச்சை அபேட்சகர்கள் என்றால், எந்த விதக் கட்டுப்பாட்டுக்கும் உட்படாதவர்கள்.

அவர்கள் பிற்பாடு எப்படி நடந்து கொண்டாலும் யாரும் அவர்களைக் கேட்க முடியாது.

காங்கிரஸின் சார்பாக நிற்பவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள். ஆகையால் காங்கிரஸ் திட்டங்களை அவர்கள் நிறைவேற்றியே தீர வேண்டும். அவர்கள் தவறாக நடந்தால் காங்கிரஸ் மேலிடத்துக்குப் புகார் செய்யலாம்; பரிகாரம் கிடைக்கும்.

ஆனால் சுயேச்சை அபேட்சகர்கள் பிசகு செய்தால் பரிகாரமே கிடையாது.

சுயேச்சையாகத் தேர்தலில் நிற்பவர்கள் பெரும்பாலும் சுய லாபத்துக்காகவும் சொந்த தம்பத்துக்காகவும் நிற்பவர்கள்தான்.

அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கும் வோட்டு வீண் போன வோட்டாகும்; அல்லது நாட்டைக் கெடுக்கும் வோட்டாக முடியும்.

ஆகையால் காங்கிரஸுக்கே நாம் வோட்டுக்களை அளிக்க வேண்டும்.

9. காங்கிரஸ் தலைவர்கள் இன்று வரையில் பொது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைச் சிறிதும் பிறழாமல் நிறைவேற்றி வந்திருக்கிறார்கள்.

''கள்ளுக் கடைகளை மூடுவோம்'' என்று சொன்னார்கள்.

சொன்னபடி மூடினார்கள்.

''ஆலயங்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவோம்'' என்றார்கள்.

அவ்விதமே திறந்து விட்டார்கள்.

''உப்பு வரியை எடுப்போம்'' என்றார்கள்.

எடுத்து விட்டார்கள்.

''ஜமீன்தாரிகளை ஒழிப்போம்'' என்றார்கள்.

ஒழித்து விட்டார்கள்.

''சுதேச மன்னர்களின் ஏகாதிபத்யாதிகாரத்தை ஒழிப்போம்'' என்றார்கள்.

அந்தப் பிரமாதமான காரியத்தையும் செய்து முடித்தார்கள்.

''விதேசித் துணிக்காக அயல்நாட்டுக்குப் பணம் போவதைத் தடுப்போம்'' என்றார்கள்.

அவ்வாறு தடுத்து விட்டார்கள். (இன்று சீமைத் துணிக்காக ஒரு காலணாக் கூட நம் நாட்டை விட்டுப் போவதில்லை.)

''நீதி வழங்கும் அதிகாரத்தையும் நிர்வாக அதிகாரத்தையும் பிரிப்போம்'' என்று சொன்னார்கள்.

அப்படியும் செய்து விட்டார்கள்.

''சைன்யத்தை இந்திய மயமாக்குவோம்'' என்று சொன்னார்கள்.

அதையும் துணிந்து செய்து விட்டார்கள். (இன்று மாபெரும் இந்திய சைன்யத்தின் பிரதம சேனாதிபதி ஓர் இந்தியர் அல்லவா!)

இதுவரையில் காங்கிரஸ் மகாசபை வாக்களித்த வண்ணமே எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றி வந்திருக்கிறது.

ஆகையால் வாக்குறுதி பிறழாத காங்கிரஸுக்கே நமது வோட்டுக்களைக் கொடுப்போம்.

10. சென்ற முறை பொதுத் தேர்தல் நடந்த போது நமது நாட்டில் உணவுப் பற்றாக்குறை இவ்வளவு முக்கிய பிரச்னையாக இல்லை.

ஆகையால் உணவுப் பற்றாக் குறை விஷயத்தை ஐந்து வருஷத்துக்கு முன் காங்கிரஸ் வெளியிட்ட தேர்தல் விக்ஞாபனத்தில் குறிப்பிடவே இல்லை.

பாகிஸ்தான் பிரிவினை காரணமாகவும் பர்மா கலவரம் காரணமாகவும் இந்நாட்டில் அரிசிப் பற்றாக் குறை பெரிய பிரச்னையாயிற்று.

நாலு வருஷம் சேர்ந்தாற் போல் மழை யில்லாமையால் உணவுப் பற்றாக் குறையின் கஷ்டம் அதிகமாயிற்று.

உணவுப் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்குக் காங்கிரஸ் சர்க்கார் எல்லா முயற்சிகளையும் செய்து வந்திருக்கிறார்கள்.

உணவுப் பற்றாக்குறை நாட்டில் ஏற்படாமலே தடுப்பதற்கான பெரிய பெரிய அணைக்கட்டுத் திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள்.

"அடுத்த ஐந்து வருஷ காலத்தில் உணவுப் பற்றாக்குறையை அடியோடு தீர்த்து விடுகிறோம்" என்று காங்கிரஸ் தலைவர்கள் இந்த முறை வெளியிட்டுள்ள தேர்தல் விக்ஞாபனத்தில் வாக்குறுதி அளிக்கிறார்கள்.

இது வரையில் கொடுத்த வாக்குறுதிகளை யெல்லாம் நிறைவேற்றி வந்திருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் இந்த வாக்குறுதியையும் கட்டாயம் நிறைவேற்றுவார்கள்.

ஆதலின் காங்கிரஸ் தலைவர்களின் வாக்குறுதியை நம்பிக் காங்கிரஸுக்கே நம் வோட்டுக்களைக் கொடுக்க வேண்டும்.

11. இந்தியா சுதந்திரம் அடைந்ததோடு தங்கள் தேசத் தொண்டு பூர்த்தி யடைந்து விட்டதாகக் காங்கிரஸ் தலைவர்கள் சொல்லவில்லை.

சுதந்திர இந்தியாவில் பரிபூரண சுபிட்சம் நிலவும்படி செய்வதே இனித் தங்கள் இலட்சியம் என்று சொல்லுகிறார்கள்.

அதற்காகவே தீர்க்காலோசனை செய்து ஐந்து வருஷத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

நாட்டில் ஏற்படும் சுபிட்சம் ஒரு சிலருக்கு மட்டும் பயன்படுவதைக் காங்கிரஸ் தலைவர்கள் ஒருகாலும் ஒப்புக் கொள்ளவில்லை.

"சுபிட்சத்தின் பலன்களைச் சகல ஜனங்களும் பகிர்ந்து அடையும்படியான சமத்துவ சமுதாயத்தை அமைப்போம்" என்றும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.


நாட்டில் ஏழை - பணக்காரன் என்ற வித்தியாசத்தை ஒழிக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஸ்தாபனம் காங்கிரஸ் ஒன்றுதான். அத்தகைய சமதர்மத்தை நிலைநாட்ட ஆர்வம் கொண்டவர்கள் காங்கிரஸ் தலைவர்களைக் காட்டிலும் யாரும் இல்லை.

ஆதலின் கட்டாயம் காங்கிரஸ் மகா சபைக்கே நம் வோட்டுக்களைக் கொடுக்கவேண்டும்.

காங்கிரஸுக்குக் கொடுக்கும் வோட்டு
நேருஜிக்கு நாம் கொடுக்கும் வோட்டு
காங்கிரஸுக்குக் கொடுக்கும் வோட்டு
நாட்டின் சுபிட்சத்துக்குக் கொடுக்கும் வோட்டு
காங்கிரஸுக்குக் கொடுக்கும் வோட்டு
நம் சந்ததிகள் வாழ்வுக்குக் கொடுக்கும் வோட்டு
காங்கிரஸுக்குக் கொடுக்கும் வோட்டு
சுதந்திர விரோதிகளுக்கு வைக்கும் வேட்டு

ஆகையால் இரட்டை மாட்டுச் சித்திரம் பொறித்த காங்கிரஸ் பெட்டிகளிலேயே நம் எல்லோருடைய வோட்டுக்களையும் போடுவோமாக.

வோட்டின் சக்தி



பஜ  கோவிந்தம்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

10

மெய்ஞ்ஞானம் அடைந்தால் வாழ்க்கையின் துயரங்கள் தாமே தீர்ந்து போகும். மெய்யறிவு ஒன்றே துக்கத்துக்கு மருந்து. அது ஒரு தவறாத மருந்து. இதில் சந்தேகமில்லை என்கிறார் ஆச்சாரியர் :

முதுமை மேவிட மாயும் காம விகாரம்;
வற்றிய நீர்நிலை இருந்தவிடம் காணாது;
செல்வம் சுருங்கியதும் சூழ்ந்த சுற்றம் எங்கே?
ஞானம் பெற்றதும் ஓயும் மாய மெல்லாம்.

* *

வயஸிகதே க: காமவிகார :
சுஷ்கே நீரே க: காஸார :
க்ஷீணே வித்தே க: பரிவார :
ஞாதே தத்வே க: ஸம்ஸார :

துக்கமும் கஷ்டமும் மனசில் மயல் இருக்கும் வரையில். மாயம் தீர்க்கும் மருந்து அறிவு ஒன்றே. அந்த அறிவு வேண்டின் சீலமும் ஒழுக்கமும் பக்தியும் இருக்க வேண்டும். இவையின்றி நூல்களைப் படித்து வந்த அறிவு அறிவாகாது.

வயது தீர்ந்து போனதும் காம விகாரங்கள் எவ்வாறு தாமாகத் தொலைகின்றனவோ, எப்படி நீர் வற்றியதும் ஏரி உருவங்கூடத் தெரியாமல் போகிறதோ, எப்படி பணம் சுருங்கியதும் சுற்றத்தார் இருந்த இடந் தெரியாமல் கலைந்து போகிறார்களோ, அவ்வளவு நிச்சயம் அறிவு பெற்றதும் வாழ்க்கையின் துயரங்கள் தீருவது என்கிறார்.

वयसि गते कः कामविकारः
शुष्के नीरे कः कासारः ।
क्षीणे वित्ते कः परिवारः
ज्ञाते तत्त्वे कः संसारः ॥

11

யௌவனமும் உடல் ஆரோக்கியமும் படைத்திருக்கிறேன் என்று கர்வப்படவேண்டாம். வேண்டிய செல்வமிருக்க, சுற்றத்தாரும், நண்பர்களும் சொன்னபடி கேட்பவர்களும் இருக்க, எனக்கு என்ன குறை என்று செருக்கடைய வேண்டாம். துரதிருஷ்டம் சேரின், இவை அனைத்தும் ஒரு நிமிஷத்தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும். உன் செருக்கெல்லாம் ஒரு கணத்தில் வெட்கமாக மாறிப் போகும். இவ்வுலகத்தின் நிலையாமையை அறிந்து அடக்கத்தோடு வாழ்க்கை நடத்து. இந்த வாழ்க்கையில் உனக்குள்ள பற்றைத் துறந்து மெய்ஞ்ஞான வாழ்க்கையில் இறங்கு. அறிவு பெற்றவன் அந்த அறிவின் பயனுக்த் துறவு மார்க்கத்தில் இறங்குவான்.

துறவு மார்க்கமே மார்க்கம்
உறவும் பணமும் வயதும் நம்பி
வேண்டாம் ஆங்காரம்.
போங்காலம் வந்தால்
சடக்கென்று மறையும்
தேடிப் பொழுதில் எல்லாம்.

* * *

மாகுரு தன ஜன யௌவன கர்வம்
ஹரதி நிமேஷாத் காலஸ் ஸர்வம்
மாயாமய மித மகிலம் ஹித்வா
ப்ரம்மபதம் த்வம் ப்ரவிச விதித்வா.

உலக வாழ்க்கையில் நாம் அடையும் சுகமும் செல்வமும் பொருளற்ற மாயப் பொருள்கள். அவற்றின் நிலையற்ற பான்மையை யறிந்து கொண்டு துறவு மார்க்கத்தைக்கடைப் பிடி என்கிறார். பக்குவமடைந்தபின் என்பது பெரியோர்கள் எச்சரிக்கை. பக்குவ மடையாதவரின் துறவு பரிகாசத்துக்கு இடமாகும்.

मा कुरु धनजनयौवनगर्वम्
हरति निमेषात्कालः सर्वम् ।
मायामयमिदमखिलम् हित्वा
ब्रह्मपदम् त्वम् प्रविश विदित्वा ॥

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 52

உடைந்த படகு

இடி விழுந்ததனால் பாய்மரத்தின் உச்சியில் தீப்பிடித்து எரிவதைப் பார்த்ததும் இனி அம்மரக்கலம் தப்பிக்க முடியாது என்று வந்தியத்தேவன் நிச்சயமடைந்தான். எனவே, தானும் உயிரோடு தப்பிக்க முடியாது.

வந்தியத்தேவனுக்கு அப்போது சிறிதும் மனக்கிலேசம் உண்டாகவில்லை. உற்சாகந்தான் மிகுந்தது. கலகலவென்று சிரித்தான். பாய்மரத்தோடு தன்னைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டான். நடுக்கடலில் தீயில் வெந்து சாக வேண்டியதில்லையல்லவா? அதைக் காட்டிலும் குளிர்ந்த நீரில் மூழ்கிக் கடலின் அடியில் சென்று அமைதியாக உயிர் விடுவது மேல் அல்லவா?

ஆயுளில் மிச்சமுள்ள சிறிது நேரத்தை வீணாக்க வந்தியத்தேவன் விரும்பவில்லை. தீப்பற்றி எரிந்த கப்பலின் வெளிச்சத்தில் சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்துக் கொந்தளித்த கடலின் சௌந்தரியத்தை அநுபவிக்க விரும்பினான். தன் உடல் சமாதி அடையப் போகும் இடத்தை நன்றாகப் பார்த்துக் கொள்வது நல்லதல்லவா? இம்மாதிரி அகால மரணமடைந்தவர்கள் ஆவி உருவத்தில் இறந்த இடத்தைச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள் என்று சொல்வார்களே? அம்மாதிரி தன் ஆவியும் இந்தக் கடலின் மேலேயே வட்டமிட்டுக் கொண்டிருக்குமோ! காற்றில் மிதக்குமோ? அலைகளின் மேலே உலாவுமோ? சுழற்காற்று அடிக்கும்போது தன் ஆவியும் சுற்றிச் சுற்றி வருமோ?

ஆகா! எப்போதாவது ஒரு நாள் இந்தக் கடலில் அரசிளங்குமரி கப்பல் ஏறிப் போனாலும் போவாள். கப்பலை ஓட்டும் மாலுமிகள் "வந்தியத்தேவன் கப்பலோடு முழுகிய இடம் இதுதான்!" என்று காட்டுவார்கள். அவளுடைய வேல் விழிகளில் கண்ணீர் துளித்து அவளது முழுமதி முகத்தில் முத்து முத்தாகச் சிந்தும். ஆவி வடிவத்திலே அதை அருகிலிருந்து தான் பார்க்கும்படி நேர்ந்தால், அவளுடைய கண்ணீரைத் தன்னால் துடைக்க முடியுமா?......

கப்பல் ஒரு பேரலையின் சிகரத்தின் மேலே ஏறியது. பாய்மரத் தீவர்த்தி போட்ட வெளிச்சத்தில் சுற்றிலும் வெகுதூரம் தெரிந்தது. கரும் பளிங்கு நிறம் பெற்றுத் திகழ்ந்த கடல் நீரில் பாய்மரத் தீயின் ஒளி விழுந்த இடம் மட்டும் பொன் வெள்ளமாகத் திகழ்ந்தது. இந்த அழகின் அற்புதத்தை வந்தியத்தேவன் பார்த்து மகிழ்ந்து முடிவதற்குள் அவனுடைய கண்ணையும் கவனத்தையும் வேறொன்று கவர்ந்தது.

சற்றுத் தூரத்தில் அவன் ஒரு மரக்கலத்தைப் பார்த்தான். அதில் புலிக் கொடி பறக்கக் கண்டான்.



கடவுளே! உன் விந்தைகளுக்கு எல்லையே இல்லை போலும்!—அந்த மரக்கலத்திலே வருகிறவர் இளவரசர் அருள்மொழி வர்மராகத்தான் இருக்க வேண்டும். தன்னைத் தேடிக் கொண்டுதான் அவர் வருகிறார்;—என்று அவளுடைய உள்ளுணர்ச்சி கூறியது!

* * *

வந்தியத்தேவன் ஏறியிருந்த கப்பல் சிக்கிக்கொண்டு தத்தளித்த அதே சுழிக் காற்றில் பார்த்திபேந்திரனுடைய கப்பலும் அகப்பட்டுக் கொண்டது. ஆனால் இந்தக் கப்பலில் அச்சுழிக் காற்றின் தன்மையை அறிந்தவர்களும் கப்பலோட்டும் கலையில் வல்லவர்களுமான மாலுமிகள் இருந்தார்கள். பாய்மரங்களில் விரித்திருந்த பாய்களை அவர்கள் இறக்கிச் சுற்றி வைத்தார்கள். காற்றின் வேகம் முழுவதையும் கப்பல் எதிர்த்து நிற்பது அவசியமில்லாத வண்ணமாகக் கப்பலின் சுக்கானைப் பிடித்து இயக்கி வந்தார்கள். ஒரு நிமிஷம் கப்பல் அடியோடு சாய்ந்து 'இதோ கவிழ்ந்து விட்டது' என்று தோன்றும். மறு நிமிடம் சமாளித்துக்கொண்டு நிமிர்ந்து நிற்கும். மலைபோன்ற அலைகள் அந்தக் கப்பலை எத்தனைதான் தாக்கியும் அதில் இணைக்கப்பட்டிருந்த மரங்களும் பலகைகளும் சிறிதேனும் பிளந்து கொடுக்க வேண்டுமே! கிடையவே கிடையாது! சமுத்திரராஜன் அந்தக் கப்பலைப் பந்து ஆடுவதுபோல் தூக்கி எறிந்து விளையாடினான். சுழிக் காற்று அக்கப்பலைப் பம்பரம் சுற்றுவதுபோலச் சுழற்றிச் சுழற்றி அலைத்தது. வானத்திலிருந்து வெள்ளம் பொழிந்து அந்தக் கப்பலைக் கடலில் அமுக்கி அழித்துவிடப் பார்த்தது. சோழநாட்டுத் தச்சுவேலை நிபுணர்கள் கட்டிய அக்கப்பலை,—தமிழகத்தின் புகழ்பெற்ற மாலுமிகள் ஓட்டிய அக்கப்பலை—கடலும் மழையும் காற்றும் சேர்ந்து தாக்கியும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

“இதைக் காட்டிலும் கொடிய சுழிக் காற்றுகளையும் சண்டமாருதங்களையும் நான் பார்த்திருக்கிறேன்; சமாளித்திருக்கிறேன். ஆகையால் கவலைப்படத் தேவையில்லை!” என்று கலபதி கூறினான். ஆனால் அவன் பார்த்திபேந்திரனிடமும் இளவரசரிடமும் வேறொரு அபாயத்தைப்பற்றித் தன் பயத்தை வெளியிட்டான்.

கரிய மேகங்கள் திரண்டு வந்து வானை மூடி நாலாபுறமும் இருள் சூழச் செய்து விட்டன. போதாததற்குச் சோனாமாரியாக மழையும் பெய்தது. கடலில் எழுந்த அலைகளோ வரிசை வரிசையான மலைத் தொடர்களைப்போல் கப்பலைச் சுற்றித் திரையிட்டு மறைத்தன. இந்த நிலையில் அவர்கள் எந்தக் கப்பலைத் தேடிச் சென்றார்களோ அது வெகு சமீபத்தில் வந்தாலும் பார்க்க முடியாது. அந்தக் கப்பலும் இதைப் போலத்தான் சுற்றிச் சுழன்று தத்தளித்துக் கொண்டிருக்கும். கப்பல்கள் ஒன்றோடொன்று மோதினால் இரண்டும் சுக்கல் சுக்கலாகிப் போய்விடும். கப்பலில் உள்ளவர்களின் கதி அதோகதிதான்!

ஆகவே சுழிக் காற்றின் அபாயத்தைக் காட்டிலும் சுற்றிலும் ஒன்றும் பார்க்க முடியாமலிருப்பதுதான் அதிக அபாயம் என்று அம்மரக்கலத் தலைவன் கூறினான்.

இது இளவரசருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆகவே அவர் அத்தனை காற்றிலும் மழையிலும் கப்பலின் ஓரமாக நின்றுகொண்டு தன் கூரிய கண்களின் பார்வையை நாலாபுறமும் செலுத்திக் கொண்டிருந்தார். மின்னல் மின்னிய போதெல்லாம் அவருடைய கண்கள் அதிவேகமாகச் சுழன்று சுற்றுப்புறமெங்கும்

உற்றுப் பார்த்தன. அவருடைய உள்ளம் எப்படித் தத்தளித்துக் கொண்டிருந்தது என்பதைச் சொல்லி முடியாது. தன் அருமைத் தமக்கை அனுப்பிய தூதன் முரட்டு அராபியர்களிடமும் கொலைகார மந்திரவாதிகளிடமும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறன். அது போதாது என்று இந்தச் சுழிக் காற்று வேறு வந்து சேர்ந்தது. ஒருவேளை அவ்வீர வாலிபன் ஏறியுள்ள கப்பலைக் கண்டு பிடிக்க முடியாமலே போய் விடுமோ! கண்டுபிடித்தாலும் அவனை உயிரோடு காண்பது சாத்தியமா?—கலபதி அஞ்சுவதுபோல் அவன் ஏறியிருக்கும் கப்பல் மேல் நம் கப்பல் மோதி இரண்டும் கடலில் மூழ்கினால் வேடிக்கையாகத் தானிருக்கும்! ஆனால் தங்கையிடம் சொல்லவேண்டிய செய்தியைச் சொல்லுவது யார்? பார்த்திபேந்திரனிடம் அந்தக் குடும்ப இரகசியத்தைக் கூறுவது இயலாத காரியம். கூறினால் அந்தப் பல்லவனுக்கு அது கேலியாயிருக்கும்; அதன் முக்கியத்தை அவன் உணர மாட்டான்.

இதுகாறும் இளவரசர் செய்ய எண்ணிய காரியம் எதிலும் தோல்வியடைந்ததில்லை. இப்போது தோல்வி ஏற்பட்டு விடுமோ?—இல்லை, ஒருகாலும் இல்லை. பொன்னியின் செல்வனுக்குத் தீங்கு நேருவதையோ, தோல்வி ஏற்படுவதையோ சமுத்திர ராஜன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்!

இருளையும் மழையையும் கிழித்துக் கொண்டு எல்லாத் திசைகளையும் பார்த்துக் கொண்டிருந்த இளவரசரும் அந்தப் பேரிடி முழக்கத்தைக் கேட்டார். அப்போது மின்னிய மின்னலுக்கு அவரும் கண்களைச் சிறிது மூடிக் கொள்ள வேண்டியதாயிற்று. கண்ணைத் திறந்து பார்த்தபோது மின்னல் வெளிச்சமில்லாத வேறொரு வெளிச்சத்தைக் கண்டார். சற்றுத் தூரத்தில் ஒரு கப்பல் விரித்த பாய்மரங்களுடன் பேயாடுவது போல் ஆடிக் கொண்டிருந்தது! அதன் பாய்மரத்தின் உச்சியில் தீப்பற்றி எரிந்தது! அந்தத் தீயின் வெளிச்சத்தில் இளவரசர் அதில் ஒரு மனிதன் பாய் மரத்தோடு சேர்ந்து நிற்பதைக் கண்டார்! கடவுளே! இத்தகைய அற்புதமும் நடக்கக் கூடுமா?—அவன் அந்த வீர இளைஞனாகிய வந்தியத் தேவன் தான்! அவன் மட்டும் ஏன் தனியாக நிற்கிறன்? மற்றவர்கள் என்ன ஆனார்கள்?—அதைப் பற்றியெல்லாம் யோசிப்பதற்கு இப்போது நேரமில்லை. செய்ய வேண்டியது இன்னதென்பதை ஒரு கொடிப் பொழுதில் இளவரசர் தீர்மானித்துக் கொண்டார்.

அவர் பார்த்த காட்சியைக் கப்பலில் இருந்த மற்றவர்கள் பலரும் பார்த்தார்கள். "அதோ!" என்று அவர்கள் ஏககாலத்தில் எழுப்பிய பெரிய கூச்சல் காற்றின் பயங்கர சத்தத்தையும் மீறிக் கொண்டு எழுந்தது.

கப்பலோடு சேர்த்துக் கட்டியிருந்த படகண்டை போய் இளவரசர் நின்று கொண்டு, அருகில் நின்ற மாலுமிகளைப் பார்த்து "உங்களில் யார் என்னுடன் வருவீர்கள்?" என்று உரத்த குரலில் கேட்டார். அவர் செய்ய உத்தேசித்த காரியம் இன்னதென்று ஊகித்தறிந்து மாலுமிகள் திகைத்தார்கள். ஆயினும் பலர் போட்டியிட்டு முன் வந்தார்கள்.

பார்த்திபேந்திரனும் கலபதியும் வந்து தடுக்கப் பார்த்தார்கள்.

"இளவரசே! இது என்ன காரியம்! இந்தக் கொந்தளிக்கும் கடலில் படகு எப்படிச் செலுத்த முடியும்? எரிகின்ற கப்பலில் உள்ளவனை எப்படிக் காப்பாற்ற முடியும்?—ஆனாலும் முயற்சி செய்து பார்க்கலாம். தாங்கள் போக வேண்டாம்; போவதற்கு எங்களில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்" என்றான் பார்த்திபேந்திரன்.

"ஜாக்கிரதை! இச்சமயம் என்னைத் தடுக்கப் பார்க்கிறவர்களை நான் ஒரு நாளும் மன்னிக்க முடியாது!" என்று இராஜ கம்பீரமான அதிகார தோரணையில் கூறினார். அதே சமயத்தில் படகை அவிழ்த்துவிட்டார். "உங்களில் இரண்டு பேர் போதும்; வாருங்கள்!" என்றார்.

படகு கடலில் இறங்கியது. இளவரசரும் அவர் குறிப்பிட்ட இருவரும் அதில் குதித்தார்கள். மறு கணமே படகு கப்பலை விட்டு அகன்று சென்றது. அலைகளின்மேல் ஆவேசக் கூத்து ஆடியது. இளவரசரும் மற்ற இருவரும் துடுப்புகளைப் பலங்கொண்ட மட்டும் வலித்தார்கள். சிறிது சிறிதாகப் படகு எரிகின்ற கப்பலை அணுகியது. இதற்குள் தீ உச்சியிலிருந்து பாதி பாய்மரம் வரையில் இறங்கி விட்டிருந்தது. ஆனால் வந்தியத் தேவனோ அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவன் தீயின் வெளிச்சத்தில் கப்பலைப் பார்த்தான்; கப்பலிலிருந்து இறக்கப்பட்டு வந்த படகையும் பார்த்தான். அந்த அதிசயத்தில் தன்னை மறந்திருந்தான். தான் ஏதேனும்



செய்ய வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றவில்லை.

"குதி! கடலில் குதி!" என்று கத்தினார் இளவரசர். அவன் காதில் அது விழவில்லை. செயலற்ற பதுமையைப் போல் நின்று கொண்டிருந்தான்.

ஆயிற்று; இன்னும் சிறிது நேரம் தாமதித்தால் கப்பல் அடித் தளத்துக்கு நெருப்பு வந்து விடும்; கப்பல் மூழ்கி விடும். அப்புறம் அவனைக் காப்பாற்றுவது இயலாத காரியமாகிவிடும்.

என்ன செய்ய வேண்டும் என்பதை மறுபடியும் இளவரசர் ஒரு நொடியில் முடிவு செய்தார். இத்தகைய சந்தர்ப்பங்களுக்கென்றே அந்த அபாயப் படகில் சேர்த்துக் கட்டியிருந்த நீளக் கயிற்றின் இன்னொரு நுனியைத் தமது இடுப்பில் சுற்றி இறுக்கிக் கட்டிக் கொண்டார். மாலுமிகள் இருவருக்கும் எச்சரிக்கை செய்துவிட்டுக் கடலில் குதித்தார்.

இத்தனை நேரம் படகுடன் விளையாடிய அலைகள் இப்போது இளவரசருடன் விளையாடின. ஒரு கணம் அவரை வானத்துக்கு உயர்த்தின; மறு கணம் பாதாளத்தில் தள்ளின. எனினும் இளவரசர் திசையும் குறியும் தவறாமல் எரிகின்ற கப்பலை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்.

ஒரு பெரிய, மிகப் பெரிய அலை வந்தது! இளவரசர் மேலே அது விழுந்திருந்தால் அவரை அமுக்கிக் கடலின் அடியில் கொண்டுபோயிருக்கக்கூடும்! ஆனால் அது நல்ல அலை; இளவரசருக்கு ஏவல் செய்ய வந்தது. அவரைத் தன் உச்சியில் வைத்துத் தூக்கிக்கொண்டு போய் எரிகின்ற கப்பலின் மேல் தளத்தில் எறிந்தது.

ஏற்கெனவே கட்டு அவிழ்த்துக்கொண்டிருந்த வந்தியத்தேவன் இளவரசரைப் பார்த்ததும் 'ஆ' என்று அலறி அவரை எடுப்பதற்காகத் தாவிக்குனிந்தான். இளவரசர் அவனுடைய கழுத்தை அப்படியே இறுக்கிக் கட்டிக் கொண்டார். அவன் காதுக்குள் "என்னைப் பிடித்துக் கொண்டு வா! விட்டு விடாதே!" என்றார். சொல்லி முடிந்த தட்சணமே இருவரும் மறுபடியும் கடலில் மிதந்து அலைகளினால் மொத்துண்டார்கள்.

மாலுமிகள் துடுப்புத் தள்ளுவதை நிறுத்திக் கயிற்றைப் பிடித்து இழுக்கலானார்கள்.

இளவரசரும் அவரை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனும் படகை அணுகினார்கள்.

படகைப் பிடித்து அதில் ஏறுவது எளிய காரியமில்லை. அலைகளுடன் போராடிக் கொண்டு வந்தியத்தேவனையும் தாங்கிக் கொண்டு படகில் ஏறுவதற்கு முயன்ற ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாக இருந்தது.

இதோ படகு கைக்கு அகப்படுவது போலிருக்கும்; அடுத்த கணம் எட்டாத தூரத்தில் போய் விடும்.

கடைசியாக, அதற்கும் ஒரு பெரிய அலை உதவி செய்தது. படகின் அருகில் உயரமாக எழுந்த அந்தப் பேரலையோடு அவர்களும் எழுந்தார்கள். மாலுமிகளின் உதவியுடன் படகில் குதித்தார்கள்.

"துடுப்பை வலியுங்கள்! வேகமாய் வலியுங்கள்!" என்றார் இளவரசர்.

ஏனெனில், எரிகின்ற கப்பல் கடலில் மூழ்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அப்படி மூழ்கும்போது ஏற்படும் கொந்தளிப்பில் படகு கவிழ்ந்தாலும் கவிழ்ந்து விடும். அது மட்டுமன்று; கப்பல் மூழ்கித் தீ அணைந்து விட்டாலும் பிறகு மற்றொரு கப்பலை அவர்கள் பிடிப்பதும் அசாத்தியமாகி விடலாம்.

ஆகா! அதோ கப்பல் மூழ்கத் தொடங்கி விட்டது. கொழுந்து விட்டு எரிந்த பாய்மரங்களுடனே அது கடலில் மூழ்கிய காட்சிதான் என்ன பயங்கர சௌந்தரியமாயிருந்தது?

அதை அவர்களால் அதிக நேரம் அநுபவிக்க முடியவில்லை.

இளவரசர் எதிர்பார்த்தது போலவே கடலில் ஒரு பெரிய கொந்தளிப்பு. வானளாவி மேலெழுந்த அலைகள்.

படகு என்னமோ அலைகளைச் சமாளித்துக் கொண்டது. ஆனால் எரிந்த கப்பல் மூழ்கியதும் சுற்றிலும் சூழ்ந்த இருளில் மற்றொரு கப்பல் இருந்த இடமே தெரியாமல் போயிற்று. திக்குத் திசை ஒன்றுமே தெரியவில்லை.

படகும் கப்பலும் ஒன்றையொன்று நெருங்கிக் கொண்டிருக்கின்றனவோ, அகன்று போய்க் கொண்டிருக்கின்றனவோ,— அதைத் தெரிந்து கொள்ளவும் வழியில்லை.

இரண்டிலும் அபாயம் உண்டு.

இருட்டில் கப்பல் இருக்குமிடம் தெரியாமல் அதை நெருங்கிச் சென்று மூட்டிக் கொண்டால், படகு தூள் தூளாகும்.

விலகிப் போய் விட்டால், கேட்பானேன்? நடுக்கடலில், காரிருளில் அந்தச் சின்னஞ் சிறு படகினால் என்ன செய்ய முடியும்?

சமுத்திர ராஜனே! உன் காதலி பொன்னி நதி தந்த அருமைச் செல்வனை நீதான் காப்பாற்ற வேண்டும்!

* * *

வாயுபகவானுடைய லீலைகள் வெகு வெகு அதிசயமானவை. அந்தப் பெரும் சுழிக் காற்று எவ்வளவு அவசரமாக வந்ததோ அவ்வளவு அவசரமாகவே போய் விட்டது. போகும் வழியிலெல்லாம் கடலைப் படாதபாடு படுத்தி விட்டுப் போய் விட்டது.

சுழிக்காற்றுப் போய் விட்டது சரிதான்; ஆனால் அதனால் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு இலேசில் அடங்கிவிடாது. ஒரு இரவும் ஒரு பகலும் நீடித்திருந்தாலும் இருக்கும். அந்தக் கொந்தளிப்பின் வேகம் நெடுந்தூரம் பிரயாணம் செய்யும். கோடிக் கரையின் விஸ்தாரமான மணற் பிரதேசத்தை யெல்லாம் கடல் ஏறி மூடிவிடும். நாகப்பட்டினத்தின் கடற்கரைமீது பேரலைகள் மோதி இடித்துத் தகர்க்கப் பார்க்கும். இன்னும்





அக் கொக்தளிப்பு காங்கேசன் துறை—திரிகோணமலை வரையில் பரவும். மாதோட்டத்தையும் இராமேசுவரத்தையும்கூட ஒரு கை பார்த்துவிடும்.

இளவரசர் முதலியோர் ஏறியிருந்த படகு அலைகளால் மொத்துண்டு மிதந்துகொண்டேயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் துடுப்பு வலிப்பதையும் நிறுத்திவிட்டார்கள். திக்கும் திசையும் தெரியாதபோது, கப்பல் எங்கே இருக்கிறதென்றும் தெரியாதபோது, துடுப்பு வலித்து ஆவது என்ன?

காற்று ஓய்ந்து விட்டது; மழை ஓய்ந்து விட்டது; இடியும் மின்னலும் நின்று விட்டன.

ஆனால் அலைகளின் ஆங்காரம் மட்டும் சிறிதளவும் குன்றவில்லை.

படகு அந்த அலைகளில் தத்தளித்துக் கொண்டேயிருந்தது.

சற்றும் எதிர்பாராத ஓர் அபாயம் அதை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதோ வந்துவிட்டது!

எரிந்த கப்பல் முழுகிற்றல்லவா? அப்போது முழுதும் எரியாத ஒரு பாய்மரம் அதிலிருந்து பிரிந்தது. கடலில் அது மிதந்து மிதந்து படகுக்கு அருகில் வந்தது. இருட்டின் காரணமாக வெகு சமீபத்தில் வரும் வரையில் அதை ஒருவரும் பார்க்கவில்லை.

பார்த்தவுடனே, "துடுப்பு வலியுங்கள்! துடுப்பு வலியுங்கள்!" என்று இளவரசர் கூவினார்.

அவர் கூவி வாய் மூடுவதற்குள் அந்தப் பாய்மரம் படகின் அடிப் பகுதியில் இடித்தது.

இடித்த வேகத்தில் படகு 'படார்' என்று பிளந்தது. முதலில் இரண்டு பகுதிகளாகப் பிளந்தது. பிறகு சிறிய சிறிய பலகைத் துண்டுகளாகப் பிளந்து சிதறியது.

"நண்பா! பயப்படாதே! இந்தப் படகைக் காட்டிலும் அந்தப் பாய்மரம் பத்திரமானது. தாவி அதைப் பற்றிக் கொள்!" என்றார் இளவரசர்.

நாத கீத பரம்பரை

ஏந்த ராஜா எந்தப் பட்டணத்துக்குப் போனாலும் போகாமலிருந்தாலும், சென்னைப் பட்டணத்தில் டிசம்பர் கடைசியில் நடக்கும் சங்கீத விழாக்கள் ஒரு குறைவு மில்லாமல் ஜாம் ஜாம் என்று நடைபெறுகின்றன. சங்கீத வித்வத் சபை மகாநாட்டை இவ்வருஷம் திறந்து வைப்பதாக இருந்த மைசூர் ராஜப் பிரமுகர் வரமுடியாமற் போயிற்று. அதனால் என்ன! அவருக்குப் பதிலாக மயிலாப்பூர் ரஸிகப் பிரமுகரான ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார் மகாநாட்டைத் திறந்து வைத்து ரஸிகத் தன்மையின் சிறப்புத் தோன்றப் பேசினார்.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் காயன கந்தர்வ சங்கீத சம்ராட் செம்பை வைத்திநாத பாகவதர் அவர்கள். பல வருஷங்களுக்கு முன்னாலேயே செம்பை பாகவதர் அவர்களுக்கு இந்தத் தலைமைப் பதவியை அளித்திருக்க வேண்டும் என்று கருதுவோர் உண்டு. அவ்வாறு கொடுப்பதற்கு மியூஸிக் அகாடமி நிர்வாகிகள் முன்வந்ததாகவும் ஆனால் பாகவதர் அவர்கள் "நான் பாடக் கற்றேனே தவிரப் பேசக் கற்கவில்லை" என்று சொல்லி மறுதளித்து விட்டதாகவும் கேள்வி. ஆனாலும் அவரைச் சும்மா விட்டுவிடவில்லை. "பதிலுக்கு ஆள் வைத்தாவது பேசிவிட வேண்டியது தான்!" என்று வற்புறுத்தி இவ்வாண்டில் செம்பை பாகவதரைத் தலைவராக்கினார்கள். பாகவதரின் தலைமைப் பிரசங்கத்தை அவருடைய மாப்பிள்ளை ஸ்ரீ செம்பை நாராயணன் மழலை மலையாள உச்சரிப்புடன் அழகாகப் படித்தார்.

தென்னாட்டில் தொன்று தொட்டு வாழையடி வாழையாக வளர்ந்து வரும் நாதகீத பரம்பரையைக் குறித்துப் பாகவதர் தம் தலைமை உரையில் நன்கு எடுத்துரைத்தார். ஆயிரம் வருஷங்களாக வளர்ந்து வந்த சங்கீதக் கலை தியாகராஜர்-தீக்ஷிதர் காலத்தில் மகோந்நதத்தை அடைந்தது பற்றிக் குறிப்பிட்டார். பழைய நாளில் பெரிய பிரபல வித்வான்கள் எப்படிச் சிறு பிள்ளைகளை உற்சாகப் படுத்தி முன்னேறச் செய்தார்கள் என்பது பற்றிப் பாகவதர் கூறியிருக்கும் பகுதி மிக ரசமானது :—

"பிரபலமடைந்த சங்கீத வித்வான்கள் புதிதாக முன்னுக்கு வரும் இளம் வித்வான்களை உற்சாகப் படுத்த வேண்டும். பழைய காலத்தில் மகா வித்வான்கள் இப்படிச் செய்த படியினால்தான் கர்நாடக சங்கீதக் கலை இவ்வளவு மேன்மை அடைந்தது. இளம் வித்வான்களின் கச்சேரிகளுக்குப் பெரிய வித்வான்கள் சௌகரியப்படும் போதெல்லாம் போக வேண்டும். சபையில் முன்னால் உட்கார்ந்து உற்சாகப்படுத்த வேண்டும். முகத்தைச் சுளுக்கி இளம் வித்வான்களை அதைரியப்படுத்தக் கூடாது. இது சம்பந்தமான ஒரு பழைய சம்பவம் எனக்கு ஞாபகம் வருகிறது. தற்சமயம் பிரபலமாயிருக்கும் ஒரு வயலின் வித்வான் அப்போதுதான் கச்சேரிகளில் பக்க வாத்தியம் வாசிக்க ஆரம்பித்தார். ஒரு கச்சேரி ஆரம்பித்து நடந்து கொண்டிருந்தபோது புகழ் பெற்ற மலைக்கோட்டை கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் விஜயம் செய்து மேடையின் அருகில் வந்து உட்கார்ந்தார். அவரைக் கண்டதும் இளம் பிடில் வித்வானுக்குக் கொஞ்சம் அதைரியம் ஏற்பட்டு வாசிக்கத் தயங்குவதைக் கவனித்தார். உடனே பாடகரைப் பார்த்து, 'ஏதேது! தம்பி **வயலின் வாத்தியத்தில் எனக்கு மேலே போய் விடுவார் போலிருக்கிறதே'** என்று சொன்னார். பிறகு அந்த இளம் வித்வான் உற்சாகமடைந்து ஜமாய்த்துத் தள்ளி விட்டார்.

இதுபோலவே பழைய காலத்தில் பிரபல பாடகர்கள் புதிதாக முன்னுக்கு வரும் வாத்தியக்காரர்களைத் தங்களுக்குப் பக்க வாத்தியமாக அமர்த்திக்கொண்டு உற்சாகப்படுத்தி முன்னுக்குக் கொண்டு வந்தார்கள். பிரபல மடைந்த பக்க வாத்தியக்காரர்கள் புதிதாக யாராவது இளம் வித்வான் பாட முன் வந்தால் தாங்கள் பெரிய கைகளாயிற்றே என்று பாராமல் அவர்களுக்கு வாசித்து உற்சாகப் படுத்தினார்கள். என்னுடைய தந்தையாகிய செம்பை அனந்த பாகவதர் அவர்களிடம் நான் சங்கீத வித்தையை அப்பியசித்து என் பதினைந்தாவது பிராயத்திலேயே கச்சேரி செய்யத் தொடங்கினேன். என்னுடைய பாட்டை ஒருநாள் தற்செயலாகக் கேட்க நேர்ந்த மலைக்கோட்டை கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களும் புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்தி அவர்களும் அப்போது மிகப் பிரசித்தி பெற்று விளங்கினார்கள். அவர்கள் எனக்கு அந்த இளம் பிராயத்திலேயே பக்கவாத்தியம் வாசிக்கத் தொடங்கி, பிறகு இருபத்தைந்து வருஷ காலம் விடாமல் வாசித்து வந்ததை நான் ஒரு நாளும் மறக்க முடியாது."

ரேடியோ, ஸினிமா ஆகிய நவீனங்களினால் சங்கீதத்தின் தரம் பாதிக்கப்படுவதைப் பற்றிப் பாகவதர் கூறியதும் மிக முக்கியமானது :—

"இக்காலத்தில் சங்கீதம் முன்னைக் காட்டிலும் அதிகமாகப் பரவி யிருக்கிறது. ஏராளமான ஜனங்கள் சங்கீதம் கேட்டு அநுபவித்துச் சந்தோஷப் படுகிறார்கள். கிராமபோன், ரேடியோ, ஸினிமா ஆகிய சாதனங்கள் சங்கீதம் விஸ்தாரமாகப் பரவுவதற்கு உதவியாயிருந்து வந்திருக்கின்றன. ஆனால் அதே சமயத்தில் சங்கீத வித்தையின் தரம் குறைவதற்கும் அவை ஓரளவு காரணமாயிருந்து வருகின்றன. எந்தச் சங்கீத பாணியிலும் சேராத கலப்பட ஸினிமா மெட்டுக்கள் அதிகமாகப் பரவிப் பாமர ஜனங்களைக் கவர்ந்து வருகின்றன. தெய்வீகமான கர்நாடக சங்கீதக் கலைக்கு இன்று இருந்து நாளை மறையும் ஸினிமா மெட்டுக்களினால் அபாயம் வந்துவிடப் போவதில்லை. என்றாலும், இந்தக் கலப்பட ஸினிமா மெட்டுக்கள் தான் நல்ல சங்கீதம் என்ற அபிப்பிராயம் ஜனங்களிடையில் வேரூன்ற இடம் கொடுக்கக் கூடாது. இது விஷயத்தில் அவ்வப்போது எச்சரிக்கை செய்து கொண்டிருப்பது சங்கீத வித்வத் சபை போன்ற ஸ்தாபனங்களின் கடமையாகும்......"

மேற்கண்டவாறு சங்கீத வித்வத் கோஷ்டியில் பிரபலமான ஒரு வித்வான் கூறினார் அல்லவா? ஏறக்குறைய இதே கருத்துக்களை இவ்வாண்டு தமிழிசை மகாநாட்டைத் திறந்துவைத்த யாழ்ப்பாணம் ஸ்ரீ எஸ். நடேசப் பிள்ளை வற்புறுத்தி வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. நமது நாதகீத பரம்பரையின் ஆதிமூலத்தைக் கண்டு பிடிப்பதற்கு ஸ்ரீ எஸ். நடேசப் பிள்ளை அவர்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திப் போய் விட்டார். அவர் கூறியதாவது :—

"தமிழர்களின் இசைக் கலையுடன் பூர்வீக எகிப்து நாட்டின் இசைக்கலை நெருங்கிய தொடர்புடையதாகத் தெரிகிறது. மூவாயிரம்

ஆண்டுகளுக்கு முன் தீப்ஸ் (Thebes) என்ற எகிப்திய நகரத்தில் இருந்த மன்னர்களின் கல்லறைகளில் யாழைப் போன்ற இசைக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ் விசைக்கருவிகள் பெரும்பாலும் ஏழு நரம்புகள் உடையன. பழைய தமிழ் இலக்கியங்களில் யாழ் வர்ணிக்கப்பட்டிருப்பது போல, எகிப்திய யாழ்களும் அழகிய கோலம் உடையனவாக அமைக்கப்பட்டுச் சிகப்புத் தோல் உறையால் போர்க்கப்பட்டிருந்தன. தீப்ஸ் மன்னர்களின் கல்லறைகளின் சுவர்களில் ஆண்களும் பெண்களும் யாழை மீட்டி வாசிக்கும் பாவனையில் தீட்டப்பட்ட பல படங்கள் காணப்படுகின்றன. யாழ் வாசிக்கும் ஒருவன் சிவப்புக் கரையுடைய ஓர் ஆடையை உடுத்திருப்பதாகப் படம் வரையப்பட்டிருக்கிறது. பருத்தி நூல் ஆடையில் வர்ணம் தோய்க்கும் கலை புராதன காலத்தில் தமிழ் நாட்டில்தான் இருந்தது. எகிப்திய மன்னர்கள் உடுத்திருந்த மெல்லிய பருத்தி நூல் ஆடைகள் தமிழகத்திலிருந்தே சென்றன என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எகிப்திய யாழ்களில் யானைத் தந்த வேலைப்பாடு காணப்படுகின்றது. பழைய காலத்தில் மேற்றிசை நாடுகளுக்கு யானைத் தந்தம் தமிழகத்தினின்று தான் கிடைத்தது. மேற்கூறிய படங்களில் யாழைத் தவிர, முழவு, குழல், கஞ்சதாளம் முதலிய இசைக் கருவிகளும் வரையப்பட்டிருக்கின்றன. 1823-ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட ஒரு மிருதங்கம் வார் கட்டியபடியே இருந்தது. இத்தகைய இசைக் கருவிகளின் படங்களைப் பார்க்கும் போது தமிழ் நாட்டின் இசைமரபே நினைவுக்கு வருகின்றது. இப் படங்களை விளக்குதற்கு வரையப்பட்டிருக்கும் எகிப்திய சித்திர எழுத்துக்கள் (Hieroglyphs) குருவிகளின் உருவத்தை இசைக்குக் குறியீடாகக் கொண்டுள்ளன. இதைக் காணும்போது தமிழில் முதற் சங்க காலத்தில் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படும் பெருங்குருகு என்ற இசைத் தமிழ் நூலின் பெயர்ப் பொருத்தம் விளங்குகிறது. தமிழர்களும் புராதன காலத்தில் சித்திர எழுத்துக்களை வழங்கியிருக்க வேண்டும்.

யூதேயா அஸ்ஸிரியா முதலிய நாடுகளின் இசைக் கலையும் எகிப்து நாட்டின் இசைக் கலையை ஒத்திருந்ததாகத் தெரிகிறது. எகிப்து நாட்டினின்றே கிரேக்கர்கள் இசைக் கலையைப் பெற்றதாக ஹெரோடட்டஸ் (Herodotus) என்ற தொல்லாசிரியர் கூறுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் இப்பொழுது காணப்படும் ஹார்ப் (Harp) என்ற இசைக் கருவி எகிப்து நாட்டில் வழங்கிய யாழின் அமைப்பையே அடிப்படையாகக் கொண்டது என்று சொல்லப்படுகிறது.

கி. மு. முதலாவது நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்டிராபோ (Strabo) என்ற கிரேக்க ஆசிரியர் தமது நாட்டுச் சங்கீதம் இந்தியாவுடன் தொடர்புற்றதாகக் கூறுகிறார்.

மிகப் பழைய காலத்தில் இந்திய நாட்டு மக்களுள் தமிழர்களே வெளி நாடுகளுடன் அதிகம் தொடர்புடையவர்களா யிருந்தார்கள். மேற்றிசை நாடுகளைத் தவிர, கீழ்த்திசை நாடுகளிலும் தமிழர்கள் வாணிபம் செய்தனர்; தங்கள் கலையையும் பரவச் செய்தனர். ஜாவா, பர்மா முதலிய நாடுகளிலும் யாழ் வழங்கி வந்தது.

இந்திய நாகரிகத்தின் சிறந்த அம்சங்களாகிய இசை, நாட்டியம், சிற்பம் என்ற கலைகள் இப்பொழுதும் பிராசீன முறையில் தென்னாட்டில் தான் விளங்குகின்றன. இவற்றை எக்காலத்திலும் தளரவிடாது போற்றி வளர்த்த பெருமை தமிழகத்துக்கு உரியதாகும்.''

இவ்வாறு பழந் தமிழ் நாடே கலைகளின் பிறப்பிடம் என்று சரித்திர ஆராய்ச்சி பூர்வமாக எடுத்துக் காட்டிய ஸ்ரீ எஸ். நடேசப் பிள்ளை அவர்கள், தற்சமயம் நமது சங்கீதக் கலைக்கு நேர்ந்திருக்கும் அபாயத்தைப் பற்றியும் சொல்லி யிருக்கிறார் :—

''சினிமா என்கிற நவீன நாடகத் துறையில் பல ஆண்டுகளாகத் தமிழ்ப் பாட்டுகள் தமிழ் மரபிற்கேற்ற இராகங்களில் பாடப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது தமிழ்ப் பாட்டுகளை இம்முறையாகப் பாடும் வழக்கமே அற்றுப்போகும் நிலையில் இருக்கிறது. தமிழ் மொழிக்குப் பொருந்தாத வகையில் ஹிந்துஸ்தானி மெட்டுகள் புகுத்தப்படுகின்றன. ஹிந்துஸ்தானி சங்கீதம் வட இந்திய மொழிகளுக்கு இசைவுடையது; தமிழ் மொழிக்கு அதிக இசைவு இல்லாதது. ஹிந்துஸ்தானி சங்கீதத்தை ஒரு சிறிதும் இழித்துக் கூறுவது எனது நோக்கமன்று. உயர்ந்த இந்துஸ்தானி சங்கீதத்தைக் கேட்டு நான் இன்புற்றிருக்கிறேன். ஆனால் தமிழ்ப் படங்களில் கேட்கும் ஹிந்துஸ்தானி சங்கீதம் இவ்வகையைச் சேர்ந்தது அன்று. ஹிந்துஸ்தானி இராகங்களில் தமிழுக்குப் பொருத்தமானவற்றை ஏக தேசத்தில் உபயோகப்படுத்துவது குறையாகாது. வேற்று நாடுகளில் இழிசனர் உவக்கும் கூக்குரல்களும் தமிழ்ப் படங்களில் சங்கீதமாகப் புகுத்தப்படுகின்றன. இதனால் தமிழ் மக்களின் சங்கீத உணர்ச்சி நாளடைவில் கெட்டுப்போகும் என்று கவலையுறுவதற் கிடமிருக்கின்றது. இதைத் திருத்தத் தமிழிசைச் சங்கம் முயற்சி எடுத்தால் நற்பயன் விளையும் என்பது நிச்சயம்.''

சங்கீத வித்வத் சபையின் தலைவரும், தமிழிசை மகாநாட்டைத் திறந்து வைத்த புலவரும் ஏறக்குறைய ஒரேவிதமான எச்சரிக்கையைச் செய்திருக்கிறார்கள். தமிழகத்தில் சங்கீதக் கலையை வளர்க்கும் ஸ்தாபனங்கள் அவர்கள் குறிப்பிட்ட பணியைச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

* * *

சென்னை மாநகரில் பலவகையான கர்ணகடூர தேர்தல் கோஷங்களுக்கிடையில் சங்கீத வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. மயிலாப்பூர் சுந்தரேஸ்வரர் ஹாலிலும் அரண்மனைக்காரன் தெரு கோகலே மண்டபத்திலும் எழும்பூர் மியூஸியம் தியேட்டரிலும் மாம்பலம் வாணி விலாசத்திலும் சங்கீத விழாக்கள் நடைபெறுகின்றன. பிரபலமடைந்த பெரிய வித்வான்களுடனே இளம் சங்கீத வித்வான்களும் தங்கள் வித்தைத் திறமையைக் காட்டி வருகிறார்கள். இவ்வருஷம் இந்த விழாக்களில் ஈடுபடும் சங்கீத ரஸிகர்களுக்கு நம்மை விட்டுச் சமீபத்தில் பிரிந்து சென்ற பிரபல பாடகியின் நினைவு தோன்றாமலிராது. ஸ்ரீமதி வஸந்தகோகிலம் தமது இனிய குரலின் இசைச் சிறப்பினால் எண்ணற்ற சங்கீத ரஸிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்திருந்தார். சாஹித்யத்தைத் தெளிவாகச் சொல்லி உணர்ச்சி பாவத்துடன் பாடும் சிறப்பினால் தமிழிசைப் பிரியர்களின் விசேஷ ஆதரவுக்கு உரியவரா யிருந்தார். சென்ற வருஷத்துச் சங்கீத விழாக்களில் அவருடைய கச்சேரிகளை ஆயிரக்கணக்கான ரஸிகர்கள் கேட்டார்கள். இவ்வருஷம் அவர் இல்லை யென்பது மனித வாழ்வின் அநித்தியத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. ஸ்ரீமதி வஸந்தகோகிலம் யாரும் எதிர்பாராத முறையில் நம்மைப் பிரிந்து சென்றார். எனினும், அவர் இசைத் தட்டுகளில் பாடியிருக்கும் இனிய பாடல்கள் நீடித்த காலம் அவருடைய இசையை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.


டிசம்பர்
23உ முதல்
சென்னை
கெயிட்டி & தங்கம்
மற்றும் முக்கிய நகரங்களில்
ஜூபிடரின்
கைதி
டைரக்ஷன்: S.பாலசந்தர்..ஸ்டுடியோ: சென்ட்ரல்.

சென்னை மோட்டார் வர்த்தகர்கள் சங்கத் தலைவர் ஸ்ரீ டி. எஸ். சந்தானம் 15-12-51ல் மேற்படி சங்கத்தின் 25வது வருஷ பொதுக் கூட்டத்தில் செய்த பிரசங்கத்தின் சாரம்

இந்தக் கூட்ட நடவடிக்கைகளை நாம் ஆரம்பிக்கு முன் காலஞ் சென்ற சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு வணக்கம் செலுத்துமாறு உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். பாரத நாட்டின் தந்தையான மகாத்மா காந்தியின் கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்தவர் சர்தார் பட்டேல் தான். ஐந்நூறுக்கு மேற்பட்ட சமஸ்தானங்களை இந்தியக் குடியரசுடன் ஐக்கியப்படுத்திய பெருமை சர்தார் பட்டேலுக்கே உரியது. தொழில் துறைகளை சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளும் விஷயமாக அவர் கொண்டிருந்த தெளிவான அபிப்பிராயத்துக்காகவும் நிதான புத்திக்காகவும் நாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1951 ஜூன் மாதம் 30-ந் தேதி முடிய வருடாந்தர அறிக்கையும் கணக்குகளும் உங்கள் முன்னிலையில் இப்போது சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன.

இந்த வருஷத்திலும் இறக்குமதி கோட்டா விஷயத்தில் உணவுக்கே அதிகப் பங்கு கொடுக்கும்படி நேரலாம். நாம் இறக்குமதி செய்யும் சாதனங்கள் உள்பட மற்றச் சாதனங்களின் இறக்குமதி குறையும்

இந்தச் சங்கடங்கள் போதாதென்று, பஸ் போக்குவரத்து நிர்வாக விஷயமாக சென்னை சர்க்காரின் கொள்கை நிர்ணயமில்லாமல் இருந்து வருகிறது. நிச்சயமற்ற இந் நிலையில் எதிர்காலத் திட்டம் எதையும் தயாரிப்பது முடியாத காரியம். எனவே நமது தற்போதைய நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.



மோட்டார் சம்பந்தமான வர்த்தகர்கள் சர்க்காரிடமிருந்து எக்காலத்திலும் பண உதவியை நாடியதில்லை. அப்படியிருந்தும் வருஷா வருஷம் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது அவர்கள் நமது பைகளைத்தான் சுரண்டுகிறார்கள்!

இந்தியாவில் மோட்டார் வர்த்தகம் ஒரு கைத்தொழில் அல்ல. போக்கு வரத்து சாதனங்களின் மூலம் அது உற்பத்தி பெருகுவதற்கு உதவி புரிகிறது. எனவே மோட்டார் வண்டிகளின் விலை அதிகமானால், போக்குவரத்துச் செலவு அதிகமாகும். போக்குவரத்துச் செலவு அதிகமாவது உற்பத்திச் செலவை அதிகப்படுத்தும்.

இந்தியாவில் இன்னும் மோட்டார்கள் உற்பத்தியாகாததால், மோட்டார் வர்த்தகர்கள் இறக்குமதியாகும் மோட்டார்களைத்தான் பலவிடங்களுக்கும் அனுப்புகிறார்கள்.

எனவே மோட்டார் வரிகள் செலுத்துவோருக்கு, முக்கியமாக 22 வீட்டுகளுக்கும் அதற்கு மேலும் உள்ள மோட்டார்களுக்கு வரி செலுத்துவோருக்குப் பரிகாரம் அளிக்க வேண்டும்.

இரண்டாவதாக, மோட்டார் வண்டிகளைச் சுக சாதனங்கள் என்று கருதி விற்பனை வரி விதிப்பது கூடாது.

மோட்டார் வியாபாரிகள் அவர்களுடைய வண்டிகளில் மோட்டார் பாகங்களையும் மோட்டார் சம்பந்தமான இதர சாமான்களையும் பம்பாயிலிருந்து சென்னைக்கு அனுப்ப பம்பாய், சென்னை சர்க்கார்கள் அனுமதி அளிக்க வேண்டும்.

விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலியவற்றுள் எதுவாயினும் அதன் அபிவிருத்திக்கு ரஸ்தாக்கள் நல்ல நிலைமையில் இருக்க வேண்டும்.

ரீனமான, சிறந்த ரஸ்தாக்கள் போட முடியாமல் இருப்பதற்குப் பண வசதியின்மையே காரணமாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க பஸ் சொந்தக்காரர்களுக்கு பஸ் போக்குவரத்து நிர்வாகத்தில் ஏகபோக உரிமை அளிக்க வேண்டும். சர்க்கார் அவர்களுக்குக் கடன் கொடுத்து அவர்களுடைய செலவிலேயே ரஸ்தா போட்டுக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

ரஸ்தாக்கள் சிறந்தவையாக இருக்குமாயின் மோட்டார் வண்டிகள், அவற்றின் பாகங்கள், எண்ணெய் முதலியவைகளுக்கு ஏற்படும் வீண் சேதத்தைத் தவிர்க்கலாம். ரஸ்தாக்கள் சிறந்தவையாக இருந்தால் மோட்டார்களின் தொகை அதிகமாகும். அதனால் சர்க்காருக்கு வரிகள் மூலம் அதிக வருமானமும் கிடைக்கும்.

1,43,000 மைல்களுக்கு மேல் உள்ள தபால் மார்க்கத்தில், பாதிக்கு மேல் 'ரன்னர்கள்' மூலம் தபால்கள் அனுப்பப்படுகின்றன. நல்ல ரஸ்தாக்கள் இருந்து விட்டால் ரன்னர்களுக்குப் பதிலாக மோட்டார்களை உபயோகிப்பதன் மூலம் தபால் போக்கு வரத்தை இன்னும் துரிதப்படுத்தலாம்.

போக்குவரத்து ஐக்ய ஆலோசனை சங்கத்தார் மிகுந்த செலவில் ஒரு Tabulating Machine வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சகலவிதமான மோட்டார் வண்டிகளையும் பரிசீலனை செய்வதற்கு அது உபயோகமாக இருக்கும். இந்தியாவில் மொத்தம் சுமார் 3 லட்சம் மோட்டார்கள் இருக்கின்றன. சென்னையில் மாத்திரம் 44,000 மோட்டார்கள் இருக்கின்றன. எனவே இங்கு அத்தகைய மெஷின் இருக்க வேண்டியது அவசியம்.

தங்கள் தங்கள் ஜில்லாவில் ரிஜிஸ்தரான மோட்டார்களின் ஜாப்தாவை அந்தந்த மாதம் 10-ந் தேதிக்குள் அனுப்பும்படி 24 ஜில்லா போலீஸ் அதிகாரிகளுக்கும் உத்தரவிட போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக சென்னை நகர பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொள்ளுவோம். சென்னை நகரில் எவ்வளவோ அபிவிருத்திகள் செய்ய வேண்டியிருக்கிறது.

பொது ஜனங்கள் பஸ் நிற்குமிடங்களில் மணிக்கணக்காக நிற்கும் கஷ்டத்துக்குப் பரிகாரம் ஏற்பட்டாலன்றி, பஸ் போக்கு வரத்து திருப்திகரமாக இருப்பதாய்க் கூற முடியாது. சர்க்கார் நிதி நிலைமை திருப்திகரமாக இராவிடில், பஸ் போக்குவரத்தை நடத்தும் தனி நபர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கலாம்.

வியாபார ஸ்தலங்கள், கல்வி ஸ்தாபனங்கள், சர்க்கார் இலாகாக்கள் முதலியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மகாநாட்டைக் கூட்டும்படி நான் கனம் போக்குவரத்து மந்திரியைக் கேட்டுக் கொள்கிறேன். எனது பிரசங்கத்தை முடிக்குமுன் அடுத்த வருஷம் நடைபெறவிருக்கும் இச் சங்கத்தின் வெள்ளி ஜூபிலி விழாவில் ஒத்துழைக்கும்படி இச் சங்க அங்கத்தினர்களை யெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

பிறந்த வீடு

புஷ்பத்துறை சுப்ரமண்யன்...

ராகவன் சொல்கிறான்:

வழக்கமாக எட்டு மணிக்கு எழுந்திருக்கும் நான், அன்று ஆறு மணிக்கே எழுந்துவிட்டேன். முதல் இரவு முழுதும் தூக்கம் பிடித்தால்தானே? அன்று நடக்கப்போகும் ஒரு இன்ப நிகழ்ச்சியை எண்ணி, என் உள்ளத்திலே ஒரே ஆனந்தம் அலை மோதியது.

ஒன்பதரைக்கு வரும் ரெயிலை எதிர்பார்த்து ஏழு மணிக்கு ஸ்டேஷனை அடைந்தேன். அங்கே இருந்த கடிகாரத்தில் முட்கள் ஆமை வேகத்தில் நகர்ந்ததைக் கண்டதும் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

எனக்கு நிலை கொள்ளவில்லை. ஓர் வித இன்ப மயக்கம். நினைப்பதே நடந்துவிட்டால் எத்தனை மகிழ்ச்சி! அதற்கு நேர்மாறானால், நினைக்கவே மயிர்க் கூச்செறிகிறது. நல்ல வேளை! எனக்கு உயிர் வந்தது. வண்டி வந்து நின்றதும் சொட்டைத் தலை உடைய ஒருவரும் அவர் பெண்ணும் இறங்கினார்கள். அவர்களை, மிக மிக முக்கியமாக அந்தப் பெண்ணைக் கண்டதும் என் மகிழ்ச்சிக்குக் கங்கு கரை தென்படவே யில்லை. என் உள்ளத்தரசி, உவமையே இல்லாத என் ராதா வந்து விட்டாள். இனிமேல் எனக்கென்ன குறைவு! என்னையு மறியாமல், 'போர்ட்டர்' உதவியையும் நாடாமல், அவர்கள் கொணர்ந்த சாமான்கள் அத்தனையையும் கீழே எடுத்து வைத்துத் தயாராகக் காத்திருந்த வண்டியிலே ஏற்றினேன்.

நடுவே என் இருதயராணியின் பூரண சந்திர முகத்தைக் காணத் திரும்பினேன். எதிர்பார்த்ததற்கு மாறாக எனக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அவள் முகத்தில் சயாடவில்லை. ஏக்கம் கவிழ்ந்திருந்தது.

நாலு நாட்கள் தங்கிவிட்டு என் மாமனார் ஊருக்குத் திரும்பிச் சென்றார். ராதையின் முகத்திலும் சரி, நடத்தையிலும் சரி ஒரு சிறு மாறுதல்கூட இல்லை. சற்று அவள் என்னோடு சிரித்துப் பேசினாலென்ன என்று என் பேதை யுள்ளம் பிரலாபித்தது.

நெஞ்சத்திலே சித்திரவதை தாங்க முடியவில்லை. முடிவாக அவளைக் கேட்டேன், "ராதா! நீ ஏன் கலகலப்பாக இல்லை? என்மீது ஏதாவது கோபமா? வந்ததிலிருந்து என்னவோபோல் இருக்கிறாயே!" என்று.

என் கேள்விக்குப் பதிலே இல்லை! தூண்டித் தூண்டிக் கேட்ட பின்னரே, அழுத்தமாக அவள் குரல் எழுந்தது.

"உங்கள் காரியம் நிறைவேறி விட்டது. இல்லையா?" என்றாள்.

"என் காரியமா? என்ன அது?"

"நான் உடனே புறப்பட்டு வரவேண்டும் என்று நீங்கள் போட்ட உத்தரவு!"

"என்னிடம் புறப்பட்டு வா என்று நான் எழுதியது தவறா? என்னோடு வந்திருக்க உனக்குச் சந்தோஷமில்லையா?"

"அது இருக்கட்டும். நான் பிறந்தகம் போய் ஒரு மாதம்கூட ஆகவில்லை. அதற்குள்ளே என்னவாம் அவசரம்?"

"என் மனம் உனக்குத் தெரியாதா? நீ இல்லாத ஒவ்வொரு நிமிஷமும்......"

"போதுமே, உங்கள் நாடகம்! சிரிக்கப் போகிறார்கள்?"

"இதோ பார், ராதா! 'இன்னும் ஒரு மாதம் நான் இருந்துவிட்டுத்தான் வரப் போகிறேன்' என்று நீ எழுதி யிருந்தால் நான் ஆட்சேபித்திருக்க மாட்டேன். உன்னைக் கட்டாயப்படுத்தியும் இருக்க மாட்டேன். இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. உன்னை இன்றே அழைத்துக் கொண்டு போய் அங்கே விட்டு வருகிறேன். அப்புறம்......"

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நான் இங்கே வந்துதானே தொலைய வேண்டும்!"

'தொலைய வேண்டும்' என்ற வார்த்தைகள் என்னை எங்கேயோ பாதாளத்தில் தள்ளியது போல் புண்படுத்தியது. என் இனியாளா இப்படிப் பேசுவது? என்ளத்தனைகூட என் மீது பிரியம் கிடையாதா அவளுக்கு? கற்பனைகூட அந்த நிலைமையைத் தொடமுடியவில்லை. அவள்மீது நான் வைத்துள்ள பரிசுத்த அன்புக்குப் பதில் அவ்வளவு அலட்சியமா? அவள் மனம் நோக நான் செய்த தவறு......எனக்குத் தெரியவில்லை.

எண்ண ஓட்டம் ஓயாமல் சுழன்றது. நான் செய்த குற்றம் இதுதான். தாய்ப் பறவையிடமிருந்து குஞ்சைப் பிரித்து, பறித்தெடுத்தோடி வந்துவிட்டேன்! அதற்குப் பரிகாரம்?......

தெய்வச் செயலாக ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. என் மைத்துனன் கல்யாணத்தை முன்னிட்டு எங்களை 'அன்போடு' அழைத்திருந்தார் மாமனார். கல்யாணத்திற்குப்

போயிருந்தோம். அந்தக் கல்யாணக் கோலாகலத்தில் ராதா வண்ணத்திப் பூச்சிபோலப் பலவித வர்ணத்தோடும் ஆனந்த பரவசத்தோடும் ஆடிப்பாடி மகிழ்ந்தாள். ஆனால் என் மனம் எத்தகைய வேதனையை யனுபவித்தது என்பது சொல்லி முடியாது.

ராதா சொல்கிறாள் :

அண்ணாவின் கல்யாணம் முடிந்த மறு நாளே என் கணவர் என்னைக் கையோடு அழைத்துச் செல்வாரோ என்று பயந்தேன். பிறந்த வீட்டைவிட்டுப் போக மனசு மிகவும் கஷ்டப்பட்டது. நல்ல காலமாக 'ஊருக்குப் போனதும் கடிதம் எழுதுகிறேன்' என்று சொல்லிவிட்டு அவர் மட்டும் போனார். அதனால் எனக்கு எவ்வளவோ சமாதானமாகவும் விச்ராந்தியாகவும் இருந்தது. பிறந்த வீட்டிலே யதேச்சையாகவும் கவலையில்லாமலும் இருக்கலாமல்லவா?

எவ்வளவோ சந்தோஷமாக இருந்த போதிலும் மனதிலே மட்டும் பயத்திற்குப் பஞ்சமில்லை. 'உடனே புறப்பட்டு வா' என்று உத்தரவு பிறந்தால்...? தினந்தோறும் தபால்காரன் வந்தால் மனசு 'திக் திக்' என்று அடித்துக் கொள்ளும். அங்கே போவதென்றால் ஏனோ தெரியவில்லை, எனக்கு நரகத்திற்குப் போவது போலிருந்தது.

என் கணவரிடமிருந்து ஊருக்குப் போனதிலிருந்து ஒரு கடிதம் கூட வரவில்லையே என்று தந்தையும் தாயும் கவலைப்பட்டார்கள். கடிதம் எழுதினார் அப்பா. பதில் கிடையாது! 'என்ன நெஞ்சழுத்தம்?' என்று அவர்மேல் எனக்குக் கோபம் கோபமாக வந்தது. கடைசியாக அம்மா என் மீதுதான் பழி சுமத்தினாள். நான்தான் அவரிடம் சரியாக நடந்து கொள்ளாமல் கோபத்தை மூட்டி விட்டேன் என்பது என் மீது அவள் சாட்டிய குற்றம். மேலும் நான் அவருக்கு 'தவறு ஏதாவது செய்திருந்தால் பிழையைப் பொறுத்து, தயவு செய்து மன்னித்து, அடியாளை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்கிற மனப்பான்மையில் கடிதம் எழுதிப் பதிலுக்கு ஏங்கி நிற்க வேண்டுமாம். எதற்காகவோ தெரியவில்லை; நான்தான் கேட்கிறேன்.


அம்மாவுக்கு நல்ல சூடு கொடுத்தேன்; "அவருக்கு என்ன அம்மா அவ்வளவு ஆணவம்! புருஷனாகப் பிறந்துவிட்டால் என்ன வேண்டுமானாலும் செய்யலாமோ? கடிதம் எழுதுகிறேன் என்று உறுதியாகச் சொல்லி விட்டு, பெண்டாட்டி ஒருத்தி இருக்கிறாள் என்கிற எண்ணமில்லாமலே ஊர் சுற்றித் திரியும் அவருக்கு நான் பணிய வேண்டும். அழகுதான்!"-இதைக் கேட்டதும் அம்மா அயர்ந்து போய்விட்டாள்!

பெண்மனம் எப்போது தான் நிலையாக நின்றது? வெட்கத்தை விட்டுக் கௌரவத்தையும் கருதாமல் கணவருக்குக் கடிதம் எழுதினேன். அதற்கும் உதாசீனமா? அவர் வந்து என்னிடம் மன்னிப்புக் கேட்டால்தான் என் மனத்துக்குச் சமாதானமாகும்போலிருந்தது. ஊர் சுற்றுகிற காளை பட்டிக்கு வந்து தானே ஆகவேண்டும்? பார்த்துக் கொள்வோம்.

வீட்டிலே நாளுக்கு நாள் நிம்மதி குறைந்தே வந்தது. நான் தடுத்தும் நேரில் மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டு வரலாம் என்று அப்பா மதுரைக்குப் போனார். அவர் இருப்பிடமே தெரியவில்லை, உறவினர்களுக்கும் கூட! அப்பா எங்கெங்கேயோ அலைந்தார். யார் யாருக்கோ எழுதினார். எதிலும் பலனில்லை. அம்மா மனம் குன்றினாள்.

அதனால் எனக்கு எந்தவிதக் குறையும் வருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் சில நாளாவது உபத்திரவமில்லாமல் இருக்கலாமல்லவா? 'அவருக்கே சிரத்தையும் சிந்தனையும் இருந்தால் அழைத்துப் போகட்டும். இல்லாவிட்டால் பிறந்த வீட்டிலேயே குஷியாக இருக்கலாம்' என்கிற எண்ணம் ஏற்பட்டது.

ஒருநாள் இருள் மண்டும் வேளையில் எங்கள் வீட்டுக் காம்பவுண்டு ஓரமாக மெள்ள அசைந்தாடிக் கொண்டு ஒரு மாட்டு வண்டி வந்து நின்றது. மாப்பிள்ளை வந்துவிட்டார் என்கிற மகிழ்ச்சியோடு என் பெற்றோர் வாசற்பக்கம் விரைந்தார்கள். எனக்கு மட்டும் வஞ்சம்



தீர்க்கும் நோக்கம் தானிருந்தது. 'வரட்டும்; ஆசை தீர அந்தத் திமிரை அடக்கி நன்றாகத் தண்டித்து விடு' என்று தண்டோரா போட்டது என் உள்ளம். அவரைத் தண்டிக்கும் சந்தர்ப்பம் வெகு சமீபத்தில் இருப்பதை எண்ணி எத்தனையோ ஆறுதல் அடைந்தது!

முகவாட்டத்தோடு என் பெற்றோர்கள் திரும்பினார்கள். 'மாப்பிள்ளை வரவில்லை' என்று அவர்களுடைய சோகமுகங்கள் சொல்லின. "இதற்காக ஏன் வருத்தப்படுகிறீர்கள்? தானே வருகிறார்" என்றேன். "உனக்கு இன்னும் உலகம் தெரியவில்லையே" என்று அவர்கள் அங்கலாய்த்தார்கள். அது பைத்தியக்காரத்தனம் என்றே எனக்குப் பட்டது.

வண்டியில் யார் வந்திருக்கிறார்கள் என்று பார்க்க வாசலுக்கு ஓடினேன். என் பார்வையில், வண்டியிலிருந்து இறங்கிய இளம் தம்பதிகள் உல்லாசத்தோடு பக்கத்து வீட்டிற்குள் நுழைவது தெரிந்தது. பிறர் பார்த்து விடுவார்களோ என்கிற கவலை இன்றி அவர்கள் கரங்கள் கோத்துக் கொம்மாள மடித்தன. அவர்கள் முகத்தில் ஆனந்த விலாசம் தாண்டவ மாடிற்று.

அன்றிலிருந்து பக்கத்து வீடே கிடுகிடுத்தது. எப்போது பார்த்தாலும் சிரிப்பும் அட்டஹாஸமுந்தான். அவர்கள் சதா கூடிக் கூடிப் பேசுவதும் கொஞ்சிக் கொஞ்சி விளையாடுவதும் என் மனத்தை மிகவும் பாதித்தன. என் அருகே என் கணவர் இருந்தால் அதை ஏன் கவனிக்கப் போகிறேன்? கவனிக்கத்தான் எனக்கு நேரம் ஏது? அவர்களுடைய லீலைகள் ஒரு விதத்தில் எனக்குப் பொறாமையையும் என் மீதே வெறுப்பையும் ஊட்டி விட்டன. என் உள்ளம் தனிமையில் வருந்தியது. துணையைத் தேடித் துடித்தது. ஏன் இந்த மாறுதல்? எனக்கே புரியவில்லை!

ஒரு நாள் எங்கள் வீட்டுத் தோட்டத்திற்குத் தங்கள் வீட்டு நாய் வந்து விட்டதென்று தேடிக் கொண்டு அந்தப் பெண் வந்தாள். அவள் பெயரை விசாரித்தேன். 'ரூபா' என்றாள். நாளடைவிலே எங்களுக்குள் நெருங்கிய நட்பு மூண்டு விட்டது. மனம் விட்டு வாய்விட்டு அரட்டை அடித்தோம்.

அன்று வெள்ளிக்கிழமையோ சனிக்கிழமையோ, சரியாக ஞாபகமில்லை. ஒடுங்கிய கண்களோடும் உற்சாகமின்றி வாடிய முகத்தோடும் சோர்ந்த நடையோடும் வந்தாள் ரூபா. "ஏன் உடம்பு சரியாக யில்லையா?" என்று விசாரித்தேன்.

வெகுளித்தனத்தோடு, "கணவனைப் பிரிவதென்றால் வருத்தம் இருக்காதா?" என்றாள் அவள்.

"அவர் எங்கே போகிறார்?"

"பம்பாய்க்கு. லீவு முடிந்து விட்டது. உத்தியோகத்தில் சேரவேண்டும் அல்லவா?"

"அதிலே என்ன வருத்தம்?"

"என்ன அப்படிக் கேட்கிறாய்? பிறந்த வீட்டிலே கொஞ்ச காலம் தனியாக இருப்பதென்றால் கூட என் தேகம் பொருந்துவதில்லை. இப்போது அதுதான் பாதிக்கிறது. நானும் கூட வருவேன் என்று பிடிவாதம் பிடித்தேன். ஆனால் எளிதிலே எங்கே வீடு கிடைக்கிறது! 'வீடு கிடைத்ததும் அழைத்துப் போகிறேன்' என்றார் என் கணவர். 'அதுவரையில் தனிமையாக இருக்க என்னால் முடியாது. இப்போது நீங்கள் தங்கும் இடத்திலேயே இருக்கிறேனே' என்றேன்.

'நீ என்ன அசடா?......' என்றார் அவர்.

'தனியாக இருந்தால்தான் சமர்த்தா?'



திருச்சி ஜில்லா மக்கள் சபைத் தொகுதிக்கு (லால்குடி, மணச்சநல்லூர், முசிரி, ஸ்ரீரங்கம், திருச்சி வடக்கு) காங்கிரஸ் அபேட்சகராக நிற்கும் ஸ்ரீ கா. ஹாலாஸ்யம் பி.ஏ., பி.எல். முப்பது ஆண்டுகளாகத் தேசத் தொண்டு ஆற்றி வருகிறார். சென்னை சர்வகலாசாலை ஸெனேட் அங்கத்தினராகவும் அகாடமிக் கௌன்சில் அங்கத்தினராகவும் இருந்து நீண்ட காலமாகச் சேவை செய்து வருகிறார்.

ஸ்ரீ கா. ஹாலாஸ்யம் 1936-ம் ஆண்டு ராஜாஜி மந்திரி சபைக் காலத்தில் சென்னைச் சட்டசபை அங்கத்தினராக இருந்து பணியாற்றியவர். அவர் திருச்சி ஜில்லா போர்டு அங்கத்தினராகவும், ஜில்லா காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் இருந்து அருந்தொண்டு புரிந்தவர்.

ஸ்ரீ கா. ஹாலாஸ்யம் சிறந்த தமிழ் அன்பர். தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் மிக்க ஆற்றல் படைத்தவர். மகாத்மா காந்தி, சர்தார் பட்டேல், சரோஜினி தேவி முதலியவர்கள் தமிழகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அவர்களுடைய பிரசங்கங்களை அழகிய சக்தி வாய்ந்த தமிழில் மொழி பெயர்த்துச் சேவை புரிந்தவர். 1923-ம் ஆண்டிலிருந்து 1942 வரையில் காங்கிரஸ் ஆரம்பித்த ஒவ்வொரு போராட்டத்திலும் ஈடுபட்டுச் சிறை சென்றிருக்கிறார்.

ஸ்ரீ ஹாலாஸ்யம் மகாத்மாஜி ஆரம்பித்த கதர் இயக்கம், ஹிந்திப் பிரசாரம், தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம், விவசாய தொழியர்களுக்குத் தொண்டு, முதியோர் கல்வி முதலிய நிர்மாண வேலைகள் எல்லாவற்றிலும் தீவிர பங்கெடுத்துக் கொண்டு தொண்டாற்றியவர். சென்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீ கா. ஹாலாஸ்யத்தைக் காங்கிரஸ் அபேட்சகராகப் பொறுக்கவில்லை. ஆயினும் அவர் காங்கிரஸில் இருந்து உற்சாகம் குன்றாமல் பணியாற்றி வந்தார்.

இத்தகைய உறுதிகொண்ட தேசபக்த சீலரை, திறமை வாய்ந்த தொண்டரை, திருச்சி பொதுத் தொகுதிக்கு மக்கள் சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கும்படி திருச்சி ஜில்லா தேசபக்தர்கள் ஒருமுகமாகக் கோருகிறார்கள்.

'இதோ பார். அவசியத்தின் பொருட்டுத் தானே செல்கிறேன்? உன்னைப் பிரிய எனக்கு மட்டும் மனம் வருமா? பம்பாயிலே எத்தனை பேர்கள் — கல்யாணமானவர்கள், பிரம்மசாரிகளாக வாழ வேண்டியிருக்கிறது, தெரியுமா? அதனால் அவர்களுக்குத் தங்கள் தங்கள் மனைவிமார்மீது பிரியமில்லை என்று சொல்ல முடியுமா?''

'பிரியமில்லை என்றுதான் சொல்வேன்.'

'எங்கள் காரியாலயத்தில் இந்தப் பக்கத்து மனிதர் ஒருவர் இருக்கிறார். அவர் தம் மனைவியைப் பார்த்து இரண்டு வருஷத்திற்கு மேலாகிறது. இதற்காக அவர்களுக்குள் மனஸ்தாபம் என்று சொல்வது மடத்தனமல்லவா?'

இம்மாதிரித் தன் கணவர் கூறினார் என்று அவள் மேலே மேலே சொல்லிக் கொண்டே போனாள்.

மேலே குறிப்பிட்ட வார்த்தைக்குமேல் என் காதிலே எதுவும் விழவில்லை. ரூபா சொன்னது என் மனத்தை மிகவும் உருக்கிவிட்டது. கணவனிடம் அன்பு இன்றி வாழும் நாமும் பெண் ஜென்மம்தானா என்று என் மீதே சலிப்படைந்தேன். அவர் திரும்பி வருவாரா? இழந்த பொருளை மீண்டும் பெறுவேனா என்ற ஏக்கம் ஏற்பட்டது.

ரூபா சொன்னதில் ஒரு வார்த்தை என் கணவரை என்னிடம் சேர்ப்பிக்க உதவும் போலிருந்தது. அவள் புருஷன் வேலை பார்க்கும் ஆபீஸில் ஒருவர்.........அவர் என் கணவரோ? என்ன பைத்தியக்காரத்தனம்! அவரைப்போல இன்னும் எவ்வளவு பேரோ? இருந்த போதிலும் தந்தையிடம் சமாசாரத்தைத் தெரிவித்தேன். அவரைப் பற்றிய முழு விவரமும் அறிந்து எழுத வேண்டுமென்று ரூபாவைத் தன் கணவருக்கு எழுதுமாறு வேண்டினேன்.

அந்தக் கடிதத்திற்குப் பதில் வந்தது. என்ன ஆச்சரியம்! என் கணவர்தான் அவர்!

ஊருக்கு வரவேண்டும் என்று என் கணவருக்குத் தந்தி கொடுத்தார் அப்பா. என் தவறை மறந்து மன்னிக்க வேண்டுமென்று கடிதம் எழுதினேன். ஆனால் அவர் வருவார் என்ற நம்பிக்கை என்ன காரணமோ தெரியவில்லை, எனக்கு ஏற்படவில்லை.

அவரிடமிருந்து பதில் வரவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக அவரே வந்துவிட்டார்!

அவரை வரவேற்க ஆவலோடு வாசலுக்கு ஓடினேன். மேனி கறுத்து, உடம்பு வாடி, ஒடுங்கி அவர் இருந்ததைப் பார்த்ததும் எனக்கு அழுகை அழுகையாக வந்தது. எப்படியானால் என்ன? என் அன்பர் வந்துவிட்டார். பிறந்த வீடு பூரித்தது. அவர் முகத்தையே உற்று நோக்கினேன், என் மகிழ்ச்சி பிரதிபலிக்கிறதா என்று பார்க்க! அன்றொரு நாள் என்னை யழைத்துப் போக ஸ்டேஷனுக்கு வந்த சமயம் அவர் முகத்திலே தாண்டவமாடிய அந்த மலர்ச்சியையும் கோலாகலத்தையும் இப்போது காணவில்லை.

Fordson

Major TRACTOR

கிரோசின் அல்லது
டீஸல் இன்ஜின்

போர்ட்ஸனில் ஏற்றி அமைத்திருக்கும் கருவிகள்
ஹைட்ராலிக் பவரில் இயங்குகிறது


போர்ட்ஸன்
விவசாயமே
பயன் தரும்!

குறைவு
என்ஜின் செலவில்

குறைவு
ஓட்டும் செலவில்

குறைவு
பராமரிப்பு செலவில்

குறைவு
ரிப்பேர்,
சர்வீஸ் சார்ஜுகளில்




ஆமதாபாத்
காமா மோட்டார்ஸ் லிமிடெட்
லால் தர்வாஜா
பம்பாய்
யுனைட்டட் மோட்டார்ஸ் (இந்தியா)
லிமிடெட், 89, ஹியூஸ் ரோடு
கல்கத்தா, லக்னோ, பாட்னா
கமர்ஷியல் கார்ப்பொரேஷன்
கட்ச் மாந்த்வி
கல்யாண்ஜி தாவ்ஜி & கம்பெனி
கல்யாண் பவன்
டெல்லி
ராம்நகர்
திப்ருகா
ஜேம்ஸ் வாரன் & கோ., லிமிடெட்

THE SYMBOL OF SERVICE

இந்தூர்
லால்ஜி பிரதர்ஸ் (இந்தூர்) லிட்.
ஜோத்பூர்
லால்ஜி பிரதர்ஸ்
மதராஸ், ஹைதராபாத், பெங்களூர்
சிம்ஸன் & கோ., லிமிடெட்
202-203, மவுண்ட்ரோடு, மதராஸ்
நாகபூர்
& கோ., லிமிடெட்
ராஜ்கோட்
வெஸ்டர்ன் மோட்டார்ஸ் லிட்.
பட்னா
பாரத் இம்பிளிமெண்ட்ஸ்
& மெஷினரி கம்பெனி

உங்கள் அருகாமையிலுள்ள போர்ட்ஸன் டீலரைக் கேளுங்கள்
அல்லது கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுங்கள் :
போர்டு மோட்டார் கம்பெனி ஆப் இந்தியா லிட்., பம்பாய்


மணத்திலும், குணத்திலும்
எப்பொழுதும் முன்னணியில் நிற்பவை..
கோபுரம் மார்க் பன்னீர்
காஜிப்பூர் பன்னீர்
சந்தனாதித் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்
பொன்னாங்கண்ணி தைலம்
குளிர் தாமரை தைலம்
ஜெகன்மோகனா பத்தி
கமகம பத்தி
நிர் 1. திக் அம்பர் பத்தி
ஒயிட்ரோஸ் ஹேர் ஆயில்
சந்தனப் பவுடர்
ஆகஜா
ராஜா பற்பொடி
சந்தன வில்லை
K.T.R
வாசனைத் திரவிய
உற்பத்திசாலை
விஜயபுரம், திருவாரூர், தெ. இந்தியா



விஷப் பரீட்சை

ஆர். ராஜகோபாலன்

புஜங்கராவுடன் எனக்குச் ஸ்நேகம் எப்படி ஆரம்பித்தது என்று ஞாபகம் இல்லை. ஏன் ஸ்நேகம் ஏற்பட்டது என்று சில சமயம் நான் வருந்துவதுண்டு. ஆனாலும் பொழுது போக்கு என்ற ஒரு காரணத்தை உத்தேசித்து, என் மனத்தில் அவ்வப்போது ஏற்படும் இந்தப் பிரச்னையை உதறித் தள்ளி விடுவேன்.

அப்படித்தான் அன்றும் அவர் ஒரு கதையைச் சொன்னார். அவர் சொல்வதைக் கற்பனை யென்றோ, உண்மைச் சம்பவமென்றோ திட்டமாகச் சொல்ல முடியாது. ஏன், அவருடன் நீண்ட நாள் ஸ்நேகம் இருக்க வேண்டுமென்றால், அவர் சொல்லுவதை யெல்லாம் கேட்க வேண்டுமே தவிர, அதன் உள் அந்தரங்கத்தை அலசிப் பார்க்கக் கூடாது. அவர் சொன்ன கதையை நீங்களும் கேளுங்கள்.

*   *   *

இயற்கையின் அழகை அனுபவிக்க வேண்டுமென்றால், மலைப் பிரதேசங்களுக்குத்தான் செல்ல வேண்டும். அதிலும் பாலையூரின் விசேஷம் தனி வகையைச் சேர்ந்தது. ஒன்றோடொன்று கொஞ்சிக் குலாவுவதுபோல மலைக் குன்றுகள். கண்களுக்குக் குளிர்மை தரும் பசுமை பூத்த புல்வெளி. ஆடுமாடுகளுக்கு உணவுப் பஞ்சமில்லை. சிற்றோடையும், மரங்களும் அடர்ந்த அந்தப் பிரதேசத்தில் வசித்தவர்கள் எல்லோரும் மலை ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஒரு ஆராய்ச்சிச் சாலை இருந்ததினால், பாலையூரில் தபாலாபீஸை ஏற்படுத்தி என்னை அங்கு மாற்றி யிருந்தார்கள். நாகரிகத்தைப் பரப்பும் பாவனையில் ஒரு பள்ளிக்கூடமும் இருந்தது அந்த ஊரில். அவர்கள் எழுதும் கடிதங்களுக்கு விலாசமெழுதிக் கொடுக்க வேண்டியது என் வேலை. 'தபாலாபீஸ் ஐயா' என்று எனக்குப் பட்டமிட்டு, என்னிடம் தனியாக அன்பும் மரியாதையும் செலுத்துவார்கள்.

தபாலாபீஸ் வாடிக்கைக்காரர்களுள் சங்கிலி ஒருத்தி. அவள் மலைநாட்டுப் பெண். மலை நாட்டு வனப்புதான், கறுப்பில்லை; — சிவப்பு, பரந்த நெற்றி, அகன்ற விழிகள் என்றெல்லாம் வர்ணிப்பதைவிட அவள்தான் அந்த நாட்டு ராணி-இல்லை அழகுத் தெய்வம் என்று சொன்னால் பொருந்தும். மலை நாட்டு வெட்கத்தைப் பிரதி பலிப்பதுபோல் மினுக்கிக் குலுக்கித்தான் செல்வாள் அவள். மலைநாடு என்றால் ஒரு காடு மூரடான பிரதேசமென்றும், மலைவாசிகள் என்றால் மூரட்டு மனிதர்களென்றும் நினைத்து வந்த நான் அந்நாட்டில் பழகப் பழக என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள நேர்ந்தது. குளிர்ச்சி மிகுந்த பிரதேசம், இனிமை மிகுந்த மக்கள், நம்பிக்கையுடன் எவ்வளவு நாள் வேண்டுமானாலும் அவர்களுடன் தங்கலாம் என்பதுதான் நான் அனுபவத்தின் மூலம் கொண்ட அபிப்பிராயம்.

ஒரு நாள் இரவு, நாற்றுடைக் கயிற்றுக் கட்டிலை வெளியிலெடுத்துப் போட்டுக் கொண்டு படுத்துக் கொண்டிருந்தேன். நித்திரா தேவியின் அருள் கிடைக்கவில்லை. வெகு தொலைவிலே நாட்டுத் தம்பட்டச் சத்தம் ஒலித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு பூஜை, மலைவாசிகள் கொம்மாளத்திற்குக் கேட்கவா வேண்டும். உடுக்கை சத்தம், கூத்து, கொம்மாளம் இவை சாதாரணமான சம்பவங்கள்.

அமைதியைக் குலைத்துக்கொண்டு கேட்ட அரவம் என்னை எழுப்பி விட்டு விட்டது. நள்ளிரவில் கண் விழித்துப் பார்க்கப் பயமாகத்தான் இருந்தது. தைரியத்தை உசுப்பி விட்டு, கண்களைத் திறந்தேன். ஒரு உருவம் முட்டாக்கிட்டுக் கொண்டு என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது. அவ்வுருவத்தைத் தலையிலிருந்து கால்வரை பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அந்த உருவம் பூமியின்மேல் நடப்பதாகத் தெரியவில்லை. எனக்குப் புல்லரித்தது; மனம் நடுங்கிப் பதறியது.

இரவில் சத்தமிட்டாலும் கூப்பிடுவதற்கு ஆளில்லை. எல்லோரும் பூஜைக்குப் போயிருந்தார்கள். இருந்தாலும் தொண்டையை விட்டு வார்த்தைகள் வந்தால்தானே! அந்த உருவம் என்னை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தது. இப்பொழுது என் இமைகள் தானாகவே இயங்கின!

''ஐயா!'' என்று யாரோ கூப்பிட்டதுபோன்ற பிரமை ஏற்பட்டது. அந்த உருவம்—என் உயிரைக் குடிக்கக் காத்திருக்கும் பேய்தான்—அழைத்திருக்கும். கண்களைத் திறந்து கால்களைப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! பூமியின் மீது படிந்திருந்தது அந்த உருவத்தின் கால்கள். மெதுவாகப் பார்வையை உயர்த்திப் பார்த்தேன். சங்கிலிதான் போர்வையைப் போர்த்திக் கொண்டு நின்றான். அவன் முகத்தில்கூடப் படபடப்பின் சாயை படிந்திருந்தது.

அடுத்த நிமிஷம் என் மனம் ஒரு ஆராய்ச்சியில் புகுந்தது. ஒரு ஸ்திரீ நள்ளிரவில் ஒரு ஆடவனிடம் வரக் காரணமென்ன! மலை நாட்டு ஸ்திரீகளிடம் ஏதாவது நடத்தை கோளாறு உண்டா! மலைநாட்டு நாகரிகத்தில் அது இயற்கையாக இருக்கலாம். ஆனால்......அதற்காக நான் அவன் இஷ்டத்திற்கு உடந்தையாக இருக்க முடியுமா! என் நடத்தையில் ஏதாவது கோளாறு இருக்கிறதென்று மலைவாசிகள் மனசில் பட்டால், என்னைப் பிய்த்தெறிந்து விடுவார்களே! அவன் இன்னமும் அருகில் நெருங்கிக் கொண்டிருந்தான்.

''எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்!'' என்றான் அவன். என் சந்தேகங்கள் விலக ஆரம்பித்தன. அவனைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் என் மனத்தில் மறுபடியும் எழுந்தது. அவன் அப்படியே கீழே அமர்ந்தான். அவனைப் பார்த்தேன், என்னையறியாமலே ஏதோ ஒரு பரிதாப உணர்ச்சி ஏற்பட்டது என் மனத்திலே. ''முதலில் என்னைப் பற்றிச் சொல்லி விடுகிறேன். பிறகு நீங்களே யோசித்து, எனக்கு உதவி செய்யுங்கள்'' என்று கூறி அவன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான் :

''கடவுளின் சிருஷ்டிதான் நான். எனக்கு எல்லாவித சுகத்தையும் அவன் அளித்திருக்கிறான். ஆனால் நான் அவனைக் குறை சொல்லவும் இடமிருக்கிறது. இயற்கை விநோதம் போலிருக்கிறது. அவன் செய்த குற்றம் எனக்கு அதிக அழகைக் கொடுத்ததுதான். அந்த அழகினால்தான் எனக்குத் துன்பம் ஏற்பட்டிருக்கிறது. அழகு எனக்கு இருந்து விட்டால்தான் என்ன, வயது வந்த வாலிபர்கள் எல்லோருமா என்னை வட்டமிட வேண்டும். எனக்கு விவாகம் செய்து கொள்ளுவதில் ஆசையில்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனாலும் உலகமோ ஒவ்வொரு நிமிஷமும் நான் சீக்கிரம் விவாகம் செய்து கொள்ளத்தான் வேண்டுமென்று நினைத்தது. என்னிஷ்டப்படியே நான் சில வருஷங்களுக்குக் கன்னியாகவே இருக்க விரும்பினாலும், அது ஒரு ஆபத்தை விளைவிக்கிறது. விஷமக் கண்களுடன் பார்க்கும் உலகத்திற்கு என் அழகு குறி! அதுவே எனக்கு விஷம்போல. அந்த அழகுடன், விஷத்துடன், பரீட்சை செய்து பார்க்கிறது உலகம்.

''அவ்விஷப் பரீட்சையில் தலைமை தாங்கியவன் எங்களூர்ப் பூசாரி. அவன் ஒரு முரடன். முயலுக்கு மூன்றேகால் என்று நிரூபணம் செய்வான். நடுத்தர வயது. வாழ்க்கை அனுபவம் உண்டோ இல்லையோ, ஆனால் உலகத்தில் தெய்வமும் அதன் சீடர்களாகிய ஒரு சிலரும்தான் வாழப் பிறந்தவர்கள் என்று நினைத்தான் அவன்.

''பைத்தியம் தலைக்கேறிவிட்டது அவனுக்கு. என்ன நினைத்தானோ தெரியவில்லை. என்னைக் கண்டால், குழைய ஆரம்பிப்பான். என்னை எங்காவது கண்டால் பல்லை இளிப்பான்; நான் பதிலுக்குச் சிரிப்பேன். அவன் அதை எந்த வழியில் புரிந்து கொண்டானோ தெரியவில்லை. நான் கோயிலுக்குப் போனால், விசேஷ மரியாதைகளும், அதிகமான பிரசாதங்களும் கிடைக்கும். அவனுடைய செய்கைகள் எனக்குப் புரியவுமில்லை; பிடிக்கவுமில்லை. அவன் மனசிலுள்ளது சில நாட்களுக்குப் பிறகுதான் தெரிந்தது.

''ஒருநாள் நான் அதோ எதிரிலிருக்கிற அந்த மலையில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்தேன். எங்கிருந்தோ வந்து சேர்ந்தான் அவன். 'சங்கிலி' என்று பல்லை இளித்தான். ''என்ன!'' என்றேன் ஒருவித கடுகடுப்புடன் நான்.


'' 'உன்னைத் தனியாகப் பார்த்துப் பேசவேண்டுமென்று வெகு நாட்களாக ஏங்கி எதிர்பார்த்தது, இன்றுதான் கைகூடியது.' என்றான். என் கோபத்தையும் லட்சியம் செய்யாமல் அவன் ஏதேதோ பேசிக் கொண்டே போனான்.

'பூசாரி ஐயா, மரியாதையுடன் சொல்லுகிறேன், நீர் நினைப்பது தவறு' என்றேன் நான்.

'' 'வீணாக கையாண்டி செய்யாதே. புலிப்பால் வேண்டுமென்று நீ கேட்டால், அதை உடனே நிறைவேற்றுவேன்...'

''' எனக்கு இப்போது தேவையானது நீ இங்கிருந்து சென்று விடுவது தான்.'

''' நிஜமாகவா சொல்கிறாய்!'



''' ஆமாம்.'

''' ஆனால், சங்கிலி, அதனால் வரும் பயன் என்னவென்று உனக்குத் தெரியுமா!'

''' எதுவாக இருந்தாலும், பூசாரிக்கு, நான் என்னளவும் மரியாதை கொடுத்து, என்னை மட்டமாக்கிக் கொள்ள முடியாது.'

''' நீ என்னை அவமானப் படுத்தியது மூலம் என் கடவுளை அவமானப் படுத்தினாய். இதற்குப் பரிகாரமாக நீ மணமாகாதவளாகவே இறப்பாய். இதுதான் என் கடவுளின் பெயரில் உனக்கிடப்

பட்ட சாபம்...' என்றான் பூசாரி. அவன் என்னை நெருங்கி வந்தான். ஆம், தனியாகச் சிக்கிக் கொண்ட பெண்ணை எது வேண்டுமானாலும் செய்து விடலாம் என்று நினைத்தான் போலும். காய்ந்த விறகுக் கட்டை எனக்கு உதவி செய்தது. அதைக் கொண்டு அவனை விரட்டி விட்டேன். அது விஷப் பரீட்சைதான், என்னழகு எனக் களித்த ஒரு பரிசு! பரீட்சையின் முடிவு விபரீதமாகத்தான் இருக்கும். ஆனாலும் கடவுளின் பெயரால் ஒருவன் என் வாழ்க்கையையும் சுதந்திரத்தையும் பறிக்க முடியுமா! என் அழகுதான் இவற்றிற்கெல்லாம் பொறுப்பு என்றாலும், என் அழகை அள்ளிக்கொடுத்து விடமுடியாதே!

''இவற்றிற்கெல்லாம் இன்று சாயந்திரம்தான் பதில் கிடைத்தது. மலைநாடு என் விவாகத்தில் பூரண சுதந்திரம் அளித்திருந்தாலும் அது மற்றவர்களைப் பொறுத்துத்தான் என்பது இப்பொழுது நானறிந்த உண்மை. இன்று பூஜை நடந்தது தான் உங்களுக்குத் தெரியுமே. அதில்தான் தன் நடிப்புத்திறனை பூசாரி காட்டிக் கொண்டான். தூய மனதுடன் கடவுளையே தியானம் செய்து கொண்டிருந்த மக்கள் அவன் ஆவேசத்திற்குப் பலியானார்கள்! 'ஹா ...... ஹா ...... நான்தான் மலைநாட்டுக் கடவுள். எனக்கு நரபலி வேண்டும். இல்லாவிட்டால் மலைநாடு மடிந்துவிடும். அதுவும் குறிப்பாகச் சங்கிலியின் ரத்தம் வேண்டும்' அவ்வளவுதான். பூசாரி விழுந்து விட்டான், ஆவேசம் மலையேறிப்போன பாவனையில். அவன் ஆவேசத்தின் உண்மைதான் எனக்குத் தெரியுமே!

''ஆமாம் சாமி, இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் என்னைத் தேடி வந்து விடுவார்கள். நான் ஓடிவந்து விட்டேன் அவர்கள் கையில் சிக்காமல்; பூசாரியின் இஷ்டத்திற்குப் பலியாகாமலிருக்க என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று சொல்லி முடித்தாள் அவள்.

அவள் மலை நாட்டுப் பெண்தான். ஆனாலும் எவ்வளவு விவேகியாக இருக்கிறாள். அவள் உடல் பதறியது. பலிக்குத் தயாராக இருக்கும் ஆடு போல ஒருவன் சூழ்ச்சிக்கு ஒருத்தி பலி, அவள் கதறினாள். தூரத்தில் தீவட்டிகளுடன் பலர் வருவது தெரிந்தது. நான் தைரியமாக அவளை என் ஆபீஸ் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு, மறுபடியும் என் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டேன். ஒரு உயிரைக் காப்பாற்றிய எண்ணமும் திருப்தியும் ஏற்பட்டது எனக்கு. ஆனாலும் மலைவாசிகள் வந்த பிறகு என்ன நடக்கும் என்பது என் கற்பனையில் தோன்றி என்னைப் பயத்திற் காளாக்கியது.

நான் எதிர்பார்த்தது சிறிது நாழிகைக்குள் நடந்தது; அக்கூட்டம் என்னைச் சுற்றிக்கொண்டது. எனக்குத் திகில்தான். ஆனால் சிறிது தைரியமும் என் மனதின் ஓரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தது. கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒருவன் என் அருகே நின்று ஒரு தடவை காலைத் தட்டினான். அவன் உயரம், பருமன், பார்வை, எல்லாம் எனக்குப் பயத்தை ஊட்டின.

''சங்கிலி இவ்வழியாகச் சென்றாளா!'' என்று கேட்டான் அவன், தபாலாபீஸ் அறையைப்



பார்த்துக் கொண்டே. அவனுக்கும் தெரிந்து விட்டதோ, நான் அங்கு சங்கிலியை வைத்துப் பூட்டியிருக்கிறேனென்று. என் குட்டு சீக்கிரம் வெளிப்பட்டு விடும். அடுத்த நிமிஷம் நான் மலையினின்று உருட்டப் படுவேன். அவனை அவன் போக்கிலேயே விட்டிருந்தால், எனக்கு இவ்வளவு சங்கடம் நேரிட வழியில்லை. இவ்வாறெல்லாம் என் மனம் புலம்பியது. இருந்தாலும் என் தைரியத்தை யெல்லாம் திரட்டி ''சங்கிலி இங்கே இல்லை'' என்று சொன்னேன். பாவம், அவர்கள் என் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்க ளென்பது அவர்கள் உடனே அப்பால் சென்றதிலிருந்து தெரிந்தது.

அவனைக் காப்பாற்றி யாகிவிட்டது. இனி அந்த ஊரில் அவன் இருக்க முடியாது. ஆனால் அவன் வெளியே எங்கு போவது ! இங்கேயே என் கூடவே இருந்து விட்டால், அவன் தலையும் என் தலையும் நிச்சயமாகச் சீவப்பட்டு விடும். அவ் ஊரில் விஷ ஜுரம் கண்டிருப்பதாகவும் அதனால் என் உடல் நிலை பாதிக்கப்பட்டதாகவும் சொல்லி ஒரு பொய்த் தந்தி மூலம் எனக்கு ஒரு வாரம் லீவு வாங்கிக் கொண்டேன்.

ஊரைவிட்டுப் புறப்பட்டு ரயில் வண்டியில் ஏறிய பிறகுதான் நான் நிம்மதியாகச் சிரிக்க முடிந்தது ! அந்த அழகானவனை என் கூட வைத்துக் கொள்வது விஷப் பரீட்சைதான். ஆனால் தனியே விடுவதும் அப்படித்தான். ஆனாலும் ரயில் வண்டியை விட்டிறங்கியதும். வேறு ஊருக்கு மாற்றல் வாங்கிக் கொண்டேன்.

நகரத்து வாசம் அவனுக்கு நாகரிக வாழ்க்கையைச் சொல்லிக் கொடுத்தது. மலைநாட்டுக் கட்டுப்பெட்டியாக இருந்தவள், புது மோஸ்தரில் சீக்கிரம் வெளி வந்தது அவள் விவேகத்தையும், கூர்ந்து கவனித்து விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் தன்மையைத்தான் எடுத்துக் காட்டின.

ஒருநாள் ''சங்கிலி, இன்னம் நீ உன் வாழ்க்கையைப் பற்றித் தீர்மானிக்க வில்லையா !'' என்று கேட்டேன்.

''இல்லை என்னுடைய தீர்மானம்தான் ஒன்று இருக்கிறதே...''

''அந்தச் சபதம் நீ உன் நாட்டிற்குத் திரும்பிச் சென்றால் அல்லவா !''

''அப்படியென்றால் நான் வீட்டுக்குத் திரும்பிச் செல்ல முடியாதா !''

''ஆமாம் !''

''உங்கள் அபிப்பிராயம் தவறு. மலைநாடு என்னை அநேகமாக ஏற்றுக் கொள்ளும். அவர்கள் எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள்.''

''இருக்கலாம். உன்னைப் பற்றியது தெய்வ ஆக்ஞை என்ற மறை பொருளல்லவா. அதை நீ சுக்கு நூறாக ஒடித்து விட்டு ஓடி வந்ததைக் கூடவா மறந்து விடுவார்கள்!''

''பூசாரியின் கதையைச் சொன்னால், என்னை அவர்கள் மன்னித்து விடுவார்கள்.''

''ஆனால் அதைச் சொல்லுமுன் உனக்கு ஆபத்து நேரிட்டால்......!''

அவள் பதிலளிக்கவில்லை. சுவரிலிருந்த கடிகாரம்தான் என் மனத்துக்குச் சமமாக டிக் டிக் கென்று ஒலித்துக் கொண்டிருந்தது.

''என்னுடனேயே உன் வாழ் நாளைக் கழித்து விடேன்'' என்றேன்.

''நீங்கள்தான் என் தெய்வம். என் உயிரைக் காப்பாற்றினீர்கள். என் ஜாதியினர் செய்த அட்டூழியத்திற்கு நான் அங்கு செல்லக் கூடாதுதான். ஆனாலும்......''

''ஆனாலும்...''

''வாழ்க்கையில் என் போக்கு நிர்ணயிக்கப்படு முன் பூசாரியின் தலை போக வேண்டும். என் சபதமும் நிறைவேறித்தான் ஆக வேண்டும். பிறகுதான்......''

''அதற்கு நீ உன் கிராமத்திற்குத் திரும்பித்தான் போக வேண்டுமா !''

''என்றாவது ஒரு நாள் போவேன். அவனுக்கு என் சபதத்தின் கடுமையை, விஷப் பரீட்சையின் பலனை, அறிவுறுத்துவேன்.''

அவள் சிரித்தாள். அதிலே அர்த்தமும் இருந்தது ; அந்தமும் கூட. ஆனால் விஷப் பரீட்சையின் முடிவு என்று அவள் குறிப்பிடுவது அழகுடன் விளையாடுவதைத்தான். ஆனால் என் பரீட்சை விஷப்பரீட்சையா அல்லது அன்புப் பரீட்சையா! இது காலாவட்டத்தில் தெரிய வேண்டிய விஷயம்.

*

ஒரு தடவை நான் பாலையூர் கிராமத்தின் வழியாகச் செல்ல நேர்ந்தது. என்கூட என் ஆபீஸ் ஷிப்பந்தி ஒருவன் இருந்தான். பாழாய்ப்போன மோட்டார் பாலையூரில் 'மக்கர்' செய்து விட்டது. கிராமத்து மக்களுக்கு என்னைக் காட்டிக்கொடுத்தது போதும் ! வெகு நாட்களாக மோட்டாரை ரிப்பேர் செய்து தன் சாமர்த்தியத்தை வெளியிட நினைத்துக் கொண்டிருந்த மோட்டார் ஓட்டிக்கு அது ஒரு சந்தர்ப்பம். அவன் அங்குமிங்குமாக எதையோ கழற்றி, பூட்டிக்கொண்டிருந்தான். அவன் என்ன கடவுளா! நினைத்ததை உடனே செய்துவிட! சிறிது நாழி சென்றது.

அடுத்த பதினைந்து நிமிஷங்களுக்குள், மலை ஜாதியினர் என்னைச் சூழ்ந்து கொண்டனர். வெகு நாட்களுக்குப் பின்னர் என்னை பார்க்கும் காரணத்தாலோ என்னவோ என்மீது அன்பைச் சொரிந்தார்கள். இளநீர், நுங்கு இத்தியாதிகளை கடவுளுக்கு நைவேத்தியம் செய்வதுபோல கொண்டு வந்து குவித்தார்கள். எனக்கும் என் கூடவந்தவர்களுக்கும் நல்ல வேட்டை! 'ஏ, மக்களே, உங்கள் சங்கிலியை என்கூட அழைத்துச் சென்றிருக்கிறேன். உங்களுக்கும், உங்கள் கடவுளுக்கும் அது வெறுப்பாகத்தான் இருக்கும். இருந்தாலும் உங்கள் மரியாதை எனக்குக் கிடைக்கிறதே!' என்று சொல்லலாமா என்று பார்த்தேன். ஆனால் அதைச் சொன்னால், பிறகு என் கதி என்ன ஆவது!

"சங்கிலி எங்கே போனான்!" என்று கேட்டேன் நான், ஒன்றுமறியாதவன்போல.

எனக்குத் தெரிந்த கதையின் முதல் பாகத்தைத் தான் அவனும் சொல்லித் தீர்த்தான். என்னைப் பற்றி ஒரு வித சந்தேகமும் இருந்ததாகத் தெரியவில்லை. அவன் தொடர்ந்து சொன்னான் :

"சாமி, நாங்கள் தவறிழைத்து விட்டோம். கடவுள் இஷ்டம் அது அல்ல என்று எங்களுக்குத் தெரிந்து விட்டது. பூசாரியின் சூழ்ச்சிதான் அது. நல்லவேளையாக அவன் தப்பியோடினான்..."

"அவன் திரும்பி வந்தால் மறுபடி அவனை ஏற்றுக் கொள்வீர்களா!" என்று கேட்டேன்.

"தாராளமாக! மலைநாட்டிற்கு அவன் புதிய தொரு பாடம் கற்பித்தான், சிறிய பெண்ணினும் கூட. அவன் எங்கிருக்கிறான் என்பது உங்களுக்குத் தெரியுமா!" என்று கேட்டான். கிழப் பருவம் எய்திய அவன் தந்தை. எனக்குத் தெரியும் என்பது கிழவன் அறியாத விஷயம். சிறிய பெண்ணும் அவன்!

"இல்லை, எங்காவது பார்த்தால் அவனை இழுத்து வருகிறேன்" என்றேன்.

"அப்படிச் செய்தால், உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருப்போம்.

"உங்கள் நாகரிகம் விசித்திரமானது!" என்று சொல்லிச் சங்கிலியைப் பற்றிய பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தேன். நான் வந்த வண்டி தயாராகி விடவே நானும் எனது சிப்பந்தியும் வண்டியில் ஏறிக் கொண்டு சென்று விட்டோம்.

பாலையூர் சென்று அவன் தகப்பனுடன் பேசியதை அவனிடம் தெரிவிக்கக் கூடாதென்று என் மனம் நிச்சயித்தது.

சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன். ஒன்றும் பிடிக்கவில்லை, பக்கம் பக்கமாகத் திருப்பிக் கொண்டிருந்தேன். அவ்வளவுதான். போராட்டம் நிறைந்த மனமுடைய ஒருவன் செய்யக் கூடியதும் அதுதான். சங்கிலி என் அருகே வந்து உட்கார்ந்து கொண்டான்.

"நீங்கள் பாலையூர் போயிருந்தீர்களாமே!" என்று ஒரு கேள்வியைத் தூக்கியெறிந்து அமைதியைக் குலைத்தான் சங்கிலி. நான் பாலையூர் போன விஷயம் அவனுக்கு எப்படித் தெரியும்! வழக்கமாகவே, சாதாரணமாக அவன் இதைக் கேட்டிருக்கலாம்! இருந்தாலும், "இல்லையே" என்ற பதில் என்னிடமிருந்து வெளி வந்தது.

"நீங்கள் அங்கு போயிருந்ததாக உங்கள் ஆபீஸ் சிப்பந்தி கூறினான். நடந்த எல்லாவற்றையும் சொல்லி ஐயாவுக்கும் சங்கிலிக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டான். பாவம் அவனுக்குத் தெரியுமா, நான்தான் சங்கிலியென்று! நான்

ஊருக்குப் போகக் கூடாது என்பதற்காக நீங்கள் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. எங்கள் மலை நாடு என்னை மறுபடியும் ஏற்றுக் கொள்ளு மென்று சொன்னேனே, அது நிஜமாகிவிட்டது பார்த்தீர்களா! உங்கள் விஷப் பரீட்சையின் ஆரம்பத்தில் என் உயிரைக் காப்பாற்ற ஒரு பொய் சொன்னீர்கள். மற்றொரு பொய்மூலம் நான் இங்கே இருந்து விடவேண்டு மென்பது உங்கள் ஆசை அல்லவா!'' என்றாள் சங்கிலி.

அவள் குரலிலிருந்து யாதொரு உள் அர்த்தத்தையும் காண முடியவில்லை. கோபம் மிகுந்தவளாகவோ, தான் வஞ்சிக்கப் பட்டதாகவோ அல்லது சொந்த விதியை நொந்து கொள்பவளாகவோ காணப்படவில்லை அவள். எனினும் எனக்கு நடுக்கம்தான். பரீட்சை முடிவு தெரிய அதிக நாழி யில்லை யென்று என் அந்தராத்மா கூறியது.

✶

அவளைப் பாலையூருக்கு அழைத்துச்செல்ல நான் துணியவில்லை. ஆனால் விதி அரசாங்க உத்தரவு மூலம் என்னைப் பாலையூருக்கு மாற்றி என் பிரச்னைகளை யெல்லாம் உடைத்தெறிந்து, என் மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டது! பழைய ஊர் தான். ஆனால் புதியதொரு விரோதியான பூசாரி, என் உயிரை வாங்கக் காத்துக் கொண்டிருப்பான் என்ற பீதி யொருபுறம்! அவளுக்கு வேண்டிய மட்டும் எச்சரிக்கை செய்து அவளுடைய தகப்பனிடம் ஒப்புவித்தேன். ஆனாலும் அவள் என்னுடனேதான் வசித்து வந்தாள்.

யாதொரு இன்னலுமின்றி ஒரு வாரத்தைக் கழித்துவிட்டோம். அவள் என்னைச் சுற்றி வந்தாள். நான் அவளைச் சுற்றிச் சுற்றிவந்தேன். எல்லாம் என் தபாலாபீஸுக் குள்ளேதான்!

விளையாட்டுக்காக நானும் அவளும் வேட்டையாடப் போன பொழுதுதான் அந்த விபரீதம் நடந்தது. அவள் என்னை விட்டுப் பிரிந்து சென்றாள். சிறிது நாழிகைக்கெல்லாம் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. வேட்டையின் சின்னமாக ஏதாவது கிடைக்கும் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கையிலேயே, சங்கிலியின் குரல் கேட்டது. ஆமாம், அவள் காயத்துடனேதான் கிடந்தாள். பூசாரி குண்டு பட்டுக் குற்றுயிராகக் கிடந்தான். பார்க்கச் சகிக்காத காட்சி. சங்கிலி அருகே ஓடினேன், அவள் தடுமாறினாள்.

''நீ என் மனைவி என்று சொல்லுங்கள்!'' என்றாள் அவள். பூசாரி இறக்கவில்லை. ஆனால் இறந்துகொண்டே யிருந்தான். என் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை: தடுமாறிக் கொண்டே சொன்னேன். கடைசியில் பூசாரி வஞ்சம் தீர்த்துக் கொள்ளுமுன் அவள் பூசாரி மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டாள்.

ஒன்றுமறியாதது போல நீரோடை ஓடிக் கொண் டிருந்தது. பக்ஷியினங்கள் விஷப் பரீட்சையின் முடிவைப் பார்த்துக் கொண்டிருந்தன.

✶

புஜங்கராவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. கதையைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. அவருடைய மனைவி வெளியே வந்து சொன்னாள்:

''ஏன் கதையை அத்துடன் முடித்து விட்டீர்கள்! நான் இறந்து விட்டேனே என்று அம்பி சந்தேகிக்கப் போகிறான்!'' என்று என்னைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.


''மிகுதியை நீதான் சொல்லேன்'' என்று தன் மனைவியைக் கட்டளை யிட்டார் அவர்.

''ரத்தம் தோய்ந்த சங்கிலியைக் கண்ட அவள் தகப்பன் மயக்கம் போட்டு விழுந்தான். அவ்வளவுதான், அவனும் போய் விட்டான்'' என்றாள். அப்போது அவள் கண்களில் கண்ணீர் தேங்கியது.

அந்த மனுஷர் விட்ட இடத்திலே ஆரம்பித்தார்: ''டாக்டரின் உதவியால் சங்கிலி பிழைத்தெழுந்தாள். போஸ்ட்மாஸ்டர் வேலைக்குச் சீட்டுக் கொடுத்து விட்டு வந்த என்னுடன் இப்போது அவள் வாழ்க்கையை நடத்துகிறாள்!''

அந்த அம்மாமியைப் பார்த்தேன். மலைவாசி என்று சொல்வதற்கான யாதொரு அடையாளமும் இல்லை. பதினெட்டு முழம் புடவையை உடுத்திக் கொண்டு, லக்ஷ்மீகரமாக நின்று கொண்டிருந்தாள் அம்மாமி! அவர்களிருவர் சொல்வதையும் நான் நம்பவில்லை. இருவருமாக என்னை பைத்தியமாக அடிக்கிறார்களோ என்பதனால். யோசனை செய்து ஒரு முடிவுக்கு வர முயன்றேன். எனக்குப் போதிய அவகாசம் அளிக்கவில்லை அந்த மனுஷர்.

''எதற்காகச் சொல்லுகிறேனென்றால் அம்பி, இந்த உலகத்தில் காதல் என்றால் அழகு என்பதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் சொல்லுகிறார்கள். அன்பு, குணம் நடவடிக்கை பழக்க வழக்கங்கள் ஆகியவையும் அதில் சம்பந்தப் பட்டிருப்பது பலர் நினைக்காத விஷயம். இதனால் அழகு என்பது எப்பொழுது மூகாந்தரமாகி விடுகிறதோ அப்பொழுது அழகுடன் விளையாடுவது விஷப்பரீட்சையாகி விடுகிறது.'' இவ்வாறு வழக்கமான அவருடைய உபந்யாசத்தைச் செய்து முடித்துச் சிரித்துக் கொண்டே பொடியை இழுத்தார் அவர். ''உங்கள் நடிப்பு அபாரம்'' என்று சொல்லிக் கொண்டே நான் எழுந்தேன்.



1. இளையராணி

அமரபுரி அரசனுக்குப் பதினொரு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் குழந்தைகளாயிருந்த போதே வீரத்திலும் தீரத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

அரசன் தன் குமாரர்களைப் பார்த்துச் சந்தோஷத்தால் பூரித்துப் போனான். தனக்குப் பிறகு அந்த ராஜ்யத்தை ஆளப் பிள்ளை இல்லையே என்று அரசனும் ராணியும் எத்தனையோ தடவை நினைத்து வருந்தி யிருக்கின்றனர். கடைசியில் அவர்கள் குறை நீங்கியது.

அரசனுக்குக் குமாரர்கள் பிறந்ததை ஒரு பெரிய விழாவாகப் பல நாட்கள் கொண்டாடினார்கள். அரண்மனையில் அந்நகர மக்களுக்கெல்லாம் விருந்து உபசாரங்கள் பிரமாதமாக நடந்தன. ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் அரசன் தாராளமாகப் பலவித வெகுமதிகளை வழங்கினான்.

ராஜகுமாரர்களுக்கு வயது வந்ததும், அவர்களை அரண்மனையைச் சேர்ந்த பள்ளிக் கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்தான்; அத்துடன் அவர்களுக்கு வில்யுத்தம், மல் யுத்தம், வாள் போர் முதலியவை களிலெல்லாம் அரசன் சிறந்த முறையில் பயிற்சி அளித்தான். யானை ஏறவும் குதிரை ஏறவும் அவர்களுக்குப் பயிற்சி அளித்தான். ராஜ குமாரர்களும் மிகவும் திறமையோடு புத்தி சாலித் தனமாக எல்லாவற்றையும் கற்றுக் கொண்டார்கள்.

தங்களுடைய புத்திரர்கள் அழகிலும் ஆண்மையிலும் வீரத்திலும் தீரத்திலும் சிறந்து விளங்குவதைப் பார்த்து அரசனும் ராணியும் எவ்வளவோ சந்தோஷம் அடைந்தார்கள். ஆனால் அவர்கள் மனதுக்குள் ஒரு குறை இருந்து சதா வேதனை தந்து கொண்டிருந்தது. அது ஒரு பெண் குழந்தை இல்லையே என்னும் வேதனைதான். பதினொரு பிள்ளைகள் இருந்தாலும் ஒரு பெண் குழந்தை இல்லையே என்னும் குறை ராணிக்குத்தான் மிகவும் வேதனையைத் தந்தது.

அரசனும் ராணியும் அதிக காலம் அப்படி வருந்திக் கொண்டிருக்க வில்லை. ராணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்கும்போதே அரச குடும்பத்துக்கு ஏற்ற அழகோடு பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்ததும் அரண்மனையில் ஆடலும் பாடலும் பிரமாதமா யிருந்தன. பிரதம மந்திரியிலிருந்து அரண்மனையைச் சேர்ந்த வேலைக் காரர்கள் வரையில் எல்லோரும் ஒரே குதூகலமா யிருந்தனர். அந்த நாட்டு மக்களுக்கெல்லாம், அரசனுக்கு அருமையாய்ப் பெண் குழந்தை பிறந்தது பற்றி எவ்வளவோ உற்சாகமாயிருந்தது.

அமரபுரியின் இளவரசியான அந்தப் பெண் குழந்தை வளர வளர அழகும் வளர்ந்து கொண்டே வந்தது. குழந்தையின் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் அரசனுக்குத் தாமரை மலரின் நினைவுதான் வந்தது. மலர்ந்த தாமரைப் பூவின் அழகும் மலர்ச்சியும் அந்தப் பெண் குழந்தையின் முகத்தில் விளங்கியது. தாமரைப் பூவுக்குக் கமலம் என்றும் ஒரு பெயர் உண்டல்லவா? அந்தப் பெயரைத்தான் அரசன் தன் குழந்தைக்கு வைத்தான்.

ராஜகுமாரி கமலத்துக்கு வயது மூன்று ஆயிற்று. அந்தச் சமயம் ஒரு சோக சம்பவம் நிகழ்ந்து விட்டது. ராணி சில நாட்கள் உடம்பு சரியில்லாமல் இருந்து திடீரென்று ஒருநாள் இறந்து விட்டாள்.

ராணி இறந்த செய்தி நகரெங்கும் பரவி எல்லோரையும் துக்கத்தில் ஆழ்த்தியது. அமரபுரி நகரமே சோகபுரியாக விளங்கியது.



அரசனுக்குச் சோகம் தாங்க முடியவில்லை. தன் குமாரர்களைப் பார்க்கும்போது அரசனுக்குத் துக்கம் கரைகடந்து பொங்கியது. குழந்தை கமலத்தைப் பார்க்கும்போது துக்கத்தினால் அவன் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது. குழந்தையைப் பார்க்க முடியாமல் கண்ணீர் பெருகி மறைத்தது. மூன்று வயதுக் குழந்தையான கமலத்துக்குத் தன் அருமைத் தாயார் இறந்துவிட்டதைச் சரியாக உணர முடியவில்லை. ஆனால் தகப்பனார் விம்மி விம்மி அழுவதைப் பார்த்ததும் குழந்தையும் தேம்பித் தேம்பி அழுதது.

அரசன் பல தாதிகளை நியமித்துக் குழந்தை கமலத்தை மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்தான். அவனும் அடிக்கடி வந்து குழந்தையோடு விளையாடி, தாயை இழந்த துன்பம் தெரியாமல் இருக்கும்படி செய்தான்.

ஐந்து வருஷங்கள் சென்றன. கமலம் இப்பொழுது குழந்தையாக இல்லை. ராஜகுமாரி கமலமாக விளங்கினாள். அவள் அழகு இப்பொழுது முன்னைக் காட்டிலும் அதிகமாகி விட்டது.

ராணி இறந்துபோன துக்கம் கொஞ்சம் கொஞ்சமாக நகரை விட்டு மறைந்து, நாட்டை விட்டு மறைந்து, அரண்மனையை விட்டு மறைந்து, கடைசியில் அரசனது மனதை விட்டும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து விட்டது.

அரசன் பேரழகியான ஒரு ராஜகுமாரியின் அழகில் மயங்கி அவளைக் கல்யாணம் செய்து கொண்டான். இளைய ராணி வந்ததில் எல்லோருக்கும் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று.

அந்த மகிழ்ச்சியில் உற்சாகமாகக் கலந்து கொள்ளாதவர்கள் அந்த நகரத்திலேயே பதினொரு ராஜகுமாரர்கள்தான். அவர்களால் அது எப்படி முடியும்? பெற்று வளர்த்த தாயை இழந்த பின்பு அவர்களுக்கு உலகத்தில் எதுவுமே மகிழ்ச்சி தரும் விஷயமாகத் தோன்றவில்லை. அதுவும் ராஜ சிம்மாசனத்தில், அரசனுக்குப் பக்கத்தில், இளைய ராணி அமர்ந்திருப்பதைப் பார்க்கும்போது இளவரசர்களுக்குத் துக்கம் தாங்கவில்லை.

இளையராணி மட்டும் கொஞ்சமாவது ராஜகுமாரர்களிடமும் கமலத்தினிடமும் அன்பு காட்டியிருந்தால் அவர்களுக்கு இந்தமாதிரி மனக்கஷ்டம் ஏற்பட்டிருக்காது. இளையராணி அவர்களிடம் அன்பைத்தான் காட்டவில்லை யென்றால் அதற்குப் பதிலாக வெறுப்பையாவது காட்டாமல் இருந்திருக்கலாம். அதுதான் அவளால் முடியவில்லை.

இளைய ராணியின் கொடுமையெல்லாம் நேரடியாகக் கமலத்தின் மீதுதான் திரும்பியது. பச்சைக் குழந்தையாயிருக்கும்போதே தாயை இழந்த கமலம் தன் சித்தியிடம் தாயன்பை எதிர்பார்த்து முற்றிலும் ஏமாற்றம் அடைந்தாள்.

இளைய ராணிக்குக் கல்யாணம் நடந்த மறு தினமே கமலத்தினிடம் அவள் நாகப் பாம்பைப் போல் சீற ஆரம்பித்தாள்.

அரண்மனையில் உற்சாகத்துடன் துள்ளி விளையாடி மான் குட்டியைப் போல் திரிந்த கமலம் குன்றிப்போய் ஒடுங்கி விட்டாள்.

இளையராணி வந்ததிலிருந்து அரசனுடைய குணமும் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியது. முன்பெல்லாம் அவன் தன் பிள்ளைகளிடம் காட்டிய அன்பு அளவற்றதாயிருந்தது. இப்பொழுது அவன் அவர்களைப் பொருட்படுத்துவதேயில்லை. அரசன் ராஜகுமாரி கமலத்தின் முகத்தைப் பாராமல் முன்பெல்லாம் ஒரு காரியமும் செய்யமாட்டான். ஆனால் இப்பொழுது அவளிடம் கூட அவன் அன்பு குறைந்துவிட்டது.

அரசன் சதாகாலமும் இளைய ராணியோடு அந்தப்புரத்தில் இருந்தான். இளையராணியின் அழகு அவனை அவ்வளவு தூரம் கவர்ந்து விட்டது. வரவர ராஜ்ய விவகாரங்களைக் கவனிப்பதைக் கூட நிறுத்தி விட்டான்.

அரசனே தன் மக்களை அலட்சியம் செய்ய ஆரம்பிக்கவே இளையராணியின் அதிகாரம் பொறுக்க முடியாததாகிவிட்டது. அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குப் பிறகு அவள் கமலத்தை அடியோடு வெறுக்க ஆரம்பித்தாள். (தொடரும்)


1951-ல்

அமோக விற்பனையான

டெஸ்லா

1952-ம் வருஷத்திய

அதி அற்புத புது ரகங்களில்
முதலாவதை
இப்போது அளிக்கின்றனர்



TESLA

402 U


இணையில்லா புதிய 5 வால்வ் சூபர்ஹெட். நீங்கள் விரும்பும் ரேடியோ செட். நான்கு வேவ் ரேஞ்சுகளுடன் எந்த ஸ்டேஷனுக்கும் வெகு எளிதிலும் சுலபமாகவும் திருப்பும் வண்ணம் கதோட்-ரே டியூனிங் இண்டிகேடர், 2-ஸ்டெப் டோன் கண்ட்ரோலுடன் அழகிய பளபளப்பான பேக்லைட் காபினெட்டில் பொருத்தப்பட்டது. ஏ.ஸி., டி.ஸி. மெயின்களில் இயங்கும். விலை ரூ. 335/-

* EVERY DAY A JOYFUL DAY * WITH TESLA *

ஹைதராபாத் உள்பட தென்னிந்தியாவிற்கு பூரண விநியோகஸ்தர்கள்:

ஒபுல் ரெட்டி (மதராஸ்) லிமிடெட்

புருஷோத்தம் பில்டிங் - மவுண்ட் ரோடு - மதராஸ்-2



சாயாஜி ராவ் தையற் கடையில் வேதாசலம் ஒருவனுக்குத்தான் உண்மையானவன் என்று பெயர். காலையில் ஏழு மணிக்கு மெஷினடியில் உட்கார்ந்தால் இரவு கடை மூடும் வரையில் மாடு போல் உழைப்பான். அதுவும் தீபாவளி நெருக்கத்தில் இரவும் பகலுமாக அவன் கண் விழித்து வேலை செய்வதுபோல் வேறு எவரும் செய்ய மாட்டார்கள்.

வேதாசலம் அன்று மெஷினெதிரே சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தான். அந்தச் சிறு இடத்தில் மீதமுள்ள நான்கு தையல் இயந்திரங்களும் வெகு வேகமாக வேலை செய்வதற்கு அடையாளமாக ஒலித்துக் கொண்டிருந்தன.

முதலாளிக்கு வேதாசலத்திடம் அத்யந்த நம்பிக்கை. ஏனெனில் எத்தனையோ பேர் வேலை கற்றுக்கொள்ள சாயாஜியிடம் வந்திருக்கிறார்கள். அரைகுறையாக வேலை கற்றுக் கொள்வார்கள். பிறகு சொல்லிக் கொள்ளாமல் போய் அந்த ஊரிலேயே இரண்டு மூன்று தெருத் தாண்டி ஒரு தையல் மெஷினை வாடகைக்கோ, கடனுக்கோ வாங்கித் தொழிலைத் தொடங்கி விடுவார்கள். அப்படிப் போகவில்லை வேதாசலம். உண்மையாக உழைப்பவனிடம் யாருக்கும் பிரியமும் நம்பிக்கையும் விழுவது இயல்புதானே!

சிறிது நேரத்துக்கெல்லாம் தலையைப் பிடித்த வண்ணம் குனிந்து யோசனையில் ஆழ்ந்திருந்த வேதாசலம் தலையை நிமிர்த்திச் சாயாஜிடம், "தலையை வலிக்கிறாற் போலிருக்கிறது. ஒரு 'ஸிங்கிள் டீ' போட்டுவிட்டு வருகிறேன், அப்பா!" என்றான்.

சாயாஜி வேறு பேச்சுப் பேசவில்லை. "சரி, சீக்கிரம் வந்துவிடு" என்றான்.

டீக் கடைக்கு விரையுமுன் மார்க்கெட் சந்தில் திரும்பினான் வேதாசலம். தினமும் இந்நேரத்தில் டீ குடிக்கும் வியாஜத்தில் அந்தப் பக்கம் வருவது வேதாசலத்தின் வழக்கமாகிவிட்டது. காரணம், மரகதம் தினமும் அவனுக்காக வழிமேல் விழி வைத்துக் கொண்டு அங்கே காத்து நின்றுகொண்டிருப்பதுதான்.

வேதாசலம் சிரித்த முகத்துடன் வருவதைப் பார்த்தவுடனேயே மரகதத்துக்கு உள்ளத்தில் எழுந்த இன்பம், அன்றும் நேற்றும் எஜமானி அம்மாளின் வீட்டில் மாடுபோல் உழைத்த துன்பத்தையும் மறக்குமாறு செய்தது.

மரகதம் வேலை பார்த்து வந்த வீடு பெரிய பணக்கார வீடு. முன்னெல்லாம் மரகதத்தின் தாய் அந்த வீட்டில் வேலை பார்த்து வந்தாள். இப்பொழுது அவளுக்கு முன்னைப்போல் வேலை செய்ய முடியாமல் கைகள் விழுந்து விடவே, மரகதம் தாயின் அந்த வேலையை ஏற்றுக் கொண்டாள். கலியாணமாக வேண்டிய வயதிலும் அவள் வெளியே போய் வேலை செய்து வந்துதான் ஆகவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

அந்த 'நீல பங்களா' வீட்டில் வேலைப்பளுவுக்குக் குறைவே யில்லை. காலேஜ் போகும் மஞ்சு பாஷிணிக்குத் தலை வாரிப் பின்ன வேண்டும்! கடைத் தெருவுக்குப் போய்ச் சாமான் வாங்க வேண்டும். இம்மாதிரி இன்னும் எத்தனை எத்தனையோ இதர வேலைகள்!

கடைத் தெருவுக்குக் காலை பத்து மணி சுமாருக்குச் சாமான் வாங்கப் போன ஒரு நாள், அப்படியே சில துணிகளைத் தைக்கக் கொடுத்து விட்டு வருமாறு 'நீல பங்களா'வின் எஜமானி யம்மாள் கட்டளை யிடவே, மரகதம் சாயாஜி ராவ் கடைக்கு வர நேர்ந்தது.

அவள் கடைக்குப் போன சமயம் சாயாஜி ராவ் இல்லை. வேதாசலம்தான் மரகதத்திடமிருந்து அளவு கேட்டுத் துணி வாங்கினான். துணியைத் தைப்பதற்குக் கொடுத்த மரகதம் அதே சமயம் வேதாசலத்தின் இதயத்து அன்பை, தனது அன்புடன் சேர்த்துத் தைக்கக் கொடுத்து விட்டாள்.

அதுமுதற்கொண்டு மார்க்கெட் மூலையில் தினம் ஐந்து அல்லது பத்து நிமிஷங்களாவது சந்தித்துப் பேசுவது அவர்கள் வழக்கமாகி விட்டது.

தீபாவளி நெருக்கத்தில் இரண்டு மூன்று தினங்கள் வேலை மிகுதியின் காரணமாக அவனால் மரகதத்தைச் சந்தித்துப் பேச முடியவில்லை.

இந்த நிலையில் வேலையின் மீது வேதாசலத்துக்குக் கவனம் எப்படிச் செல்லும்! ஏதாவது சாக்குச் சொல்லிவிட்டு மரகதத்தைச் சந்திக்கச் செல்லத் துடித்தான். நல்ல வேலை! பழியை ஏற்கத் தலைவலி வந்து குதித்தது!

* * *

மரகதத்துடன் அன்று பேசி விட்டுத் திரும்பும்போது உண்மையிலேயே வேதாசலத்துக்குத் தலையை வலிக்கத்தான் செய்தது. மூளையே

குமுறிவிடும் போன்ற உணர்ச்சிகள். அங்கே போனால் மலை மலையாக ரவிக்கையும் ஜம்பருமாகத் தைக்கப்பட வேண்டிய துணிகள் குவிந்திருந்தன. அவை அவனைப் பார்த்துப் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டிருந்தன. இங்கோ கிழிந்த ஆடையையும் ரவிக்கையையும் அணிந்த மரகதம் அன்பை அள்ளிக் கொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

'எத்தனை விதமான துணிகளை இந்தக் கைகளால் தைக்கிறோம்! அன்பின் வளர்ச்சிக்கு அடையாளமாக அவள் ஒரு நாள் திடுக்கிடும் வண்ணம் ஒரு பரிசு அளித்தால் என்ன!' என்று எண்ணினான் வேதாசலம்.

தீபாவளிக்கு முழுசாக இரண்டு தினங்கள்கூட இல்லை. சாயாஜி ராவ் கடைத் தையல் இயந்திரங்கள் சப்தித்த சப்தத்தில் தீபாவளி இன்னும் சீக்கிரம் வந்து விடும்போலிருந்தது. வர்ணத் துணிகள் வித விதரூபத்தில் மாறிக் கொண்டிருந்தன. இரவு இரண்டு, மூன்று, நான்கு என்று கண் விழித்துத் தைத்து மெஷின் பேரிலேயே சோர்வுற்றுத் தூங்கும்வரை தையற்காரர்கள் வேலை செய்தனர்.

அன்று பொழுது விடிந்ததும் சாயாஜி வேதாசலத்தை எழுப்பி, "தம்பி! இந்தத் துணிகளெல்லாம் சீக்கிரம் வேணுமாம். கொஞ்சம் 'சாயா' போட்டு விட்டு ஒரு மூச்சுப் பிடி" என்றான்.

சாயாஜி கொண்டு வந்திருந்த வித விதமான பட்டுத் துணிகள் வேதாசலத்தின் மனத்தைக் கவர்ந்தன. இரண்டே வித அளவுகளில் தைக்கப்பட வேண்டிய அந்தத் துணிகளைப் பார்த்த அவன், 'இவ்வளவு விலை கொடுத்து வாங்கும் இந்த வீட்டில் இரண்டே இரண்டு பெண் பிள்ளைகள் தானா! ஹூம்...' என்று தனக்குள் சிரித்துக் கொண்டான். அந்தத் துணிகளில் ஒரு துணி அவன் மனத்தை மிகவும் கவர்ந்து விட்டது. எவ்வளவு நேரம் துணிகளை மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தானோ, தெரியாது!

"தம்பி, அவசர வேலையை ஆரம்பி!" என்ற சாயாஜியின் குரல் அவனைத் தன் நினைவுக்குக் கொண்டு வந்தது.

தையல் மெஷினின் ஒலி எழுந்து அந்த இடத்தின் வேலைத் துரிதத்தை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது. வேதாசலத்தின் கையும் காலும் துரிதமாக இயங்கினாலும் அவன் எண்ணம் என்னவோ அந்தத் துணியிலேயே லயித்திருந்தது. அந்தப் பட்டுத் துணியும், அதைக் கொண்டு அழகாகத் தைக்கப்பட வேண்டிய ரவிக்கையும், அதை மரகதத்துக்குத் திடீரென அளித்தால் அவள் திகைப்புற்றுக் கன்னங்குழிய முகம் வெட்கக் காணித் தலை குனியும் பாவமும் அவன் கற்பனையில் எழுந்து நடமாடின. அந்த நினைப்பில் வேதாசலம் தன்னை மறந்து வாய் விட்டுச் சிரித்தான்.

சட்டென எல்லோரும் அவனையே திரும்பிப் பார்த்தனர்.

"என்ன, அண்ணே! தானே சிரித்துக் கொள்கிறீயே! நாங்களும்தான் கொஞ்சம் அனுபவிக்கிறோமே!" என்றான் சக தொழிலாளி ஒருவன்.

"இல்லே...எல்லோரும் கடைசி நிமிஷத்தில் துணியைக் கொடுத்து விட்டுத் தை தை, என்று குதிக்கிறார்களே...ஒருவருடைய தலையையும், இன்னொருவருடைய கையையும் சேர்த்துத் தைத்துப் போட்டால் என்ன ஆகும் என்று யோசித்தேன். சிரிப்பு வந்தது!" என்றான் வேதாசலம். அதைக் கேட்டு எல்லோரும் 'கட கட' வென்று சிரித்தனர்.

ஆனால் அதற்குப்பின் வேதாசலம் சிரிக்கவில்லை. யோசனையிலாழ்ந்தவாறே வேலையைச் செய்தான். அவன் கண்களெதிரே அந்தப் பட்டுத் துணி பல பல உருவங்கள் எடுத்து அவனை மதி மயக்கிக் கொண்டிருந்தது. அம்மாதிரித் துணியில் மரகதத்துக்கு ரவிக்கை தைத்துக் கொடுக்க வேண்டும் என்று மனதில் திட்டம் போட்டுக் கொண்டான்.

அன்று இரவும் சரியான வேலை. இரண்டு மணிக்கு மேல் ஒவ்வொருவரும் பேயடித்தவர்கள் போல் சோர்ந்து மிஷின் மேலே சாய்ந்து கிடக்க, வேதாசலம் மட்டும் வெகு வேகமாகத் தைத்துக் கொண்டிருந்தான். சாயாஜி ராவ் 'அவசரம்' என்ற சொன்ன துணியும், அவன் தைப்பதும் ஒன்றுதான். ஆனால் அளவுதான் வேறு.

ஜாக்கெட் அழகாகத் தைத்து முடிந்தாகி விட்டது. வேதாசலத்திற்குப் பரம திருப்தி. வனப்பமிக்க அங்கங்களை மறைக்க விருக்கும் அந்த ஜாக்கெட்டோ மடித்தும் ஒரு கைப்பிடிக்குள் அடங்கி விட்டது! அவ்வளவு மெல்லிய ஸில்க்! அதைச் சுருட்டித் தன் பையில் திணித்துக் கொண்டு வேலையைக் கவனிக்கத் தொடங்கினான்.

காலை, அதே மட சாப்பிடும் நேரம். அவசரம் அவசரமாகக் கிளம்பினான் வேதாசலம். சாயாஜியும் தடுக்கவில்லை. 'பாவம், இராப்பகலாக உழைக்கிறான்' என்று முணுமுணுத்துக் கொண்டான். வேதாசலம் மார்க்கெட் சந்தை நோக்கி விரைந்தான்: அவனுக்கு முன்பாகவே மரகதம் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தாள்.



"ஐயா கோர்ட்டுக்குப் போகப் போகிறார், சீக்கிரம் வேலைகளை முடிக்கணும், தெரிந்ததா!"

"ஐயையோ! கோர்ட்டுக்குப் போகும்படியாக என்னங்க வந்துட்டுது?"

"ஒன்றும் வந்துவிடவில்லை. அவர் வக்கீல். அதனாலே கோர்ட்டுக்குப் போகிறார்!"



"உனக்கு ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் வேதாசலம். இரண்டு மூன்று தினங்களாகக் கண் விழித்ததால் கண்கள் இடுங்கி இருந்தன. தலை மயிர் வாரப்படாமல் முகத்திலெல்லாம் விழுந்து கிடந்தது. முகத்தில் களையில்லாவிடினும் களிப்புக் கூத்தாடியது.

"அது இருக்கட்டும்...என்னங்க இப்படி முகமெல்லாம் ஒடுங்கிப் போய் இருக்கிறதே!... எங்கள் எசமானி யம்மா தான் வாட்டுகிறார்களென்றால் அங்குமா இப்படி..." என்று கூறும் போது மரகதத்தின் கண்கள் அவனைப் பரிவுடன் ஏற இறங்கப் பார்த்தன.

வேதாசலம் இதையெல்லாம் கவனிக்கவில்லை. "இன்றைக்கு இரவு தீபாவளி இல்லையா, மரகதம்! உனக்கு ஒரு பரிசு கொண்டு வந்திருக்கிறேன்!" என்று கூறிய வண்ணம் அந்த ரவிக்கைப் பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தான்.

அதைப் பிரித்துப் பார்த்த மரகதம், "அம்மாடி! இம்மாம் விலைத்துணி எனக்கு எதற்கு!" என்றாள். வேதாசலம் அவளை இடைமறித்து, "அது பற்றி உனக்கு என்ன மரகதம்! நம் இன்பத்துக்கு இது ஒரு விலையாகுமா! அடுத்த தீபாவளிக்குப் புருஷனும் பெண்சாதியுமாக..." என்று முடிப்பதற்குள் மரகதத்தின் முகத்தில் வெட்கம் கொப்புளித்தது. அடுத்த கணம் அவள் 'சர்' என்று அங்கிருந்து எங்கோ மாயமாய் மறைந்து விட்டாள்.

*　　　*　　　*

எப்படியோ ஒரு வழியாகத் துணிகள் தைத்து முடிந்தது. இரவுக் கிரவே அந்தத் துணிகளைச் சாயாஜி தான் எடுத்துக் கொண்டு அவரவர்கள் வீட்டில பட்டுவாடா செய்யப் புறப்பட்டான்.

மரகதத்தின் எஜமானி—அதுதான், 'நீல பங்களா'வின் எஜமானியின் வீட்டிற்குள் சாயாஜி நுழைந்தவுடனேயே, "வா, அப்பா! உனக்காகத்தான் காத்திருக்கிறோம். எங்கே தீபாவளிக்குத் துணி கொடுக்காமல் போய்விடப் போகிறாயோ என்று பயந்தோம்" என்று வரவேற்றாள் எஜமானியம்மாள்.

அவசரம் அவசரமாக மூட்டையை அவிழ்த்து உதறிய மங்களபாக்கியம் பரபரப்பான குரலில், "அம்மா...இவன் புள்ளி போட்ட ஒமேகா ரவிக்கைக் கொண்டு வரவில்லையே! அதைத் தானே நாளைக்குப் போட்டுக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தேன்..." என்றாள்.

"அம்மா! அவர் ஆசையாக வாங்கித் தந்ததாயிற்றே!" என்று இடை இடையே அவள் உதடுகள் முணுமுணுத்தன.

"இருக்குமடி......மெள்ளப் பாரம்மா ......" என்று சொல்லிக் கொண்டே எஜமானியம்மாள் தையற்காரனை அந்தத் துணியைக் குறித்து வினவினாள். இதுவரை எந்த வீட்டிலிருந்தும் 'துணியைக் காணோம், துணியின் அளவைக் குறைத்துத் துணியை அபகரித்துக் கொண்டான்' என்ற பெயர் வாங்காத சாயாஜியை இந்தப் புகார் திடுக்கிடச் செய்தது.

"அம்மா ... தைக்கக் கொடுத்தீங்களோ, இல்லியோ! நன்றாக வீட்டிலே இருக்கிறதா பாருங்கள், அம்மா!" என்றான் சாயாஜி மிகவும் பணிவாக.

இரண்டு எஜமானிகளும் சிங்கம் புலியாகினர்.

வருத்தத்துடன் தலை குனிந்தவாறு சாயாஜி கடைக்குத் திரும்பினான். எல்லா வேலையாட்களும் அவரவர் வீட்டிற்குத் திரும்பி விட்டனர். விளக்கை ஏற்றிக் கடை முழுதும் தேடினான். இவ்வளவு நாட்கள் கஷ்டப்பட்ட தினத்தும் வியர்த்தமாகிவிட்டதே என்று மனம் துடித்தான்.

*　　　*　　　*

மறு நாள் காலையில் மரகதம் தலை முழுகி விட்டு அன்புப் பரிசாக, இன்பத்தின் விலையாகக் கிடைத்த அந்த ரவிக்கையை அணிந்து கொண்டாள். அவள் உடலுக்கு அது அழகாகத்தானிருந்தது. ஆனால் அதற்குத் தக்கபடி புடவையும் இருந்திருந்தால்......

அந்த ரவிக்கையை அணிந்தவாறே வேலை செய்யக் கிளம்பினாள். அந்த ரவிக்கையுடன் எஜமானியின் கண்களில்பட அவளுக்கு வெட்கமாக இருந்தது. எனினும் தோளை இழுத்து மூடிக் கொண்டு பங்களாவுக்குள் நுழைந்தாள்.

ஆனால் கிணற்றில் ஜலம் இழுக்கையில் அந்தப் பக்கம் சோர்வுற்று வந்த மங்களபாக்கியம் எதேச்சையாக மரகதத்தைக் கவனித்தாள். தான் காணவில்லை என்று தையற்காரனிடம் புகார் செய்த ரவிக்கையை வேலைக்காரி அணிந்து கொண்டிருப்பதைக் கண்டவுடன் மங்களபாக்கியத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

உள்ளே ஓடினாள். "அம்மா, அம்மா! நேற்று தைத்து வரவில்லை என்று சொன்னேனே, அந்த ரவிக்கையை வேலைக்காரி போட்டுக் கொண்டிருக்கிறாள்! அம்மா...வாயேன், வந்து பாரேன்!"

என்றான். அதைக் கேட்டவுடன் எஜமானி யம்மாள் ஓடி வந்தாள்.

மரகதம் அணிந்திருந்தது மஞ்சபாவுணியி னுடையதுதான் என்பது தெளிவாகிவிட்டது.

''ஏய்...... ஏதுடீ ரவிக்கை...!'' என்ற எஜமானியின் பயங்கரக் குரலைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டுத் திரும்பினாள் மரகதம்.

தான் அணிந்திருக்கும் புது ரவிக்கையைப் பார்த்துத்தான் எஜமானி அதுபோல் கத்துகிறாள் என்பது அவளுக்குப் புரிந்தது. 'வேலைக்காரி என்றால் புதிதாக ஒன்றும் போட்டுக் கொள்ளக் கூடாதா' என்று எண்ணிக் கொண்டாள்.

''என்னடீ முழிக்கிறாய்! திருடி! ரவிக்கை ஏதுடீ!'' என்று மறுபடியும் பாணம் கிளம்பவே மரகதம் திடுக்கிட்டுப் போனாள்.

திருடியா!...எஜமானி என்றால் எது வேண்டுமானாலும் பேசி விடலாமா! இருக்கட்டும், இனி அந்த ஜம்பம் என்னிடம் சாயாது என்று எண்ணிக் கொண்டாள் மரகதம். அது சரி, எது ரவிக்கை என்கிறாளே, என்னவென்று சொல்வது! அவர் வாங்கிக் கொடுத்தார் என்றால்......அவர் புருஷனா...கள்ளப் புருஷன் என்று கேலிசெய்து பழி சொன்னால்......ஒரு விநாடி மரகதம் செயலற்று நின்றாள். பிறகு, ''எங்க, என் அத்தான் வாங்கிக் கொடுத்தாரு!'' என்றாள் கம்பீரமாக. அவளுடைய கண்கள் எஜமானியை ஏற இறங்கப் பார்த்தன.

அவளுடைய பதில் எஜமானியின் சந்தேகத்தையும், ஆத்திரத்தையும் அதிகப்படுத்தியது.

''எந்தத் திருட்டுப்பயலடி உன் அத்தான்! திருட்டுக் கழுதை ...... ரவிக்கையை அவிழ்த்து வையடீ......திருட்டுக் கழுதைகளை வேலைக்கு வைக்கிறதே தப்பு......'' என்று எஜமானியம்மாள் சரமாரியாகப் பொழிந்து கொண்டே போனாள்.

மரகதத்திற்கு நன்றாக விளங்கி விட்டது. வேலைக்காரி என்றால் இளப்பம்; 'அவள் புது உடை அணியக் கூடாது; அப்படி அணிந்தால் அது திருடப்பட்டது — இந்தக் கொள்கையை எஜமானி தன்னிடம் காட்டுகிறாள் என்று திடமாக முடிவு செய்த மரகதம், மேற்கொண்டு அங்கு நின்று பேச விரும்பாமல், ''சொல்கிறேன் அம்மா, சொல்கிறேன்! எந்தத் திருடன் வாங்கிக் கொடுத்தான் என்பதைச் சொல்கிறேன்'' என்று கூறிக்கொண்டே விரைந்தாள் வீடு நோக்கி.

வேலைக்காரியின் பதிலும், திருட்டு வஸ்து மீனாதமும் எஜமானியின் ஆத்திரத்தை அதிகமாக்கின. இவ் விஷயத்தை லேசில் விடக்கூடாது என்று எண்ணி உடனே போலீசுக்குப் புகார் செய்தாள்.

ஹெட் கான்ஸ்டேபிள் ஒருவர் உடனே விசாரணைக்கு வந்தார். விவரம் அறிந்த அவர் குற்றவாளியைக் கண்டு பிடிக்க மரகதத்தின் குடிசையை அடைந்தார்.


தன் 'அத்தான்' தைத்துத் தீபாவளிக்காகக் கொடுத்தது என்று கூறியதை யறிந்து அவள் அத்தானைத் தேடிப் போனார் அவர்.

காலையில் அப்பொழுதுதான் மெஷினுக்கு எண்ணெய் விட்டுக் கொண்டிருந்தான் வேதாசலம். சாயாஜி காணமல் போன துணியைப் பற்றிக் கடையிலுள்ளவர்களை யெல்லாம் விசாரித்துக் கொண்டிருந்தான்.

ஹெட் கான்ஸ்டேபிள் வந்து வேதாசலத்தைப் பற்றி விசாரித்ததும் சாயாஜிக்கு நம்பிக்கையே இல்லை. வேதாசலம் அப்படிச் செய்யமாட்டான் என்றே முதலில் எண்ணினான். பிறகு 'எந்தப் புற்றில் எந்தப் பாம்போ! இப்பொழுதெல்லாம் பயல் மாறித்தான் வருகிறான்! எவளுக்குக் கொண்டு விற்றானோ, என்னவோ!' என்று எண்ணினான். உடனே சாயாஜி ஹெட் கான்ஸ்டேபிளிடம், ''செய்கிறதைச் செய்து உண்மையைக் கக்க வையுங்கள். ஒரே நாளிலே கடைக்குக் கெட்டப் பெயரைக் கொண்டு வந்து விட்டான். இப்படிப்பட்டவனை......!'' என்றான்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னிலையில் வேதாசலம் நிறுத்தப்பட்டிருந்தான். மரகதமும் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தாள். மரகதத்தைக் கண்டவுடனேயே 'ஐயோ! அவள் என்ன நினைப்பாள்!'' என்று துடிதுடித்தான் வேதாசலம்.

''தையற்காரன்—ஏழை என்றால் திருடித்தான் அவன் இன்பத்துக்கு விலையாக்கிக் கொள்ள வேண்



டும் என்பதில்லை. என் சொந்தப் பணம் போட்டு வாங்கினேன்'' என்று வாதாடினான் வேதாசலம்.

இதைக் கேட்டு இன்ஸ்பெக்டரும், மற்ற போலீஸ்காரர்களும் ஏளனமாகச் சிரித்தார்கள்.

'' நீ மகாப் பிரபு! வெறும் ஐந்து ரூபாய்த் துணி தான் உன் ஆசை நாயகிக்கு வாங்கிக் கொடுப்பாய். இல்லையா! ஏமாந்து யாராவது இருந்தால் வைர நெக்லேஸ் கூட வாங்கிக் கொடுப்பாய்!'' என்றார் இன்ஸ்பெக்டர் கிண்டலாக.

''வேண்டுமானால் கடையில் வாங்கிய பில்லைக் காட்டுகிறேன், ஸார்!'' என்று பையைத் துழாவினான். ஸிகரெட் பாக்கெட்டும் நாலணா சில்லறையும் கைக்கு அகப்பட்டதே யொழிய 'பில்' அகப்படவில்லை.

மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனில் கேலிச் சிரிப்பு எழுந்தது.

'' இருநூற்று நாற்பது! நம் ஐயா இப்படியெல்லாம் சொன்னால் உண்மையைக் கூற மாட்டார். கொஞ்சம் பிடித்துப் பாரு'' என்று இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார். அப்பொழுது டெலிபோன் மணி கண கண வென்று ஒலித்தது. என்ன வென்று அறியத் திரும்பினார்.

வேதாசலத்திற்கு ஏதோ கோபுரமே சாய்ந்து தலையில் வீழ்ந்தது போலிருந்தது. இன்பமடைய இதெல்லாம் விலைகளா என்று உள்ளத்தே விம்மினான். 'மரகதம் தன்னைப்பற்றி என்ன நினைப்பாள்! உண்மையை ஒப்புக் கொள்ள யாருமில்லையே உலகில்!' என்று எண்ணினான்.

'திருடியாவது பரிசு கொடுக்க வேண்டுமா!' என்று அவள் எண்ணிவிட்டால்—ஐயோ...அவன் இருதயத்தை பெரும்பாரம் அழுத்துவது போலிருந்தது இந்த நினைப்பு.

ஸப் இன்ஸ்பெக்டர் டெலிபோனைக் கீழே வைத்துவிட்டு, ''தேவலை அப்பா......ஆளு கை ராசிக்காரன். எல்லாம் அவன் பக்கம்தான் ஜயம்'' என்றார். அதைக் கேட்ட ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை.

'' யாரைச் சொல்லுகிறீங்க!'' என்று ஹெட் கான்ஸ்டேபிள் கேட்டார்.

''வேறு யாரைச் சொல்லுவேன்! இதோ நிற்கிறார், பார்! இவரைத்தான்!'' என்றார் இன்ஸ்பெக்டர் வேதாசலத்தைச் சுட்டிக் காட்டி.

அதற்குள் வாசலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து 'நீல பங்களா'வின் எஜமானி, சாயாஜி ராவ், மஞ்சுபாஷிணி ஆகியோர் இறங்கி ஓடோடி வந்தனர்.

''மன்னிக்க வேண்டும், இன்ஸ்பெக்டர்! எங்கள் வீட்டு வேலைக்காரி போட்டுக் கொண்டிருக்கிற அதேமாதிரித் துணியைத்தான் என் பெண்ணுக்கும் என் மருமகன் வாங்கிக் கொடுத்திருக்கிறார். ஆசையாக, தீபாவளிக்குப் போட்டுக்கொள்ளலாம் என்று நினைத்தபோது துணி காணாமல் போய் விட்டதில், அதுவும் வேலைக்காரி அதேமாதிரி ரவிக்கை போட்டுக்கொண்டு வந்தாள்......உம், அனாவசியமான சந்தேகம்... இந்தத் தையற்காரர் சாயாஜி ராவ் என்ன செய்தாராம் தெரியுமா!... நேற்று ராத்திரி டெபுடி கலெக்டர் வீட்டுத் துணிகளைக் கொண்டு போய்க் கொடுத்தாராம். காலையில் அவர்கள் தங்கள் துணி அல்லாத ஒன்று தைத்து வந்திருப்பதைக் கண்டு அதை உடனே இவரிடம் கொடுத்து வரச் சொன்னார்களாம். அந்த வேலைக்காரன் வீட்டிலே தூங்கிவிட்டு இன்று காலையில் தான் சாயாஜியிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறான். 'வேதாசலம் என்ற நம் வேலைக்காரன் மேலே அனாவசியமாகப் பழி சுமத்தினோமே!' என்று ரவிக்கையைத் தூக்கிக்கொண்டு சாயாஜி ராவ் எங்கள் வீட்டுக்கு ஓடி வந்திருக்கிறார்'' என்று விஷயத்தை விளக்கினாள். ஸப் இன்ஸ்பெக்டர் புன்முறுவலுடன் ''அப்படியானால் வேதாசலம் அதிக விலை கொடுத்தும் அந்த ஸில்கை வாங்கியிருக்கிறார் என்று ஆகிறது. காதல் என்றால் காசைப் பார்க்க முடியாதுதானே!'' என்றார்.

எல்லோரும் சிரித்தனர். மரகதத்தின் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஆனால் வேதாசலம் குனிந்த தலை நிமிராமல் அந்த இடத்தை விட்டு வந்துவிட்டான். தன் காசைப் போட்டு வாங்கியும் இத்தனைக் களேபரம் ஆகிவிட்டதே என்று எண்ணி மிகவும் வருத்தப் பட்டது அவன் உள்ளம்.

* * *

ஆனால் தீபாவளி கழிந்து கார்த்திகை வருவதற்குள் வேதாசலம் புது மனிதனாகிவிட்டான்.

தனியே ஒரு வீட்டுத் திண்ணையில் 'வேதாசலம் ஜெண்ட்ஸ் டெய்லர்' என்ற போர்டு தொங்கப் பழையபடி குனிந்த தலை நிமிராமல் தைத்துக் கொண்டிருந்தான். இப்போது அவனே முதலாளி. வீட்டின் உள்ளே ஒரு சிறு அறையில் அவர்கள் குடித்தனமிருந்தனர். மஞ்சள் கயிறு கழுத்தில் விளங்க, கால் மெட்டிகள் கலகலவென ஒலிக்க அதே ஸில்க் ரவிக்கையைப் போட்டுக் கொண்டு இடுப்பில் குடத்துடன் வரும் மரகதத்தின் புன்முறுவலுக்காக, அந்த இன்பத்துக்காக, வேதாசலம் என்ன விலை கொடுத்தாலும் தகும் அல்லவா!



'' நாயுடுகாரு, ஒரு உபகாரம் செய்ய வேண்டும். பர்ஸை வீட்டில் வைத்து விட்டு வந்து விட்டேன். ஒரு ஐந்து ரூபாய் இருந்தால் கொடுங்கள்!''

'' அடாடா! அப்படியா, இந்தாருங்கள் மூன்று அணா! பஸ்ஸில் போய்ப் பர்ஸை எடுத்துக் கொண்டு வந்து விடுங்கள்!''



கோமதி சுப்ரமணியம்

இரண்டு வருஷங்களுக்கு அப்பால் இப்பொழுது தான் செல்லுகிறேன் என் பிறந்த வீட்டிற்கு. அதுவும் என் அண்ணாவின் வற்புறுத்திய அழைப்பின் பேரில். நெடு நாட்களாகப் பிறந்த வீட்டை எட்டிப் பாராதிருப்பதால் எனக்குப் பிறந்த வீட்டு மனிதர்கள் மீது ஆசையில்லை என்று சொல்லிவிட முடியாது. சொல்லப் போனால் அவர்கள் மீது கொண்டுள்ள அதிக ஆசை தான் அங்கு செல்வதற்குத் தடையாக இருந்தது என்று சொன்னாலும் பொருந்தும்.

எனக்கிருப்பது ஒரே அண்ணா. அவருக்கிருப்பது நான் ஒரே தங்கை. ஆனால் எங்களிருவரிடையே பரஸ்பர அன்பு அதிகம். இந்த அன்பைக் கலங்கப் படுத்திக் கொள்ளக்கூடாதென்பதே நான் பிறந்த வீடு செல்லாததின் முக்கிய காரணம். புரியவில்லையா! விவரமாக சொல்லுகிறேன்.

மாமி, நாத்தி என்பவள் கொடுமைப் படுத்துவதற்கென்றே பிறந்தவள் என்கிற மனப்பான்மை நம்மையறியாமலே நம் மனதில் ஊறிப் போயிருக்கும் விஷயம். படங்களிலும், கதைகளிலும் அதையே சித்தரித்துப் பொதுஜனங்களின் நன்மதிப்பையும் பணத்தையும் பறித்துக் கொள்கிறார்கள். ஏன்! நம் வாழ்க்கையில் காணும் காட்சியே பெரும்பாலும் அதுதானே! அவ்விதிக்கு விலக்கான நாத்தனார்களை உலகிலேயே காண முடியாதா! தான் நல்லவளாக நடந்து தன் நாத்தனாரையும் நல்லவளாக்க முயலவேண்டுமென்பது தான் என்னுடைய கொள்கை.

என்னைக் கொடுமைப்படுத்த எனக்கு நாத்தனாரில்லை. ஆனால் நான் சமீபத்தில் தான் நாத்தனாராகியிருந்தேன். சிறு வயதிலிருந்தே ஊறிப் போயிருந்த எண்ணம் இப்பொழுது தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியிருந்தது. எப்படியும் என் அண்ணியின் வாயால் கொடுமைக்காரி என்ற சொல் வராமல் என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இதுதான் என்னுடைய ஆர்வம், ஆசையெல்லாம். இதற்காகவே என்னுடைய முழு ஆவலையும் அடக்கிக் கொண்டு பிறந்த வீட்டுப் பக்கமே திரும்பாதிருந்தேன்.

இரண்டு வருஷத்திற்குள் என்னை வரச்சொல்லி இருநூறு கடிதங்களுக்கு மேல் வந்துவிட்டன. ஒவ்வொரு கடிதத்தைப் படிக்கும் போதும் உடனே புறப்பட்டுப் போய்விட வேண்டுமென்கிற ஆவல் கட்டுக் கடங்காமல் துடிக்கும். உடனே என்னையே நான் அடக்கிக் கொள்வேன். பிறந்த வீட்டில் சீராடப் போகும் பெண்கள் திரும்பும் பொழுது அண்ணன் மனைவியிடமோ அல்லது தம்பி மனைவியிடமோ சண்டையில்லாமல் திரும்பினாள் என்பது கிடையாது. தவறு யார் மீதோ...! இருவர் மீதும் இருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும் சரி, நாத்தனார்க்காரி வந்தாள். கலகம் மூட்டி விட்டுப் போகிறாள் என்கிற அவப் பெயர் என்வரை வரக்கூடாதென்கிற தீர்மானத்திலேயே என் பிறந்த வீட்டு ஆசையை மறந்திருந்தேன். ஆனால் அன்று வந்த அண்ணாவின் கடிதம் என்னைத் தூக்கி வாரிப்போட்டு என் கொள்கையையே மாறச் செய்துவிட்டது.

"முன்பெல்லாம் பிறந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போவாய். நீ இப்பொழுது உன் அண்ணியின் வருகைக்குப் பிறகு வரவேயில்லை. கலியாணத்திற்கு வந்தவள்தான். உன் அண்ணி உன்னைப் பற்றி மிகவும் குறைப்பட்டுக் கொள்கிறாள். நான் இருக்கும்பொழுது உங்கள் தங்கை வர விரும்பாவிட்டால் நான் வேண்டுமானால் என் பிறந்த வீடு செல்கிறேன் என்கிறாள் உன் அண்ணி. நீ வரப் போகிறாயா!..."

இதற்கு முன் எத்தனையோ கடிதம் எழுதி விட்டார் அண்ணா. ஒரு கடிதத்திலும் இந்தக் குற்றச் சாட்டு இல்லை. இது ஏதடா விபரீதம் என்று உடனே புறப்பட்டு விடத் தீர்மானித்து விட்டேன். திருச்சி மலைக்கோட்டையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு வெகு நாட்களாக உண்டு. இப்பொழுது அண்ணாவை அங்கே மாற்றியிருப்பதால் ஒரு முறை அங்கு போய்வர வேண்டுமென்றிருந்தேன். அதோடு என் அண்ணியின் மனக் குறையைத் தாங்கி வந்த கடிதமும் சேர்ந்து கொள்ளவே அந்தக் கணமே என் பிரயாணத்தைத் தொடங்கி விட்டேன்.

மனதில் மட்டும் உறுதியான தீர்மானம் செய்து கொண்டேன், அண்ணியிடம் அதிக சகஜமாகப் பழகுவதோ பேசுவதோ கூடாதென்று. அதிக நெருக்கம் தானே குற்றம் குறைவுக்கு ஏதுவாக அமையும்! ஆகவே ஒதுக்கித் தெரிந்தாற் போல் பழக வேண்டும் என்ற எண்ணத்தை நெஞ்சில் பதித்துக் கொண்டேன். அதன்படியே என்னை ஆசையோடு வரவேற்ற என் அண்ணியிடம் குசலப் பிரச்னம் விசாரித்ததோடு சரி. அதன் பிறகு வழவழ வென்று எதையாவது பேசிக் கொண்டிராமல் கௌரவமாக என் இதர வேலைகளைக் கவனிக்க நழுவிக் கொண்டேன்.

வந்த சில நாளைக்குள் அடுத்த வீட்டிலிருந்த அம்புஜா என் அத்யந்த சிநேகிதியாகி விட்டாள். அம்புஜாவுடன் அடிக்கடி வெளியில் சென்று வருவேன். அவளுக்குத் தெரிந்த தோழிகளையெல்லாம் நாங்களிருவருமாகச் சந்தித்து நெடுநேரம் அரட்டை அடித்து விட்டு வருவோம். வீட்டிற்கு வந்தாலும் பெரும்பாலும் இருவரையும் சேர்ந்தே காணலாம். தற்கால இலக்கியத்தைப் பற்றியோ அல்லது சினிமா உலகத்தைப் பற்றியோ சர்ச்சையில் இறங்கி விட்டாலோ அவ்வளவுதான். எங்கள் சுற்றுப்புறத்தையே அடியோடு மறந்து விடுவோம். எத்தனை நேரம் அப்படி அரட்டையில் பொழுது கழியுமோ, அண்ணா வந்து என்னைச் சாப்பாட்டுக்கு அழைக்க வரும் போதுதான் என் தோழி எழுந்து செல்வாள். நானும் அண்ணாவைப் பின்பற்றி வருவேன்.

சாப்பிட உட்கார்ந்தாலோ அண்ணாவுடன் அரட்டை தொடங்கிவிடும். எங்கள் குழந்தைப் பருவச் சம்பவங்கள், வருங்காலத் திட்டங்கள் அல்லது எங்கள் உறவினர்கள் இவர்களைப்பற்றிப் பேச்சு அடிபடும். எங்கள் பேச்சு மும்முரத்தில் அண்ணி ஒருத்தி இருப்பதைக்கூட மறந்துவிடுவோம். ஒரோரு சமயம் என்ன சாப்பிட்டுக் கொண்டிருந்தோம், என்ன சாப்பிடப் போகிறோம் என்பதைக்கூட மறந்துபோய்க் குழம்புக்குப் பதில் ரஸத்தையும் ரஸத்துக்குப் பதில் மோரையும் விட்டுக் கொள்ளும்போது அண்ணியின் சிரிப்பொலி எங்களை இவ்வுலக நினைவுக்குக் கொண்டு சேர்க்கும்.

"அழகாய்த்தானிருக்கிறது, அண்ணா தங்கையின் பேச்சு சுவாரஸ்யம். சாப்பாட்டை முடித்துக் கொண்டு பிறகு பேச்சில் இறங்கப்படாதோ!" என்று கேட்பாள்.

அன்று அப்படித்தான் ஏதோ விசேஷமென்று பாயஸம் வைத்திருந்தாள் அண்ணி. சாப்பாட்டின் ஆரம்பத்திலேயே தேசத்தின் தற்கால நிலையைப் பற்றிய சர்ச்சை தொடங்கி விட்டதால் அண்ணி பாயசம் கொண்டு வைத்திருந்ததைப் பார்க்காமலே டம்ளரில் ரசமோ மோரோ என்று எண்ணிச் சாதத்தோடு போட்டுக் கொண்டேன். அண்ணிக்குக் கோபமே வந்துவிட்டது.

"நாளைமுதல் சாப்பாட்டு நேரத்தில் மௌன விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென்கிற சட்டம் கொண்டு வரப்போகிறேன். அப்படியானால் தான் ஒழுங்காகச் சாப்பாடு நடக்கும்" என்று சிரித்துக் கொண்டே கூறினாள் அண்ணி.

பேச்சு சுவாரஸ்யத்தில் கவனித்துச் சாப்பிடாமல் இளைத்துப் போய் விடுவேனாம். என் அண்ணிக்குத்தான் எத்தனை ஆசை என்மீது!

என் அண்ணி என்னுடைய வருகைக்காக எத்தனை ஆவலுடன் துடித்துக் கொண்டிருந்தாளோ, வயதில் ஜோடியான என்னுடன் எப்படியெல்லாம் கொம்மாள மடிக்க வேண்டுமென்று கோட்டை கட்டிக் கொண்டிருந்தாளோ! அதற்கெல்லாம் ஏமாற்றமாக நான் நடந்துகொண்ட முறை அவளைப் பெரிதும் பாதித்திருக்க வேண்டுமென்பதைப் பிறகு தான் தெரிந்து கொண்டேன்.

"என்னைக் கண்டால் உங்கள் தங்கைக்குப் பிடிக்கவேயில்லையா, என்ன! அடுத்த வீட்டுப் பெண்களுடன் பழகும் சகஜம் கூடவா என்னிடம் பழகக் கூடாது!" என்று அண்ணாவிடம் தன் குறையை வெளியிட்டுக் கொண்டாள்.

"ஆரம்பித்து விட்டாயா உன் கலகத்தை! அடுத்த வீட்டுப் பெண்ணிடம் நாத்தனார், மதனி துவேஷமில்லாமல் நெருங்கிப் பழக முடியும். நீ நேற்று வந்தவள்தானே! உன்னிடம் எப்படி மனம் விட்டுப் பழக முடியும்!"

அவர்கள் சம்பாஷணையின் மூலம் அண்ணியின் ஏக்கம் எனக்குப் புரிந்தது. அவள் மனம் நோக எனக்குப் பொறுக்கவில்லை. அப்போதைய நிலையைச் சமாளிக்க எண்ணி என் அண்ணிக்காகப் போட்டிருந்த பூவேலை செய்த ஜாக்கெட் ஒன்றை எடுத்துக்கொண்டு அவர்களிருந்த அறைக்குச் சென்றேன்.

"அண்ணி, இதோ பார்! இந்தப் பூவேலை உனக்குப் பிடிக்கிறதோ!" என்று கூறிக்கொண்டே அவர்களை நெருங்கினேன். அப்பொழுது அண்ணா அவளைப் பார்த்த பார்வை, 'என் தங்கை உன்மீது எத்தனை பிரியமாயிருக்கிறாள்! உனக்காக சிரத்தையெடுத்துப் பூவேலை செய்கிறாளே, அன்பில்லாமலா!' என்று கேட்பது போலிருந்தது.

★

ஒருவர் மனதை மற்றவர் புரிந்து கொண்டதைப்போல் அன்று முதல் இருவரும் மனம் விட்டுப் பேசிப் பழகினோம். அன்றைய சம்பவம் என்போக்கை அடியோடு மாற்றி விட்டிருந்தது. இப்பொழுதெல்லாம் எந்த நேரமும் ஊர் சுற்றித் திரியாமல் என் அண்ணிக்கு அநுசரணையாகச் சமையல் வேலைகளில் ஈடுபடுவேன். ஆனால் அண்ணி அதற்குச் சம்மதிக்க மாட்டாள். "நாலு நாளைக்கு வந்திருப்பவள் நீ எதற்காக வேலை செய்வதாம். தினமும் செய்கிற வேலைதானே! இன்றைக்கும் நான் கவனித்துக் கொள்கிறேன். நீ சிரமப்படாதே!" என்று தடுப்பாள்.

"நானும் உன்னைப்போல் குடும்பம் நடத்தும் பெண்தான். எனக்கும் வேலை செய்து பரிச்சயமுண்டு. மேலும் நீயே தனியாகச் செய்யும்வரை பார்த்துக் கொண்டிருப்பதைவிட இருவருமாக சேர்ந்து முடித்துவிட்டுச் சற்று நேரம் பொழுது போக்கிக் கொண்டிருக்கலா மல்லவா!" என்று



மாஜிஸ்ட்ரேட்:—நீ ஏன் உனக்குச் சிகிச்சை செய்த டாக்டரின் கைக்கடிகாரத்தைத் திருடினாய்?

குற்றவாளி:—டாக்டர் மூன்று மணி நேரத்துக்கு ஒருதடவை சாப்பிடச் சொல்லி மருந்து கொடுத்தார். ஆனால் என்னிடம் கடிகாரம் இல்லை. ஆகையினால்......

பலவந்தமாக அவளுடைய வேலையில் பங்கெடுத்துக் கொள்வேன்.



எத்தனை அன்பான குணம் வாய்ந்தவள் என் அண்ணி. அன்பு மனம் படைத்த அண்ணியின் அருமை தெரியாமல், இதுவரை அவள் அன்பை அனுபவிக்க முடியாமல் இருந்துவிட்ட என் அறியாமையைப் பல தடவை நொந்து கொண்டேன். நான் வந்து கிட்டத்தட்ட இருபது நாட்களாகி விட்டன. முதல் ஒரு வாரம் கழிந்ததில் விசேஷமொன்றுமில்லை. மீதி நாட்களைக் கழித்ததுதான் என் மனதில் இன்பத்தை நிறைத்த நாட்கள். வீட்டிலிருக்கும் நேரம் ஒற்றுமையாய் வேலையைக் கவனித்துவிட்டு மாலை நேரம் எங்கேயாவது வெளியே புறப்பட்டு விடுவோம். இந்தப் பத்து இருபது நாட்களில் நாங்கள் சுற்றாத இடமே யில்லை. திருச்சி சுற்று வட்டாரம் பூராவும் ஒரு தரம் சுற்றி விட்டோம். மலைக் கோட்டை ஒன்று தான் பார்க்க வேண்டிய பாக்கி இடம். உயரே மலையில் ஏறிப் பார்க்க விரும்பியதால் அண்ணாவின் துணை வேண்டுமென்பதற்காக அவர் ஆபீஸ் விடுமுறை நாளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தோம்.

அன்று அண்ணா வழக்கத்திற்கு மாறாகச் சாயந்திரமே ஆபீஸிலிருந்து வீடு திரும்பி விட்டார். அவர் வரும் நேரம் நான் மாவரைத்துக் கொண்டிருந்தேன். என் அண்ணி ஏதோ புஸ்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள். நான் வேலை செய்யவும் என் அண்ணி புஸ்தகம் படிக்கவுமாக இருந்த காட்சி அண்ணாவுக்கு மிருந்த ஆத்திரத்தை மூட்டி யிருக்க வேண்டும்.

"அழகாய் இருக்கிறதே உன் வேலை. எஜமானி அம்மாள் புஸ்தகம் படிக்க வேறு நேரமே அகப்பட வில்லையோ! அவள்தான் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுமோ!" என்று கடுமையுடன் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

நான் திடுக்கிட்டேன். அண்ணிமீது சுமத்தப்பட்ட பழி அபாண்டமென்று பட்டது எனக்கு. "அண்ணி என்னை அரைக்கவே விடவில்லை, அண்ணா! நானாகத்தான் பலவந்தமாகச் செய்கிறேன்" என்று கூறினேன். என் அண்ணா அதை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை.

"அப்படித்தான் சொல்லுவாய். பின்னே விட்டுக் கொடுத்தா பேசுவாய்!" என்று என்னை முறைத்துவிட்டு அண்ணியைக் கடுமையாகக் கடிந்து கொண்டார்.

"விருந்தாளியாக வந்தவள் விமலா. உன் வீட்டு வேலைக்காக வரவில்லை என்பதை ஞாபகம் வைத்துக் கொள்" என்று அண்ணா அதட்டியபோது அண்ணிக்கு அழுகையே வந்துவிட்டது.

"நானா வேலை செய்யச் சொன்னேன் உங்கள் தங்கையை!"

'உங்கள் தங்கை' என்ற சொல் விகல்பமாகப் பட்டது என் செவிகளில்.

"சொன்னால் கேட்டால் தானே......" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அண்ணி. அவள் சொல்லும், சொன்ன விதமும் என் மனதில் சினத்தை மூட்டியது. என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள் அண்ணி. பலவந்தமாய்ப் பிடுங்கிச் செய்து இப்பொழுது உன் அண்ணாவின் வசவை வாங்கிவைத்தாயே என்று சொல்வது போலிருந்தது அவள் பார்வை. ஒருவருமே ஒன்றும் பேசவில்லை.

இப்பொழுதெல்லாம் அண்ணி என்னிடமோ அண்ணாவிடமோ முன் போல் கலகலப்பாய்ப் பேசுவதில்லை. எத்தனை தான் அவளுக்கு என்மீது அன்பிருந்தாலும் அண்ணா என்மீது செலுத்தும் அளவுகடந்த பரிவு அவள் மனதில் விகல்பத்தை மூட்டி யிருக்க வேண்டும். எப்பொழுதும் எதையாவது வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து பொழுதைப் போக்குவாள். நான் அவளுக்கு ஒத்தாசை செய்யப் புகுந்தால் நிஷ்டூரமாக நிராகரித்து விடுவாள். அவள் சொல்லும் தோரணை 'வேண்டுமென்றே என்னைப் பிடுங்கிச் செய்து விட்டு உன் அண்ணாவிடம் வசவு வாங்கி வைக்கவா' என்கிற அர்த்தத்தில் தொனிக்கும். பேசாமல் அடங்கிப் போவேன். இன்பமாகக் கழிந்த நாட்களில் சலனம் மூளத் தொடங்கி விட்டது. இனி எந்த நேரம் என்ன புயல் வீசத் தொடங்குமோ என்ற அச்சம் ஏனோ என் மனதில் மூண்டுவிட்டது. இனியும் இங்கிருப்பது நலமாகாதென்று தோன்றியது. ஊருக்குப் போக வேண்டும் என்றேன். இருக்கச் சொல்லித் தொந்தரவு செய்யாமலிருப்பதற்காக அவர் வரச் சொல்லிக் கடிதமெழுதி யிருக்கிறார் என்கிற பொய்யையும் திரித்துக் கூறினேன். போகுமுன் உச்சி மலைக்குப் போய் வந்துவிடுவோமென்று மறு தினம் ஆபீஸில் லீவு சொல்லிவிட்டு வந்திருந்தார் அண்ணா.

மறுநாள். நேரத்தோடு மலைக்குப் புறப்பட வேண்டுமென்பதற்காக வீட்டு வேலையில் அண்ணியுடன் ஒத்தாசைக்குச் சென்றேன். அண்ணி என்னைக் கலந்து கொள்ள விடவில்லை.

"வேலைக்கு என்ன அவசரம், விமலா! நான் எங்கே போகப் போகிறேன்! மெதுவாகச் செய்து கொள்வேன். நீ எதற்காகச் சிரமப்பட வேண்டும்!"

"ஏன் அண்ணி, நீ வரவில்லையா!"

"இல்லை!"

"அப்படியானால் நானும் போகப் போவதில்லை."

"அது உன் இஷ்டம்."

மத்தியானம் அண்ணா வந்ததும் எங்களைப் பார்த்து, "போகலாமா!" என்று கேட்டார்.

"இல்லை. இன்று மலைக்குப் போக வேண்டாம் அண்ணா. இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்" என்றேன் நான்.

"நாளைக்கு ஊருக்கு வருவதாகக் கடிதமெழுதியிருக்கிறாய். அப்புறம் இன்னொரு நாள் எப்படிப் போக முடியும்?"

"இன்னொரு நாளில்லாவிட்டால் இன்னொரு தடவை வரும்போது பார்த்துக் கொள்ளலாம்" என்று பதிலளித்தேன்.

அண்ணாவுக்குக் கோபம் வந்து விட்டது. "லட்சணம்தான் உங்கள் பேச்சு. ஆபீஸில் லீவு போட்டாயிற்று. வண்டிக்காரனுக்குச் சொல்லியனுப்பியாகி விட்டது. போகாவிட்டால் என்ன நினைத்துக் கொள்ளுவான் நம்மைப் பற்றி. கட்டாயம் இன்று புறப்பட்டுத்தானாக வேண்டும். இன்னும் ஐந்து நிமிஷத்தில் தயாராக இருக்க வேண்டும்" என்று கூறிவிட்டு, தாம் புறப்படத் தயாரானார்.

அண்ணாவின் சொல்லைத் தட்ட மாட்டாமல் நான் புறப்பட்டு விட்டேன். அண்ணியைத் தலைவாரிக் கொள்ள அழைத்தபோது ஒரே யடியாக மறுத்து விட்டாள்.

"அண்ணி இப்பொழுதும் சொல்லி விட்டேன். நீ வராவிட்டால் நானும் போகத் தயாராக இல்லை" என்றேன். அப்படிச் சொன்னாலாவது தட்டாமல் புறப்படுவாள் என்று நினைத்தேன். ஆனால் அதற்கு அவள் அளித்த பதில் ஆயிரம் தடி கொண்டு என் தலையில் தாக்கியது போலிருந்தது.

"விமலா! தயவு செய்து நீ மட்டும் போய் விட்டு வா. எனக்காக நீ போகாமலிருக்க வேண்டாம். உன் அண்ணா கையால் நான் அடி வாங்கிச் சாவதில் உனக்கு விருப்பமானால் நீ போகாமலிருக்கலாம்" என்றாள். அந்த வார்த்தையில்தான் எத்தனை நிஷ்டூரம்! என்ன இருந்தாலும் அண்ணி அண்ணிதான்!

புருஷன் மனைவிக்குள் ஆயிரம் வருத்தமிருக்கலாம். அதை என் முன்னிலையில்தான் பெரிதுபடுத்திக்கொள்ள வேண்டுமா! இன்று எங்களுடன் வர மறுக்கிறவள் சமாதானத்திற்குப் பின் என்றைக்காவது ஒரு நாள் கணவனுடன் குஷாலாய்க் கிளம்பாமலா இருக்கப் போகிறாள்!

"என்ன இன்னும் புறப்படவில்லையா!" என்று கேட்டுக்கொண்டே வந்தார் அண்ணா. 'அண்ணி வரவில்லை. அதனால் நானும் வரவில்லை' என்று சொல்ல விரும்பினேன். சகஜ சுபாவத்திலிருந்தால் அப்படிச் சொல்லியிருப்பேன். சற்றுமுன் தான் என் மண்டையில் ஓங்கிக் கொடுத்திருந்தாளே அண்ணி!

நான் அப்படிச் சொன்னால் அது சமயம் அவ்விடம் பெரிய ரகளைதான் மிஞ்சும் என்று கருதி நான் மட்டும் வண்டியை நெருங்கினேன்.

"ஏன் உன் அண்ணி வரவில்லையா?" என்று திரும்பினவர் அவள் நின்ற நிலையைக் கண்டு சினம் கொண்டவராய் வீட்டினுள் பாய்ந்தார்.

"உனக்கு அத்தனை நெஞ்சழுத்தமா! ஆசையோடு அவள் போக வேண்டுமென்று புறப்பட்ட போது நீலித்தனம் செய்கிறாயா! உன் சாகஸம் இங்கே பலிக்காது. எங்களுடன் நீயும் வரத்தான் வேண்டும்" என்று இரைந்தார்.

"முடியாது" என்ற சொல் அண்ணனை மிருகமாக்கியது. கன்னத்தில் பளீரென்று அறைந்து விட்டு வண்டிக்கு வந்தார். என் மனம் என்னைச் சுட்டது. எந்தச் சொல்லுக்குத் தப்ப நினைத்தேனோ, எதற்காகப் பயந்து இதுவரை பிறந்த வீட்டை எட்டிப் பாராதிருந்தேனோ அது என் கண்முன்னே நிகழ்ந்து விட்டது. நான் கண்டு நடுங்கிய அவப்பெயர் எத்தனை ஜாக்கிரதையாக நடந்தும் என்னை விடாமல் ஒட்டிக்கொண்டது. கலங்கும் மனதுடன் வண்டியில் ஏறினேன். வண்டி அங்கிருந்து நகர்ந்தது.

உற்சாகமற்ற மனதுடன் மலைப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினோம். உள்ளே அண்ணி யாருடனோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"ஏதடி! கோபமே வராதவர் இன்று கை நீட்டி உன்னை அடித்து விட்டார்!"—இது அடுத்த வீட்டுப் பெண்ணின் குரல்.

"ஏன் அடிக்க மாட்டார்! மகராஜி எந்த நேரத்தில் என் வீட்டிற்கு வந்தாளோ அன்று முதல் கலகம் தானே!"—இது அண்ணியின் குரல்.

"என்னதான் படித்தவளாக இருந்தாலும் நாத்தனாரல்லவா! அந்த ஸ்தானத்தின் குறும்பு எங்கே போகும்!"—பக்கத்து வீட்டுப் பெண்ணின் மறுமொழி இது.

இத்தகைய கடுஞ்சொற்களைக் காதில் வாங்கிக் கொண்டு மிகுந்த ஏமாற்றத்துடன் என் ஊருக்குத் திரும்பினேன்.

• • • • • •

ஐந்து வருஷ சாதனைகள் — 3

சென்னை சர்க்கார் இந்த மாகாணத்தின் ஆக்கத் திட்டங்களுக்காகச் செலவு செய்யும் தொகை சென்ற ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு அதிகமாகியிருக்கிறது என்பதைப் பாருங்கள்:

	1946		1951
கல்வி	ரூ. 5,90,00,000	...	ரூ. 10,32,00,000
ஆஸ்பத்திரி	2,16,00,000	...	3,13,00,000
சுகாதாரம்	87,00,000	...	1,09,00,000
நீர்ப்பாசனம்	1,55,00,000	...	9,67.00,000
விவசாயம்	1,06,000,00	...	3,14,00,000
கால்நடை வைத்தியம்	27,00,000	...	54,00,000
கூட்டுறவுச் சங்கங்கள்	44,00,000	...	80,00,000
கைத்தொழில்கள்	98,00,000	...	1,86,00,000
மின்சாரம்	1,01,00,000	...	7,00,00,000
கிராமப் புனருத்தாரணம்	2,00,000	...	24,00,000
ஹரிஜனங்களுக்கு வசதிகள்	35,00,000	...	1,06,00,000
பெண்களுக்கு வசதிகள்	1,37,000	...	3,86,000



5. "யார் அது......?"

அன்று மாலை செங்கம்மா ஏற்பாடு செய்திருந்தபடி சாரதாவின் பிரேத அடக்கத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. பிரேதத்தை மயானத்திற்குக் கொண்டு போக நான்கைந்து ஆண் பிள்ளைகள் வந்தது மாத்திரம் பொன்னிக்குத் தெரியுமே தவிர பிரேதத்தை எப்படி எடுத்துக் கொண்டுபோனார்கள் என்பதெல்லாம் தெரியாது. அந்தச் சமயத்தில் அவளைச் சமையலறையில் வைத்துச் செங்கம்மா கதவைத் தாளிட்டு விட்டாள். அவளும் கூடுமான வரையில் வெளியே என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள நினைத்துக் கதவின் இடுக்கு வழியாக எட்டிப் பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் புலனாகவில்லை. அந்த வீட்டில் நெடு நாட்களாயிருந்த ஒரு ஸ்திரீ இறந்ததற்காகத் துக்கப்பட்டு அழுவதற்கு ஒருவர்கூட இல்லாமல் போனது அவளுக்கு ஆச்சரியமாகத்தானிருந்தது.

அன்று இரவு பொன்னி சமையலறையில் காரியமாக இருந்த பொழுது செங்கம்மா தன் வெளிக் காரியங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு அங்கே வந்தாள். பொன்னி மெதுவாக அவளோடு பேச்சுக்கொடுத்து அவள் வாயைக் கிளறினாள். "இறந்துபோன சாரதா அம்மா நம்ம எஜமானி அம்மாவின் உடன் பிறந்த சொந்தச் சகோதரி தானே!" என்று கேட்டாள்.

"ஆமாம்" என்றாள் செங்கம்மா பதில் சொல்லப் பிரியம் இல்லாதவள் போல்.

"பாவம்! பிணத்தை எடுத்துக் கொண்டு போகும்போது ஒருவர்கூட அழவில்லையே!......" என்றாள் செங்கம்மாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டே பொன்னி.

செங்கம்மா அவள் முகத்தை வெட்டி விடுவது போல் பார்த்துக் கொண்டே, "புத்தியில்லாத ஜனங்கள்தான் அழுவார்கள்" என்றாள்.

"ஓஹோ! புத்தியுள்ளவர்கள் நெஞ்செல்லாம் கல்மாதிரி இருக்கும் போலிருக்கிறது. அவர்களுக்குத் துக்கம், அனுதாபம், கூடப்பிறந்த பாசம் ஒன்றுமே இருக்காது போலிருக்கிறது!" என்றாள் பொன்னி குயுக்தியாக.

"உனக்கு ஏன் இந்த அதிகப் பிரசங்கித்தனமெல்லாம்? சிலர் இறந்து போனவர்களுக்காகப் பெரிசாக ஒப்பாரி வைத்து அழுது ஊரைக் கூட்டுவார்கள். சிலர் ஆயிரம் துக்கமிருந்தாலும் மனசோடு வைத்துக்கொண்டு இருப்பார்கள்."

"இருக்கலாம். ஆனால் பெண்ணைப் பிறந்தவர்களுக்கெல்லாம் துக்கத்தை மனசோடு அடக்கி வைத்துக் கொள்ளத் தெம்பு இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்" என்றாள் பொன்னி.

"அப்படி என்றால் எங்களை யெல்லாம் பெண்ணைப் பிறந்தவர்கள் இல்லை என்று நீ சொல்லுகிறாயா!" என்று சற்றுக் கோபத்தோடு கேட்டாள் செங்கம்மா.

"அது எனக்கென்ன தெரியும்......!" என்றாள் பொன்னி.

செங்கம்மா அனல் பறக்க ஒரு பெருமூச்சு விட்டு விட்டுப் பேசாமல் இருந்தாள்.

சிறிது நேரத்தில் சாப்பாடு தயாராகி விட்டது. செங்கம்மா இரண்டு பெரிய தட்டுக்களை எடுத்துக் கொண்டுவந்து அதில் சாதம், கறி முதலியவைகளை எடுத்து வைத்தாள்.

"இதெல்லாம் யாருக்கு!" என்றாள் மெதுவாகப் பொன்னி.

"யாருக்கா! ஒன்று எஜமானி அம்மாவுக்கு. இன்னொன்று வேதாவுக்கு" என்றாள் செங்கம்மா.

"ஏன் அவர்கள் இங்கேயே வந்து சாப்பிட்டு விட்டுப் போகக் கூடாது!" என்றாள் பொன்னி.

"இதெல்லாம் பற்றி உனக்கு என்ன கேள்வி! நீ உன் வேலையைக் கவனி."

"ஏன்! இதுவும் என்னுடைய வேலைதான். நான் இந்த வீட்டிலே வேலை செய்ய வந்திருக்கிறேன். இங்கே கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டது மாதிரி இருந்தால் எப்படிக் காரியம் செய்ய முடியும்! இந்த வீட்டில் எத்தனைபேர் இருக்கிறார்கள்; அதிலே ஆண் பிள்ளைகள் எத்தனை பேர், பெண் பிள்ளைகள் எத்தனை பேர்! அவர்களுடைய குணம் பழக்க வழக்கமெல்லாம் எப்படி எப்படி யென்று நான் தெரிந்து கொள்ளுவது நல்லதில்லையா!" என்றாள் பொன்னி அடக்கமாக.

"வேதா எப்பொழுதும் அவள் அறையில்தான் இருப்பாள். எஜமானி அம்மாள் சமையலறையில் வந்து சாப்பிட மாட்டார்கள். போதுமா!" என்றாள் பளிச்சென்று செங்கம்மா.

"சரிதான். வேதா என்கிற அந்தப் பெண்ணுக்கு ஏதாவது உடம்பு சரியாக இல்லையோ...!"

"ஆமாம்! கொஞ்சம் உடம்பு குணமில்லைதான்."

"சரிதான். அப்படியென்றால் நான் வேண்டுமானால் அவளுக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு போய்க் கொடுக்கிறேனே...!" என்றாள் ஆர்வத்துடன் பொன்னி.

"ஹூஹூம்! இப்படிப்பட்ட வேலையெல்லாம் செய்ய உன்னை வேலைக்கு அமர்த்தவில்லை. அதெல்

லாம் என்னுடைய வேலை. தெரிந்ததா!'' என்றாள் செங்கம்மா விரைப்பாக.

அவளுடைய சொற்களிலும் முகத்திலுமிருந்த படாடோபம் பொன்னிக்கு ஏதோ சந்தேகத்தை அளித்தது. ''நான் போனால் அவளைத் தின்று விடுவேனா! உடம்பு சரியில்லாமலிருக்கும் அந்தப் பெண்ணுக்கு என்னைப்போல ஒரு பெண்ணோடு பழகுவது சிறிது ஆறுதலாக இருக்கும். இப்படிப் பட்ட இடத்தில் அவளுக்கும் மன ஆறுதலுக்கு ஏதாவது வேண்டாமா!''

''என்ன! நீ இந்த வீட்டு வேலைக்காரி என்பதை நினைவில் வைத்துக் கொள். வேதாவோடு கூடி விளையாடிப் பழக உன்னை அழைத்துக் கொண்டு வரவில்லை'' என்றாள் செங்கம்மா கோபமாக.

''ஓஹோ! அப்படியா! இப்போதான் எனக்குப் புரிந்தது'' என்று மௌனமாக இருந்தாள் பொன்னி. ஆனால் மனதிற்குள் மட்டும் 'நான் மாத்திரம் வேதாவாக இருந்தால் இந்த இடத்தை அப்படியே நெருப்பை வைத்துக் கொளுத்தியிருப்பேன். பாவம்! அவள் ஒரு அசட்டுப் பெண் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டாள்.

ஊரில் பலர் அந்தக் கட்டிடத்தைப் பற்றியும் அதில் வசிப்பவர்களைப் பற்றியும் பேசிக் கொள்ளும் கதைகளை அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். ஒவ்வொன்றும் அப்பொழுது அவள் நினைவிற்கு வந்தன. பலர் அந்த வீட்டில் ஒரு பைத்தியம் பிடித்த பெண் இருப்பதாகச் சொல்லிக் கொள்வதும் அவளுக்கு நன்றாகத் தெரியும். அந்த உண்மையைக் கண்டு பிடிப்பதற்காகத் தானே அவள் அங்கே வேலை ஒப்புக் கொண்டாள்!

அடுத்த கணம் அவளது சிந்தனைக்கு இடையூறாக அந்த அறைக்குள் திடீரென்று மரகதம் நுழைந்தாள். பொன்னி அப்பொழுது தான் மரகதத்தை முதன் முதலாகப் பார்த்தாள்.



அவளைப் பார்த்தவுடன் அவள் தான் வீட்டுப் பெரிய எஜமானி என்று தீர்மானித்துக் கொண்டாள். எஜமானியாய் இருந்தாலென்ன! பொன்னி அவளைப் பார்க்காதது போல் தன் காரியத்திலேயே கண்ணாக இருந்தாள். மரகதத்தின் விஷம் போன்ற கொடிய பார்வை பொன்னியின் மீது விழுந்தது. பொன்னியின் அழகான முகமும் குறுகுறுப்பான கண்களும் அவளைச் சிறிது திகைக்க வைத்தன. ''இவள் தானா குருவிக் குளத்திலிருந்து வந்த பெண்!'' என்று கேட்டாள் செங்கம்மாவைப் பார்த்து.

''ஆமாம்'' என்றாள் செங்கம்மா. இதைக் கேட்டதும் பொன்னி தன்னை ஒருவிதமாகச் சுதாரித்துக் கொண்டு மிகவும் அடக்கமுள்ள பெண் போல எழுந்து நின்றாள்.

மரகதம் மேலும் கீழுமாக அவளை ஒருதடவை பார்த்துவிட்டு, ''நீ இங்கே ஒழுங்காக இருப்பாயா!'' என்றாள் அதிகார தோரணையில்.

''குருவிக் குளத்திலுள்ளவர்கள் எப்பொழுதும் ஒழுங்காகத்தான் இருந்து ஜீவனம் செய்கிறார்கள்'' என்றாள் பொன்னி.

''நீ கொஞ்சமும் அடக்கமில்லாமல் பேசுகிறாயே! என்னிடம் பேசும்போதெல்லாம் 'எஜமானி அம்மா' என்று மரியாதையாகச் சொல்லி விட்டுத்தான் பேசவேண்டும்'' என்றாள் பொன்னியைக் கடுமையாகப் பார்த்துக் கொண்டே.

''ஏன் அப்படி நான் பேசவேண்டும்!'' என்றாள் பொன்னி பளிச்சென்று.

மரகதம் தன் உதட்டைக் கடித்துக்கொண்டு கண்களில் கோபம் பறக்க அவளை ஏறிட்டுப் பார்த்தாள். ''இங்கே மரியாதை இல்லாமல் நடக்க முடியாது, தெரியுமா! என்னிடம் மரியாதை காட்டாவிட்டால் நான் சகித்துக் கொண்டிருக்க மாட்டேன்'' என்றாள் படபடப்போடு.

''ரொம்ப சரி! நீங்கள் சகித்துக் கொண்டிருக்க வேண்டாம். இப்பொழுதே நான் போய் விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் செங்கம்மாவின் முகத்தைப் பார்த்தாள் பொன்னி. அவள் பார்க்கும் பொழுது மரகதத்தின் பார்வையும் செங்கம்மாவின் மீது விழுந்தது. அவர்கள் பார்வையிலேயே தங்கள் உள்ளக் கருத்தைப் பரிமாறிக் கொண்டனர் என்பதைப் பொன்னி ஒருவிதமாகத் தெரிந்து கொண்டாள். மரகதம் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுத் தன் முகத்தைச் சிறிது தெளிவாக வைத்துக் கொண்டு, ''நீ இதற்கு முன் ஒரு இடத்திலும் வேலை செய்ததில்லையா!'' என்றாள் நயமாக.

''இல்லை!''

''அதனால்தான் இப்படிப் பேசுகிறாய்! சிறு பெண் நீ, ரொம்பத் தெரிந்து கொள்ள வேண்டும். எப்பொழுதும் பெரியவர்களிடம் மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டும்'' என்றாள் மரகதம்.

''நான் எந்தப் பெரியவர்களிடம் மரியாதை காட்ட வேண்டுமோ, அவர்களெல்லாம் என் வீட்டிலிருக்கிறார்கள்'' என்றாள் பொன்னி.

மரகதம் அவளை விழித்துப் பார்த்தாள். பார்வையிலேயே சுட்டுப் பொசுக்கி விடுகிறவள் போல, ''உனக்கு எவ்வளவு துணிச்சல் என்னிடம் இப்படிப் பேச! நான்தான் உனக்கு உயர்ந்தவள். நான் இந்த வீட்டுக்கு எஜமானி'' என்றாள் கோபத்துடன்.

பொன்னி தன் கையிலிருந்த பாத்திரத்தைப் பொட்டென்று கீழே வைத்து விட்டு, ''ரொம்ப சரி! அப்படியென்றால் நீங்களே உங்கள் வீட்டுக் காரியங்களையெல்லாம் கவனித்துக் கொள்ளலாம். நான் இதோ போய்விடுகிறேன். எனக்கு இந்த

அனுபவம் போதும்'' என்று படபடப்புடன் சொல்லி விட்டுக் கிளம்பத் தொடங்கினுள்.

செங்கம்மா குறுக்கே வந்து அவள் கையைப் பிடித்து நிறுத்தி, ''கொஞ்சம் இரு. நீ ஒன்றும் வருத்தப்படாதே. எனக்காகக் கொஞ்சகாளாவது இந்த வீட்டில் இரு'' என்ருள்.

''ஏன்! எதற்காக!'' என்ருள் பொன்னி படபடப்புத் தணியாமலேயே.

''இதோ பார்! இன்னும் நீ எஜமானி அம்மாவைப் புரிந்து கொள்ளவில்லை. பத்துப் பன்னிரண்டு வருஷமாக நம் எஜமானி அம்மாளுக்குக் காலம் எப்படி எப்படியெல்லாம் மாறிக் கொண்டிருக்கிறது என்று தெரியாது'' என்று சொல்லி மரகதத்தை ஒரு நிமுசாகப் பார்த்து விட்டு மறுபடியும் பேச ஆரம்பித்தாள். ''எஜமானியை எஜமானியாயும் வேலைக்காரியை வேலைக்காரியாயும் நினைத்த காலத்தில் அவர்கள் இங்கே வந்தார்கள். இப்போது உலகம் எவ்வளவோ மாறிப் போச்சு. அதையெல்லாம் என்னைப் போல் வெளியே போய்ப் பார்த்து அனுபவித்தவர்கள் தான் தெரிந்து கொள்வார்கள். இந்த வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் அவர்களுக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது! இதை நீ முதலில் தெரிந்து கொள்ளனும். கூடுமான வரையில் அவர்களிடம் மரியாதையாக நடந்து கொண்டு, இருக்கிறவரையிலும் சந்தோஷமாக இருந்துவிட்டுப் போ'' என்ருள்.

பொன்னி மௌனமாக நின்று கொண்டிருந்தாள். அவள் மனச் சமாதான மடைந்து அங்கே இருக்கச் சம்மதித்தாள் என்றுதான் அவள் முகக் குறியிலிருந்து தெரிந்தது. அவள் அந்த வீட்டிலிருந்து இன்னும் தெரிந்து கொள்ள வேண்டிய ரகசியம் எவ்வளவோ இருக்கிறதல்லவா!

மரகதம் பொன்னியை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டே செங்கம்மாவைப் பார்த்து, ''சரி, வா! நாம் போகலாம்'' என்ருள்.

செங்கம்மா சாப்பாட்டுத் தட்டை எடுத்துக் கொண்டு அவளுடன் வெளியே சென்ருள். அடுத்த நிமிஷம் சமையலறையின் கதவு வெளியே சாத்தித் தாளிடப்பட்டது.

பொன்னிக்கு எல்லாம் விநோதமாய் இருந்தது. தன்னை ஏன் இப்படி உள்ளே வைத்துக் கதவை வெளிப் புறமாகத் தாளிட்டுக் கொண்டு போக வேண்டும்! தனக்குத் தெரியாமல் அவர்கள் ஏதாவது சதி செய்கிருர்களா! அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. மறுபடியும் கதவு எப்பொழுது திறக்கும் என்பதை எதிர்பார்த்திருந்தாள். எது நடந்தாலும் சகிப்புத் தன்மையோடு இருந்து எல்லா ரகசியங்களையும் தெரிந்து கொண்டு விட வேண்டும் என்று மனதில் ஒரு திடமான நிர்மானத்திற்கு வந்தாள்.

சமையலறையின் கதவு திறக்கப்பட்டது. ''அப்பா! இனிமேல் உனக்கு ஒருவிதக் கஷ்டமுமில்லை. எஜமானியம்மா உன்னைப் பற்றிய கவலையெல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிட்டார்கள். நான் சொல்லுகிறபடி நீ கேட்டுக்கொண்டிருந்தால் ரொம்ப நல்லது'' என்று சொல்லிக் கொண்டே செங்கம்மா உள்ளே நுழைந்தாள்.

''அப்படி என்ருல் நீங்கள் தான் இனிமேல் எனக்கு எஜமானி அம்மா போல, இல்லையா! நல்லது எந்தக் குட்டிச்சுவர் எஜமானியாக இருந்தால் என்ன! எனக்கு என் வேலைதானே முக்கியம்! நீங்கள் எதுசொன்னலும் கேட்கிறேன். ஆனல் என்னை உள்ளே வைத்து வெளியே தாளிட்டுக்கொண்டு போகாதீர்கள். இது வீடுதானே! ஜெயில் இல்லையே......!'' என்ருள்.

''எங்கள் எஜமானி அம்மா எல்லா விஷயத்திலும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்கிறது பழக்கம். அவர்களுக்கு உன் மேலே கொஞ்சம் சந்தேகம். நீ சிறிசு. ரொம்ப வாய்த் துடுக்காய் வேறு இருக்கிருய். தவிர வேதாவோடு நீ பழகி அவளை ஏதாவது கெடுத்து விடுவாயோ என்று பயம். அந்தப் பெண் உன்னைப்போல் இல்லை. குழந்தைப் பருவத்திலிருந்து அவளுக்கு அன்னிய முகமே தெரியாது. இந்தக் கட்டிடத்தைத் தாண்டி வெளியுலகம் எப்படி யிருக்குமென்றே தெரியாமல் அருமையாக வளர்க்கப்பட்ட பெண்'' என்று சொல்லி நிறுத்தி பொன்னியின் முகத்தைப் பார்த்தாள் செங்கம்மா.

''பாவம், ஏன் அப்படி ஒரு பெண்ணை அடைத்து வைக்கணும்! அவளை அப்படி அடைத்துவைத்து வளர்த்து எந்தத் தேவதைக்காவது பலி கொடுக்கப் போகிருர்களா!'' என்ருள் ஒன்றும் அறியாத வெகுளியைப்போலப் பொன்னி.

செங்கம்மாவிற்கு அவள் வார்த்தை ஒருபுறம் கோபத்தை உண்டாக்கியது. இருந்தாலும் பொன்னியின் வாயை அதிகமாகக் கிளறுவதை விட நயமாக அவளிடம் நடந்து கொள்வதுதான் நன்மை என்று அவளுக்குப் பட்டது. ''பலி கொடுப்பதற்காக யாராவது ஒரு பெண்ணை வளர்ப்பார்களா! அசட்டுத்தனமாய்ப் பேசாதே. தங்கள் பெண்ணைக் கட்டுப்பாடாக வளர்க்கணும் என்று அவர்களுக்குப் பிரியம். அதனுல் அப்படி வளர்க்கிருர்கள்'' என்ருள்.

'அப்படியா! ஐயோ பாவம்!'' என்று அனுதாபப் படுவதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு ''அவளுக்குத் தாயே இல்லையா!'' என்று கேட்டாள்.

''இல்லை. அவளுடைய தாயார் நம்முடைய எஜமானி அம்மாளின் அடுத்த தங்கை. இந்தப் பெண் பிறந்தவுடனேயே அவள் இறந்து விட்டா



ளாம். அதிலிருந்து நம்முடைய எஜமானி அம்மா தான் அவளை வளர்த்து வருகிறாள்.''

''ஏன், அவளுடைய தகப்பனார் எங்கே போய் விட்டார்! அவரிடம் ஏன் இந்தப் பெண் வளர்ந்து வரக்கூடாது!''

''அவளுடைய தகப்பனாரா!......அவர் அவளை எடுத்து வளர்க்க வழியில்லை. அவர் அவள் பிறப்பதற்கு முன்னாலேயே ஏதோ ஆபத்தில் சிக்கிச் செத்து விட்டாராம்.''

பொன்னியால் செங்கம்மாவின் வார்த்தைகளை நம்ப முடியவில்லை. இதற்குக் காரணம் செங்கம்மா அவளுடைய கேள்விகளுக்குத் தயங்கித் தயங்கிப் பதில் சொல்லியதுதான்.

''பாவம்! அவருக்கு என்ன ஆபத்து வந்ததோ......! ஏதாவது ரயிலில் காரில் வரும் போது ஏதாவது அபாயம் ஏற்பட்டுவிட்டதா...!''

''என்ன ஆபத்தோ, எனக்கு என்ன தெரியும்! உனக்கு அது தெரியவேண்டிய அவசியம் என்ன! அடிக்கடி நீ என்னைக் கிளறிக் கிளறிக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தால் உனக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது. நீ போய் உன் வேலையைக் கவனி'' என்று செங்கம்மா சிறிது அலுப்புடன் சொன்னாள்.

''சரி! நான் என் வேலையைக் கவனிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் பாத்திரங்களை விளக்கத் தொடங்கினாள் பொன்னி.

செங்கம்மா வேதாவிற்காகச் சாப்பாட்டை எடுத்துத் தட்டில் வைத்துக்கொண்டு மாடிக்குப் போனாள். பொன்னி சில வினாடிகள் அவள் எங்கே போகிறாள் என்பதைக் கவனித்துவிட்டு மெதுவாகப் பூனைபோல் நடந்து அவளைப் பின் தொடர்ந்தாள். மாடிப் படிக்குச் சமீபமாக வந்ததும் செங்கம்மா கையில் ஒரு சிம்னி விளக்குடன் மாடியின்மேல் படியிலிருந்து மறைந்தது நன்கு தெரிந்தது. பொன்னி இருள் சூழ்ந்த மாடிப் படிக் கட்டுகளில் மெதுவாக ஏறி மாடியை அடைந்தாள். அப்பொழுதுதான் செங்கம்மா தெற்கு வரிசையில் மூன்றாவதாக இருந்த அறையில் நுழைந்தது தெரிந்தது. அதுதான் வேதாவின் அறை என்பதை நன்றாகக் கவனத்தில் வைத்துக் கொண்டு பொன்னி உடனே கீழே இறங்கிச் சமையலறைக்கு வந்து தன்னுடைய வேலைகளில் கவனம் செலுத்தினாள்.

சிறிது நேரத்தில் செங்கம்மா சமையலறைக்குத் திரும்பிவந்து, ''இனிமேல் நாம் சாப்பிடலாம்'' என்றாள். அவர்கள் இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள். ''இனிமேல் படுக்கப் போக வேண்டியதுதான்!'' என்றாள் செங்கம்மா.

''இப்பொழுது மணி என்ன இருக்கும்!'' என்றாள் பொன்னி அவளுடன் சரளமாகப் பழகப் பிரியப் படுகிறவளைப் போல்.

''மணி எட்டு இருக்கும். இங்கே நாங்கள் சீக்கிரமாகவே தூங்கிவிடுவோம். ஏனென்றால் விடியற்காலையிலேயே எழுந்துவிட வேண்டுமல்லவா!'' என்றாள்.

''சரிதான்'' என்றாள் பொன்னி, அவள் வார்த்தையை ஆமோதிப்பவள் போல.

''நீ இந்த விளக்கை எடுத்துக் கொண்டு உன் அறைக்குப் படுத்துக் கொள்ளப் போகலாம்'' என்று சொல்லிவிட்டுச் செங்கம்மா போய் விட்டாள்.

பொன்னி விளக்கை எடுத்துக் கொண்டு தன் அறைக்கு வந்தாள். அவள் சாயந்திரம் வந்த போது அந்த அறைதான் தன் படுக்கை அறை என்று தீர்மானமானவுடன் அதைக் கூடுமான வரை கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்து வைத்திருந்தாள். சுத்தமாய் இருந்தாலும் அங்கு அவளுக்குத் தூக்கம் வருவது கடினமாய்த்தான் இருந்தது. காற்று இல்லாததினால் ஏற்பட்ட புழுக்கத்தில் அவள் மூச்சுத் திணறியது. அவள் தன் படுக்கையிலேயே உட்கார்ந்து யோசிக்கத் தொடங்கினாள். அந்த வீட்டில்தான் என்ன அமைதி! பேய் அமைதி! எத்தகைய நிசப்தம்! சாவை அழைக்கும் காரிருள். அவளுக்கு அது ஒரு நரகம்போல் தோன்றியது. 'நாற்பது ரூபாயில்லை. மாதம் நாலாயிரம் ரூபாய் கொடுத்தாலும் ஒருவராலும் இந்த வீட்டில் வேலை செய்ய முடியாது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவள் மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்தாள். செங்கம்மாவும் மரகதமும் நன்றாக இப்பொழுது தூங்கிக்கொண்டிருப்பார்களென்று அவளுக்குத் தோன்றியது.

அவள் மெதுவாக விளக்கை எடுத்துக் கொண்டு மாடிப் படிக்குச் சமீபமாகப் போனாள். எங்கும் நிசப்தமாய் இருந்தது. அந்த நிசப்தத்தைக் குலைக்கக் கூடிய முறையில் ஒரு சிறு அரவம் கூட எங்கும் கேட்கவில்லை. அவள் மெதுவாக ஒவ்வொரு படியாக ஏறினாள். அவள் மாடிப் படி ஏறும்போது ஏற்பட்ட சிறிய சத்தம் அவள் காதுகளில் கூட விழவில்லை. அவளது இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. விளக்கை ஏந்தியிருந்த அவளுடைய கைகள் நடுங்கின. 'அந்தக் கட்டிடத்தில் உள்ள அதிசயமான ஒரு பெண்ணை, அதுவரையில் ஒருவரும் பார்த்திராத விநோதமான பெண்ணை நாம் பார்க்கப் போகிறோம்' என்ற ஆவலில் அவள் உள்ளம் துடித்தது.

அவள் மாடி வராந்தாவில் வந்து நின்றாள். அவளுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது, தெற்கு வரிசையில் மூன்றாவது அறை. மெதுவாக அங்கே போய் அந்த அறைக் கதவைத் தொட்டாள். கதவு தானாகவே திறந்து கொண்டது. இருள் சூழ்ந்திருந்த அந்த அறையில் பொன்னி கொண்டு வந்திருந்த விளக்கின் ஒளியினால் சிறிது வெளிச்சம் ஏற்பட்டது. அவள் ஓசைப் படாமல் அந்த அறைக்குள் நுழைந்தாள்.


அந்த அறையின் ஒரு மூலையிலிருந்து யாரோ படபடப்போடு எழுந்திருப்பது பொன்னிக்கு நன்றாகத் தெரிந்தது. அதோடு ''யாரது!'' என்று பயத்தோடு நடுங்கிக் கொண்டே கேட்கும் குரலும் அவள் காதில் விழுந்தது. (தொடரும்)



பின்னை:—சேதுவைக் கவர்மெண்டு உத்தியோகத்திலே சேர்த்து விடுகிறேன். 'ரிடையர்' ஆன பிறகு அரைச் சம்பளம் கொடுப்பார்கள்!

பாட்டி:—அது வேண்டவே வேண்டாம். எப்பொழுதுதான் குழந்தை முழுச் சம்பளம் வாங்குகிறது?

ஆரோக்கிய ரகசியம்



வி. என். குமாரஸ்வாமி

63. மத்ஸ்யாசனம் செய்யும் விதம்

விரிப்பில் பத்மாசனத்தில் உட்காரவும். பின் பக்கம் மெதுவாய்ச் சாய்ந்து பத்மாசனத்தைக் கலைக்காமலே படுத்துக் கொள்ளவும். தோள் பட்டைக்கு மேல் பக்கம் இரண்டு கைகளால் தரையை ஊன்றிக்கொண்டு, கழுத்தை வளைத்து, மார்பு, இடுப்பு மேலே வில்போல் தூக்கி, பின்னுக்கு வளைத்து, தலையின் உச்சி தரையில் படவைக்கவும். பிறகு கைகளை முன்னுக்குக் கொண்டுவந்து தொடைகளின்மேல் இருக்கும் பெரு விரல்களைப் படத்திலுள்ளபடி பிடித்துக் கொள்ளவும். இரண்டு முழங்கால்களும் தரையில் ஒட்டியிருக்க வேண்டும். வாய்மூடி இருக்க வேண்டும். வாயின் வழியே சுவாசிக்கக் கூடாது. மூக்கின் வழியேதான் சுவாசிக்க வேண்டும். தாராளமாய் மூச்சை இழுக்கவும் விடவும் செய்யலாம்.

இந்த ஆசனத்தை, சாதகர்கள் சர்வாங்காசனத்தைச் செய்யும் நேரத்தில் நான்கில் ஒரு பாகம் அதாவது கால் பங்கு நேரம் செய்ய வேண்டும். உதாரணமாக, இருபது நிமிஷங்கள் சர்வாங்காசனத்தைச் செய்பவர்கள் ஐந்து நிமிஷங்கள் மத்ஸ்யாசனத்தைச் செய்யலாம். பத்து நிமிஷங்கள் செய்பவர்கள் இரண்டரை நிமிஷங்கள் செய்யலாம். ஒரே தடவையில் மத்ஸ்யாசனத்தைக் குறித்த அளவு செய்ய முடியாவிட்டால், ஒன்று அல்லது இரண்டு நிமிஷங்கள் செய்து, சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு மறுபடியும் ஒன்று அல்லது இரண்டு, மூன்று நிமிஷங்கள் செய்யலாம். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று தடவைகளில் அவரவர்களின் தேவையான நேரத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.


சிலருக்கு முதலில் பத்மாசனமே போட வராது. அவர்கள் மத்ஸ்யாசனம் செய்ய முடியாது என்பதில்லை. சாதாரணமாய்க் கால்களை மடக்கி உட்கார்ந்து, பிறகு படுத்துத் தலையைத் திருப்பி, மார்பு, இடுப்பைத் தூக்கி வளைத்தும் செய்யலாம். சிலருக்குப் பத்மாசனம் போட்டுப் படுத்தால் மடக்கின கால்கள் அப்படியே தூக்கி நிற்கும். தரையில் படியாது. அவர்கள் நாளுக்கு நாள், மார்பை நன்கு தூக்கி, தலையைச் சிறிது சிறிதாகத் திருப்ப முடிந்தால் கால்களும் தரைப் பக்கம் இறங்கும். எடுத்ததும் ஒரு சிலர் தவிர பெரும்பாலோருக்கும் சரியான நிலை வராதுதான். ஆனால் சரியான நிலையை மனதில் இருத்திப் பயிற்சியை விடாது செய்துகொண்டே வந்தால் நாளடைவில் சரியான நிலை வந்து விடும். முதன் முதலில் முது கெலும்பின் நடுபாகம், தொடை நரம்புகள், கழுத்து முதலியன சிறிது வலிக்கத்தான் செய்யும். நாளடைவில் சரியாய் விடும். அதிகம் வலித்தால் ஓரிரண்டு நாட்கள் செய்யாமலிருந்து விட்டுப் பிறகு பழகலாம். இன்றே சித்திரத்திலுள்ளபடி செய்துவிட வேண்டும் என்று அவசரப்படக் கூடாது. சித்திரத்திலுள்ளபடி வந்தால்தான் பலன் உண்டு என்றும் நினைக்கக் கூடாது. சிறிதளவே ஆயினும் முயற்சியுடன் செய்தால் பலன் உண்டு. இதில் முக்கியமான அம்சம் மார்பு மேலே தூக்கி, உள் இருக்கும் நுரை ஈரல்களை நன்றாய்த் தாராளமாய் விரியச் செய்வதே ஆகும். பிறகு தான் கால்களைப் பற்றிக் கவனிக்க வேண்டும். கால்களைச் சரியானபடி வைப்பதிலும், நரம்புகளுக்குப் பலன் இருக்கிறதென்றாலும், பிறகு அதைச் சரியான நிலையில் நிறுத்திக் கொள்ளலாம்.

இந்த ஆசனத்தில் கவனிக்க வேண்டிய முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. அதுதான் மூச்சு விடுதல். சிலருக்குக் கழுத்தைப் பின்புறம் திருப்பினதும் வாய் 'ஆ' என்று திறந்துவிடும். ஆனால் அதில் கவனம் செலுத்தி வாயை நன்றாய் மூடிக் கொள்ள வேண்டும். சிலர் வாயை நன்றாய் மூடிக் கொள்ள வேண்டுமென்றால், உதடுகளை வாயின் உள் தள்ளி, பற்களால் உதட்டை இறுக்கி அழுத்திக் கொள்வார்கள். அப்படிச் செய்ய வேண்டிய அவசியமில்லை. சாதாரணமாக இரண்டு உதடுகளையும் சேர்த்து இருக்கும்படி செய்து, மூக்கால் மட்டும் மூச்சை வாங்கவும், விடவும் செய்தால் போதும். சிலருக்குக் கைகளைத் தோள்பட்டைக்கு மேல் தரையில் வைத்து ஊன்றிக் கழுத்தைத் திருப்ப வராது. அப்பேர்ப்பட்டவர்கள் கைகளைப்

பின்னுக்குக் கொண்டு செல்லாமலேயே சாதாரணமாகப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, கை முட்டிகளால் தரையில் ஊன்றிக்கொண்டு மார்பையும் இடுப்பையும் தூக்கி வளைத்துத் தலையைத் திருப்பலாம். அல்லது அடித் துடைகளைக் கைகளால் பிடித்து இழுத்துக் கொண்டு பிறகு தலையைத் திருப்பலாம். எப்படியும் அவரவர்கள் சௌகரியம் போல் செய்து கொண்டு, கைகளால் கால் பெரு விரல்களைப் பிடித்துக் கொண்டால் போதும்.

பத்மாசனத்தைப் போட்டு மத்ஸ்யாசனத்தைச் செய்ய முடியாதவர்கள் கைகளை வெறுமனே துடைகளின் மேல் வைத்திருந்தால் போதும். சிலருக்கு முதன் முதலில் உச்சி தரையில் படும்படியாக, அவ்வளவு சுலபமாய்க் கழுத்தைத் திருப்ப முடியாது. ஏனெனில் கழுத்துச் சதைகள், நரம்புகள், முதுகெலும்பு முதலியன சிலருக்குப் பிடிப்பாய் இருக்கும். பழகிக் கொண்டே வந்தால் சில நாட்களில் பிடிப்பு விட்டுச் சரியாய் மத்ஸ்யாசனம் செய்ய வரும்.

பலன்கள்:—நிமிர்ந்து நடக்க வேண்டும், நிமிர்ந்து உட்கார வேண்டும் என்று சொல்வதெல்லாம், நுரை ஈரலில், பிராண வாயு தாராளமாய் எல்லாப் பக்கங்களுக்கும் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான். பிராணவாயு நன்றாய் நுரை ஈரல்களின் உள்ளே எல்லா பாகங்களுக்கும் பரவினால் தான் கெட்ட ரத்தமானது, பிராண வாயுவினால் சுத்தமாக்கப்படும் என்று முன் பல அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. அதற்காகவே உட்காரும் போதெல்லாம் பத்மாசனத்தில் உட்காருங்கள் என்று சொல்வது. புஜங்காசனத்திலும் நுரை ஈரலுக்குத் தாராளமாய் இடம் கிடைத்து, பிராணவாயு நிறைய கொள்வதற்கு முடிகிறது. ஆனால் இந்த மத்ஸ்யாசனத்தில் இன்னமும் தாராளமாய் நுரை ஈரல் விரிந்து மலர்கிறது.




நாலரை வயதுள்ள சாரங்கபாணி என்னும் இந்தச் சிறுவன் தினம் ஆசனங்கள் பழகிவருகிறான். பிறர் உதவியின்றித்தானே சர்வாங்காசனம் போட்டுக் கொண்டிருப்பதைப் பாருங்கள்.

தாமரை புஷ்பம் தன் இதழ்களைப் பரப்பி மலர்வது எப்படியோ, அப்படி நுரை ஈரல் பரவிவிரிகிறது. அப்பொழுது நாம் இழுக்கும் பிராண வாயு நுரை ஈரல்களிலுள்ள ஒவ்வொரு சந்து பொந்துகளிலும் நுழைந்து, இதற்கு முன்பு அரை குறையாய் ரத்தத்தைச் சுத்தி செய்து கொண்டிருந்தாலும், இந்த ஆசனத்தில் நன்றாய், பூரணமாய்ச் சுத்தி செய்கிறது. ரத்தத்திலுள்ள கரியமல வாயுவைத் தாராளமாய் வெளியே போக்க முடிகிறது. ரத்தம் சுத்தமாகிறது.

தவிர, நுரை ஈரலைப் பாதிக்கும் க்ஷயம், காசம், இருமல் சம்பந்தமான வியாதிகளையெல்லாம், இந்தப் பிராண வாயுவின் தீவிரப் பிரவேசத்தால் நசித்து விடுகிறது. முக்கியமாக க்ஷயக் கிருமிகள் நுரை ஈரலில், எங்காவது, சந்து பொந்துகளில் ஒளிந்து கொண்டு, வசித்து வந்தாலும், மத்யாசனத்தில் அந்த இடமும் விரிவதால் அங்கும் பிராண வாயுவின் பிரவேசம் கிடைக்கிறது. அதனால் அக் கிருமிகள் நசிந்து அழிந்து விடும். மேற்கொண்டு நுரை ஈரலில் பரவாது. ஆனால் குறைவு பட்டதென்னவோ குறைவுதான். அதையும் நிவர்த்திக்க வேண்டுமானால் மற்றும் சில ஆசனங்களையும், மூச்சுப் பயிற்சியும் பழகி வந்தால் குறை நீங்கி விடும். (இதில் சில பயிற்சிகள் இனிமேல் எழுதப் போவதையும் செய்ய வேண்டுமாதலால் பெயரைச் சொல்லவில்லை. பெயரை மட்டும் சொல்லி விட்டால், அதைச் செய்வது எப்படி என்று பல கடிதங்கள் வர ஆரம்பித்து விடும். அவைகளைப் பிறகு பார்ப்போம்.) இந்த நுரை ஈரலை மலர வைக்கும் முறையை அனுசரித்துத்தான் டாக்டர்களும், மார்பை மேலுக்குத் தூக்கி வைத்துப் பிளாஸ்டர் போடுவது. இம்முறை எப்பொழுது, எப்படி, எவ்வாறு அவர்கள் கண்டு பிடித்தாலும் அது நம் பழங்காலப் பெரியோர்கள் அனுசரித்து வந்த யோகாசன மார்க்கமாகிய மத்ஸ்யாசன நிலையேயாகும்.

இதோ! மத்ஸ்யாசனத்தில் இருக்கிறான்.



மற்றொரு விதமாகவும் ஒரு குறுக்கு வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். க்ஷயக் கிருமிகளை அழிக்கப் பிராண வாயு தானே வேண்டியது! அதை ஊசியின் மூலமாய், க்ஷயக் கிருமிகளால் தாக்கப்பட்ட இடத்திற்குக் குத்திப் பிராணவாயுப் பிரயோகம் செய்கின்றார்கள். நல்ல யோசனை தான். ஆனால் அந்த சிகிச்சை பெறும் நோயாளிக்கு அதனால் உண்டாகும் வேதனை சொல்ல முடியாது. ஒரு அன்பர் இந்தப் பிராண வாயு ஊசிக்குப் பயந்து சில வருடங்களுக்கு முன் க்ஷய ஆஸ்பத்திரியிலிருந்து தப்பித்து வெளியில் வந்து விட்டார்.

நேராய் என்னிடம் வந்து அவர் குறைகளைச் சொன்னார். நோய் ஆரம்பமாகிப் பல வருடங்கள் ஆயிற்று. எக்ஸ்ரே படங்கள் பல காண்பித்தார்.

"எனக்குப் பல டைகளால் உடலை உழுதுவிட்டார்கள். மருந்துகளால் நிரப்பி விட்டார்கள். எனக்குப் பூரண வெறுப்பேற்பட்டு விட்டது. இனி இந்த யோக மார்க்கத்தைத் தான் நம்பி உள்ளேன்" என்றார். அவருடைய உடல் நிலைக்குத் தக்க புஜங்காசனம், பஸ்கி மோத்தாஸு, விபரீதகரணி, மத்ஸ்யாசனம், சாந்தி ஆசனம், நாடி சுத்தி முதலியன சொல்லித் தந்தேன். சில மாதங்களுக்குப் பிறகு அவர் வந்து, "தினம் உடம்புக்கு ஜுரம் வந்து கொண்டிருந்தது. இப்பொழுது வருவதில்லை. முன்புவிட பசிக்கிறது. ருசித்துச் சாப்பிடுகிறேன். சிறிது சுறுசுறுப்பும் தெம்பு மேற்பட்டிருக்கிறது" என்றார். மற்றும் சர்வாங்காசனம், சிரசாசனம், உட்டியாணு, நௌலி முதலியன சொல்லித் தந்தேன்.

மேற்சொன்ன ஆசனங்கள் அவ்வளவும் க்ஷய ரோகிகள் செய்யக்கூடியதுதான். ஆனால் ஒவ்வொருவரின் உடல் நிலை, வியாதியின் தன்மை மாறுதலாயும் இருக்கும். சிலருக்கு சில ஆசனங்கள் செய்தால் பிடிக்காது. செய்யவும் முடியாது. ஆகையால் பொதுவாய் ஆரோக்கியத்திற்காக ஆசனங்களைச் செய்பவர்கள் எல்லாவற்றையும் செய்யலாம். நோய்களுக்காகச் செய்ய வேண்டுமானல் ஆசன நிபுணர்களின் ஆலோசனைத் துணையுடன் செய்வதே நல்லது. (தொடரும்)

செத்தும் கெடுத்தான்!

சு. ரா.

நானும் என்னுடைய நண்பர்களும் சினிமா பார்த்து விட்டு, மின்சார ரயில் வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். 'மனிதனுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி இருக்கிறது; அதுதான் தெய்வம்' என்னும் தத்துவத்தை விளக்கும் ஆங்கிலப் படம் அது. விதி, தெய்வம் முதலியவற்றில் நம்பிக்கை இல்லாத பத்மநாபனும் அன்று எங்களுடன் வந்திருந்தார். அவர் தான் பேச்சைத் துவக்கினார்.

"என்ன கதை, ஸார்! பள்ளம் தோண்டவாவது. அதில் ஜலம் வருவதாவது. அதனால் சகல வியாதிகளும் தீருவதாவது? எல்லாம் பிதற்றல்!" என்றார்.

"அப்படி ஒரேயடியாகப் பிதற்றல் என்று சொல்லி விடாதீர்கள். அதிலும் ஏதாவது இருக்கும்" என்றேன் நான்.

"என்ன உண்மை ஸார்?......எனக்குத் துளிக் கூட நம்பிக்கையில்லை" என்றார் அவர் விடாப்பிடியாக.

"அது போகட்டும், ஸார்? நம்மை மீறிய சக்தி ஒன்று இருக்கிறது என்பதையாவது ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார் என் நண்பர் சீனிவாசன்.

"அது எப்படி ஒப்புக் கொண்டுவிட முடியும்? எல்லாம் நம்முடைய புத்தியை உபயோகிப்பதில் இருக்கிறது. மதிக்குப் பின் தான் எல்லாம்" என்றார் பத்மநாபன்.

"சரி, நான் சென்ற வருஷம் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். அதைக் கேட்டுவிட்டு, மதியால் எதையும் வென்று விட முடியுமா என்று சொல்லுங்கள்" என்று கூறிநிறுத்தினார் சீனிவாசன். பிறகு, "சென்ற வருஷம், மாதுங்கா ஸ்டேஷனில் ஒரு ஆசாமி ஓடும் ரயிலினால் தள்ளப்பட்டு இறந்தாரே, ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டார்.

"தினந்தோறும்தான் யாராவது மின்சார ரயிலுக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள்! நீங்கள் எந்த ஆசாமியைப் பற்றிப் பேசுகிறீர்கள் என்று நிச்சயமாய் எப்படிச் சொல்ல முடியும்?" என்றேன் நான்.

"மகாதேவன் என்ற பெயருடன் ஒரு தென்னிந்தியரைப் பற்றிப் பத்திரிகைகளில் கூடப் பிரபலமாக வந்திருந்ததே!" என்றார்.

"ஆமாம்! எஸ். ஐ. ஆர். என்ஜினீயரிங் டிபார்ட்மெண்டில் குமாஸ்தாவாகச் சென்னையில் இருந்தாரென்றும் பிரசுரமாகி யிருந்தது" என்றார் பத்மநாபன்.

"அவரேதான்! ஆனால் உண்மையில் குமாஸ்தா மகாதேவன் இறக்கவேயில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் சீனிவாசன். நாங்கள் திகைத்தோம்.

"என்ன ஸார், புதிர் போடுகிறீர்களே, மண்டை பிளந்து இறந்து கிடந்தவரை நாங்கள் கூடப் பார்த்தோமே!" என்றார் பத்மநாபன்.

"கேளுங்கள் வேடிக்கையை! குமாஸ்தா மகாதேவனை எனக்கு நன்றாகத் தெரியும். நானும் அவரும் சென்னையில் ஒன்றாகத்தான் இருந்தோம். இந்த விபத்து நடந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகுதான் நான் பம்பாய்க்கே வந்தேன்" என்று கூறி, சற்று நிறுத்திவிட்டுப் பிறகு தொடர்ந்தார்:

"மகாதேவன் இயற்கையில் பயந்த சுபாவமுடையவர். அவருக்குக் கைலாசம் என்றொரு நண்பர். கைலாசம் துணிச்சல்காரப் பேர்வழி.

"கைலாசத்துக்கு வேலை யொன்றும் கிடையாது. பல்லாவரத்தில் இருந்து கொண்டு, தமக்கிருந்த கொஞ்சம் நிலத்தில் வரும் வருமானத்தில் குடித்தனம் நடத்தி வந்தார். தனிக் கட்டை.

"அவருக்குக் காசி முதலிய க்ஷேத்திரங்களுக்குப் போய் வர வெகு காலமாகவே ஆசை யிருந்தது. ஆனால் கையில் போதிய பணம் இல்லை. யோசனை செய்தார். ஒரு முடிவுக்கு வந்து, மகாதேவனை அணுகினார்.

"அவருடைய யோசனை இதுதான். மகாதேவன் ஒரு மாதம் 'லீவ்' எடுத்துக்கொள்ள

வேண்டியது. ஒரு சுற்றுப் பிரயாணத்துக்கு ஏற்றபடி இலவச 'பாஸ்'களைப் பெற்றுக் கொண்டு, பல்லாவரத்தில் தம் வீட்டில் இருக்க வேண்டியது; தாம் மகாதேவன் என்ற பெயரில் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டியது. மகாதேவனுக்குத் தாம் ஐம்பது ரூபாய் தந்து விடுவதாகவும், தாம் திரும்பும் வரை அவர் வெளியே தலையைக் காட்டாமல், தம் வீட்டிலேயே இருந்து வரலாம் என்றும் கைலாசம் கூறினார்.

"முதலில் மகாதேவன் பயந்தார். கைலாசம் மிகுந்த தைரியம் கூறியதும், பணம் வேறு வருவதை உத்தேசித்து, அவருடைய யோசனைக்கு ஒப்புக் கொண்டார்.

"பிரயாணம் நன்றாகவே நடந்து வந்தது. இன்னும் மூன்று நாட்களே யிருந்தன அது முடியக் கைலாசம் பம்பாய்க்கு வந்தாகி விட்டது. அச்சமயத்தில்தான் பாழும் விதி குறுக்கிட்டது.

"மகாதேவன் என்ற பெயரில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த கைலாசம் ரயில் விபத்தில் மாண்டார். மாண்டவரின் ஜேபியில் இருந்த பாஸ் முதலியவற்றைக் கொண்டு பத்திரிகைகளில் தவறான செய்தி வந்தது. அத்துடன் அவருடைய ஆபீசுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

"ஆபீஸிலிருந்து வீட்டுக்கும் செய்தி போய், மகாதேவனின் உறவினர்கள் அலறிக் கொண்டிருந்தபோது, அவர் வீடு திரும்பினார்.

"விசாரணைக்குப் பின் அவருடைய குட்டு வெளிப்பட்டது. அதுவரை யோக்கியமாக இருந்ததால் அவர் வேலை போனதுடன் தப்பினார்" என்று முடித்தார் சீனிவாசன்.

"நீங்கள்தான் அந்த மகாதேவனோ?" என்று சந்தேகத்துடன் கேட்டேன்.

சீனிவாசன் புன்னகை புரிந்தார். "பூர்வாசிரமத்தில் எனக்கு மகாதேவன் என்றுதான் பெயர். இந்த விபத்துக்கப்புறம் பெயரையே மாற்றிக்கொண்டு, பம்பாய்க்கே வந்துவிட்டேன்!" என்றார்.

"ஆமாம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று பத்மநாபனைக் கேட்டேன்.

"ஒரு காக்கை வெளுப்பாக இருந்தால் அதற்காகக் காக்கையின் நிறம் வெண்மை என்று எப்படிச் சொல்ல முடியும்?" என்றார் அந்த விடாக்கண்டர்.

"படத்தில்தான் பாதிரி சொல்கிறாரே: 'கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்களுக்கு விளக்கம் தேவையில்லை; நம்பிக்கை யில்லாதவர்களுக்கோ விளக்கத்தினால் பிரயோஜனமில்லை' என்று. அது என்னவோ உண்மைதான்" என்றார் சீனிவாசன்.

நான் இறங்கும் இடமும் வந்துவிட்டது.

வட்ட மேஜை

பத்திரிகை தர்மம்!

சென்ற வார "கல்கி" இதழில் ஸ்ரீ சந்தானத்தைப் பற்றி எழுதும்போது ஜவாஹருடன் நாபாச் சிறையிலிருந்ததாக எழுதி யிருப்பதைக் கண்டு வருந்துகிறேன். அரசியல் வாதிகள் இந்தமாதிரித் தவறான செய்தியைத் தருவது அரசியல் வாதிகளுக்கும் பத்திரிகைக் காரர்களுக்கும் அவமானமாகும். ஜவாஹருடன் நாபாச் சிறையிலிருந்த சந்தானம், சென்னை வக்கீல் கே. பாஷ்யம் அவர்களுடைய சகோதரரான பண்டிட் சந்தானம். லாகூரில் குடியேறி ஓர் இன்ஷியூரன்ஸ் கம்பெனியின் தலைவராக நாடு பிரிவதற்கு முன்புவரையி லிருந்தார். பண்டிட் சந்தானத்தின் பெயரும் க. சந்தானம்தான். இதற்காக அவரையும் ரெயில்வே மந்திரியையும் ஒரே ஆசாமி என்று நீங்கள் சொல்லலாமா!

பிரசார வேகத்தில் உண்மையை மறந்துவிடக் கூடாது. இதுபெரிய பிழையல்ல என்று நீங்கள் கருதலாம். சிறு விஷயமானாலும் பிசகில்லாமல் நேர்மையான செய்தியைக் கொடுக்க வேண்டும். இதைத்தான் தமிழர்களும் எதிர்பார்க்கிறார்கள். பத்திரிகை தர்மமும் அதுதான்.

தியாகராயநகர்
14—12—51 ஜானகிநாதன்

[தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நாம் பிழையே செய்வதில்லை என்று என்றைக்கும் கூறியதில்லை. ஆனால் இந்த விஷயத்தில் நாம் சரியாகத்தான் எழுதி யிருக்கிறோம். தாங்கள் கூறுவதுதான் பிழை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. லாகூரில் பாரிஸ்டரா யிருந்து பின்னர் இன்ஷியூரன்ஸ்கம்பெனி தலைவரான பண்டித கே. சந்தானம் 1921-க்கு முன்பே அரசியலி லிருந்து விலகி விட்டார். நாபாவில் பண்டித ஜவாஹர்லால் நேருவுடன் சிறை யிருந்தவர் நம் மன்னார்குடி ஸ்ரீ கே. சந்தானம் எம்.ஏ. பி.எல். அவர்கள்தான்; இன்று உதவி ரயில்வே மந்திரியாக இருப்பவர்தான். இந்த விஷயத்தில் நாம் பத்திரிகை தர்மத்துக்கு மாறாக பிரசார வேகப் பிழை செய்யவில்லை என்பது தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்று நம்புகிறோம்.—ஆசிரியர்]



அன்று நாபா சிறையில் பண்டித நேருவின் கூட்டாளியாக இருந்த ஸ்ரீ கே. சந்தானம் இன்று பண்டித நேருவுடன் இந்திய அரசாங்கத்தை நடத்துவதில் ஒத்துழைத்து வருகிறார்.

காத்திருந்தவன் பெண்

வி. எஸ். ஆர்.

ஆற்றங்கரைக்குக் குளிக்கப்போன வனமாலை படிக்கட்டில் பேச்சுக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள். பேச்சு அவளைப் பற்றியதாகவே இருந்ததால் காது கொடுத்துக் கேட்டாள்.

"அஞ்சுகம்! உங்கள் மகன் கோசலையிடமிருந்து கடிதாசி வருகிறதா!" என்று ஒரு அம்மாள் கேட்டாள்.

"நேற்றுக்கூட ஒரு கடிதாசி வந்தது. அவளும் மாப்பிள்ளையுமாக அடுத்த மாதம் இங்கே வரப் போறாங்க!" என்றாள் அஞ்சுகம் பெருமையுடன்.

"பாவம், கோசலையின் சிநேகிதி வனமாலைக்குத்தான் இன்னும் கல்யாணம் ஆகவில்லை" என்றாள் முதலில் கேட்ட அம்மாள்.

"வனமாலைக்குக் கல்யாணம் ஒன்றுதான் குறைச்சல்! யாரம்மா அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்கள்!" என்றாள் அஞ்சுகம் பரிகாசமாகச் சிரித்துக் கொண்டே.

"ஏன்! அவள் அத்தான் வடிவேலு அவளைக் கல்யாணம் செய்துகொள்ளக் காத்துக் கொண்டிருக்கிறானே! தை பிறந்ததும் கல்யாணமாம்!" என்றது இன்னொரு குரல்.

"ஆமாம். ரொம்பக் கல்யாணம் செய்து கொண்டு விடுவான்! அவன் சொல்கிறதை நீ நம்புகிறாயா! வனமாலை கையிலிருக்கிற பணத்தைத் தட்டிக்கொண்டு போகிறதற்காக ஆசை வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கிறான். அவனாவது, வனமாலையைக் கல்யாணம் செய்து கொள்கிறதாவது!" என்றாள் அஞ்சுகம் கேலியாக.

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட வனமாலைக்கு ஆயிரம் தேள்கள் கொட்டியது போலிருந்தது. அவள் கண்களில் நீர் பொங்கியது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, குமுறி வந்த அழுகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு மேலே நடந்தாள். அவளைக் கண்டதும் 'கப்சிப்'பென்று வம்புப் பேச்சு அடங்கியது. மெய் மறந்த நிலையில் ஆற்றில் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வீடு திரும்பினாள். வேதனையும் வெறுப்பும் அவள் உள்ளத்தில் ததும்பின.

எப்பொழுதுமே வனமாலையைக் கண்டால் அஞ்சுகத்துக்கு ஆகாதுதான். ஆனால் அவள் மகள் கோசலை வனமாலையின் ஆருயிர் சிநேகிதி. அஞ்சுகம் அப்பொழுதெல்லாம் தன் மகளைக் கண்டித்ததை வனமாலை மறந்து விடவில்லை. "கோசலை! எப்பொழுது பார்த்தாலும் அந்தப் பெண் வனமாலையைக் கட்டிக்கொண்டு ஏன் அழுகிறாய்! அந்த அவலட்சணக் குடுக்கையை விட்டால் உனக்கு வேறு சிநேகிதி கிடையாதா!" என்பாள். அஞ்சுகம் எவ்வளவு சொன்னால் என்ன, கோசலை புருஷன் வீட்டுக்குப் போகும் வரை அவளும் வனமாலையும் இணைபிரியாத சிநேகிதிகளாகவே இருந்தனர்.

வனமாலை கொஞ்சம் ஐவேஜு உள்ள மனிதர் வீட்டுப் பெண். அவள் தகப்பன் தங்கமுத்துவுக்குப் பத்து ஏகரா நிலமும் கையில் பணமும் உண்டு. ஆடை அலங்காரங்களுக்கு எப்பொழுதும் வனமாலைக்குக் குறைவில்லை.

அவள் கன்னிப் பருவத்தை அடைந்ததும் அவள் கல்யாணப் பேச்சு ஆரம்பமாயிற்று. பல வாலிபர்கள் வனமாலையைப் பார்த்து விட்டுச் சென்றனர். ஆனால், என்ன காரணத்தினாலோ, அவள் கல்யாணம் நடைபெறாமல் தள்ளிப்போய்க் கொண்டே இருந்தது. அப்பொழுதுதான் அவள் தன் தோற்றத்தைப் பற்றி உண்மையில் கவலை கொள்ள ஆரம்பித்தாள்.

ஓயாமல் கண்ணாடியைக் கையில் ஏந்தி அழகு பார்த்துக்கொள்ள ஆரம்பித்தாள். அவள் நிறம் கருப்புத்தான். அவள் அழகி என்று சொல்ல முடியா விட்டாலும், அவலட்சணம் என்று யாரும் சொல்ல முடியாது. தன்னை விதம் விதமாக அலங்கரித்துக் கொண்டு கோசலைக்கு முன் நின்று, "நான் எப்படி யிருக்கிறேன், பார்!" என்று கேட்பாள். "உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள எவன் கொடுத்து வைத்திருக்கிறானோ!" என்பாள் கோசலை. ஆயினும், வனமாலையின் உள்ளத்தில் ஒருவித அச்சம் குடி புகுந்தது. "நான் அழகில்லையா! நான் அவலட்சணமா!"—இந்தக் கேள்வி ஆயிரம் தடவை அவள் மனதில் தோன்றியது

கோசலைக்குக் கல்யாணமாகிப் புருஷன் வீட்டுக்குப் போனதும், தனிமையின் சோர்வில் அவள் கலக்கம் பன்மடங்கு அதிகமாயிற்று. இந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாக அவள் தகப்பன் தங்கசாமி நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானான். தஞ்சாவூரிலிருந்த தன் தங்கையையும் அவள் மகன் வடிவேலுவையும் அவசரமாக அழைத்தான். "நான் ரொம்ப நாள் இருக்க மாட்டேன். அயலில் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுப்பதைவிட உன் மகனுக்கே பெண்ணைக் கொடுக்கலாமென்று பார்த்தேன். எனக்கும் சொத்து இருக்கிறது. அதுவும் அயலானுக்கு ஏன் போகவேண்டும்! என் மகளை உன் மகனுக்குக் கட்டிக்கொள்ள சம்மதமா!" என்று தங்கமுத்து தங்கையைக் கேட்டான். தங்கை அப்பொழுது நல்ல நிலைமையில் இல்லை. சில வருஷங்களுக்கு முன் கணவனை இழந்து தவித்து நின்ற அவளுக்கு அண்ணனின் வார்த்தை அமிர்தமாக இருந்தது. மாமனின் விருப்பத்தை மனமார ஆதரித்து. வனமாலையைக் கல்யாணம் செய்து கொள்ள இசைந்தான் வடிவேலு. கல்யாண ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்ய ஆரம்பித்தனர். தை மாதம் பிறந்தது. வனமாலைக்கும் வடிவேலுக்கு கல்யாணம் நடத்தத் தேதியும் குறிக்கப் பட்டது.

வனமாலையின் உள்ளம் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தது. அத்தான் வடிவேலுவைச் சின்னக் குழந்தையில் பார்த்தது. இப்பொழுதோ இளங் காளையாக வாலிபத்தின் வசீகரத்துடன், திகழ்ந்த அத்தானைப் பார்த்த வுடனேயே அவள் இன்பக் கோட்டை கட்ட ஆரம்பித்தாள். அவனைக் காணும்போதெல்லாம் இன்பத் துடிப்பு ஏற்பட்டது. அவனைக் காணாதபோது அவள் உள்ளத்தை வெறுமை உணர்ச்சி வாட்டியது.

அவள் அத்தானிடம் உள்ளத்தைப் பறிகொடுத்திருப்பது உண்மை. ஆனால் அத்தான் அவளை உண்மையாகக் காதலிக்கிறானா! பணத்துக்காகவும் சொத்துக்காகவும் தன்னைக் கல்யாணம் செய்து

கொள்ளப் போகிறானா! அல்லது அவன் முடிவு உண்மையான நேசத்தால் ஏற்பட்டதா!—இதற்குப் பதில் தெரிந்து கொள்ளப் பெரிதும் முயற்சி செய்தாள். வடிவேலுவின் முகத்தில் குடி கொண்டிருந்த புன்னகையிலிருந்தும் அவன் இயற்கையான வேடிக்கைப் பேச்சிலிருந்தும் பதிலைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவள் குழப்பமான இந்த நிலையில் இருந்தபொழுதுதான் ஆரம்பத்தில் கூறிய அஞ்சுகத்தின் பொல்லாத வார்த்தைகளைக் கேட்டு நெஞ்சம் துணுக்குற்றாள்.

"அஞ்சுகம் சொல்வது ஒரு வேளை நிஜமாக இருக்குமோ! அத்தான் என்னை என் சொத்துக்காகத்தான் கல்யாணம் செய்து கொள்கிறாரோ! பிறர் வெறுக்கும்படி நான் அவ்வளவு அழகில்லாதவளா!" அன்று முழுதும் அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. மன வேதனையைத் தன் தாயிடம் வெளியிட்டுச் சொல்லவும் கூசினாள். அவள் வாழ்க்கையில் ஒரே ஊன்றுகோலாகக் கருதிய அத்தானும் கையை விட்டு நழுவி விடுவானோ என்று நினைக்கவும் நடுநடுங்கினாள்.

* * *

அன்று மாலை கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து விட்டு, தனக்கு நல்வாழ்வைக் கொடுக்கும்படி இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். மாலைச் சூரியனின் மஞ்சள் வெய்யிலின் இன்பப் பரிசம் அவள் மீது பட்டது. மிருதுவான தென்றல்காற்று அவள் கருள் கூந்தலைத் துடிக்க வைத்தது. அவளை அறியாமலே அவள் கண்கள் சற்று தூரத்துக்கப்பால் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த வாலிபனை ஏறிட்டுப் பார்த்தன. ஆமாம்; அந்த வாலிபன் கண் கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டுதானிருந்தான். அவன் யார்! அவன் முகத்தில் வியப்பும் ஆர்வமும் தோன்ற அவளை அப்படிப் பார்ப்பானேன்! தலை கவிழ்ந்த வண்ணம் வேகமாக வீட்டுக்கு வந்தாள். மறுநாள் அதே வாலிபனை மறுபடியும் சந்திக்கப் போகிறோம் என்பதை அவள் எப்படி எதிர்பார்த்திருப்பாள்!

காலை வேளையில் எங்கும் மூடு பனி சூழ்ந்திருந்தது. வாசலில் அற்புதமான மாக்கோலம் இட்டு அழகு பார்த்தாள் வனமாலை. வீட்டுக்குச் சற்று தூரத்திலிருந்த தோட்டத்தில் பறங்கிப்பூ பறித்து வரச் சென்றாள். தங்கக் கிண்ணம் போன்ற இரு மலர்களை அவள் கொய்த போது, "வனமாலை!" என்ற குரலைப் பக்கத்தில் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். எதிரில் யார் நிற்பது என்பதை அவள் அந்தப் பனிப் புகையில் அறிய முடியவில்லை. "யார் நீங்கள்!" என்று கேட்டாள் வனமாலை. "நான்தான் திருமலை!" அருகில் வந்த அந்த ஆசாமியை யார் என்று கண்டு கொண்டாள். முதல் தினம் கோவிலிலிருந்து வரும்போது அவளைக் கண் கொட்டாமல் பார்த்து நின்று கொண்டிருந்த வாலிபன்தான்!

"எதற்காக இங்கே வந்தீர்கள்!" என்றாள் வனமாலை சற்றுக் கோபத்துடன்.

"எதற்காக வருவேன்! உன்னைப் பார்க்கத்தான்! நானும் உன்னைப் போல் கௌரவமான குடும்பத்துப் பையன்தான்! நீ கோவிலுக்குப் போவதை தினம் பார்க்கிறேன். ஆனால் நேற்றுத்தான் நீ என்னைப் பார்த்தாய். நீ என்னைப் பற்றி என்ன நினைத்தாலும் சரி, என் மனத்திலிருப்பதை நான் உன்னிடம் சொன்னாலொழிய நான் நிம்மதியாக இருக்க முடியாது, வனமாலை! உன்னைப் போன்ற அழகான பெண்ணை நான் இது வரை பார்த்ததில்லை. மஞ்சள் வெயிலில் நீ நடந்து வந்த போது தங்கப்பதுமை நடந்து வருவது போல் இருந்தது.

"ஒரு பெண்ணிடம் இப்படித்தான் பேசுவதா!" என்று சீறினாள் வனமாலை. "வீட்டிலுள்ள பெரியவர்களை அனுப்பிப் பெண் கேட்கச் சொல்கிறதுதான் முறை. ஆனால் வயசான என் அத்தையைத் தவிர எனக்குப் பெரியவர் இங்கே இல்லை. பக்கத்திலுள்ள கிராமத்திலே என் அத்தைக்கு உடம்பு சுகமில்லை என்றுதான் பட்டணத்திலேயிருந்து போன வாரம் இங்கே வந்தேன். அத்தைக்கு மருந்து வாங்க இந்த ஊர் ஆஸ்பத்திரிக்கு வரும்போதுதான் உன்னைப் பார்த்தேன்."

"இதெல்லாவற்றையும் என்னிடம் எதற்காகச் சொல்கிறீர்கள்! பேசாமல் போகப் போகிறீர்களா, இல்லையா!"

"தயவு செய்து மன்னிக்க வேண்டும். நான் சொன்னது தவறாகயிருந்தால் அதற்காக வருத்தப்படுகிறேன். ஆனால் என் மனசிலுள்ளதை உன்னிடம் சொல்லி விராவிட்டால் ஆயுள் பூராவும் அதற்காக வருத்தப் பட்டிருப்பேன். இப்பொழுது என் துரதிருஷ்டத்துக்காக வருத்தப்படுகிறேன்" என்று கூறிவிட்டு வேகமாக அவ்விடத்தை விட்டுச் சென்றான் திருமலை. அவன் போய் வெகு நேரமாகியும் வனமாலையின் படபடப்பு அடங்கவில்லை. இவ்வளவு பரபரப்புக்கும் ஆத்திரத்துக்கும் மத்தியில் ஒரு உவகையும் ஊடுருவியது. "உன்னைப் போன்ற அழகியை இது வரை நான் பார்த்தது கிடையாது" என்று திருமலை சற்று முன் சொல்லவில்லையா! தன் அழகைப் பற்றித் தாழ்வாக அவள் நினைத்துத் துயரப்பட்டது எவ்வளவு மடமை! அஞ்சுகத்தின் பொறாமை வார்த்தைகளை நம்பி மனதைப் புண்ணாக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லையல்லவா!

பூக்களைப் பறித்துக் கொண்டு திரும்பியபோது, "வனமாலை! இங்கே யார்!" என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்தான் அத்தான் வடிவேலு. "யாரோ பூப் பறிக்க வந்தார்கள்!" என்று சொல்ல முயன்ற வனமாலை சட்டென்று தயங்கினாள். அத்தானிடம் ஏன் பொய் சொல்ல வேண்டும்! நடந்ததை மறைக்காமல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். வடிவேலு உரக்கச் சிரித்தான். "பலே ஆசாமியாக இருப்பான் போலிருக்கிறது! நீ கொஞ்சம் சொத்து உள்ள



மானேஜர்:—இரவு வேலைக் காவற்காரன் வேலைக்கு மனுப் போட்டிருக்கிறாயே! உனக்கு அந்த வேலையில் பழக்கம் உண்டா?

வந்தவன்:—முன்னால் பழக்கம் எதுவும் இல்லை. ஆனால் ஒரு சின்ன ஓசை கேட்டாலும் விழித்துக் கொண்டு விடுவேன்!



டாக்டர் :—இந்தாருங்கள், தூக்க மருந்து! இதில் ஆறு நாட்களுக்கு வேண்டியதை வைத்திருக்கிறேன்.

நோயாளி :—அடேடே! ஆறு நாட்கள் என்னத்துக்குத் தூங்கணும்? ராத்திரியிலே மட்டும் தூங்கினால் போதும்!

வள் என்று கேள்விப்பட்டிருக்கிறான். உன் பணம் காசை அடித்துக் கொண்டு போகலாம் என்று பார்க்கிறான். நீ ஏமாறுவாயா என்று பார்க்க உன்னை 'ரதி மேனகை!' என்றெல்லாம் புகழ்ந்து பேசியிருக்கிறான். நீ ஏமாறவில்லை. அந்தப் பயல் மறுபடியும் இங்கே தலை காண்பித்தால் உடனே என்னைக் கூப்பிடு! அவனுக்குச் சரியான புத்தி வரும்படி செய்கிறேன்!'' என்றான்.

தான் அடைந்த அதிர்ச்சியை வனமாலையால் தாங்க முடியவில்லை. அழகில்லாத தன்னை அத்தான் மணம் செய்து கொள்ள நினைப்பது பணத்துக்காகத்தான் என்று அங்ககம் கேலி செய்யவில்லையா! இப்பொழுதோ பட்டணத்துப் பையன் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பியது பணத்துக்காகத்தான் என்று அத்தானும் சொல்லி விட்டார். இது நிஜமா? தன் அவலட்சணத்துக்கு இதைவிட நற்சாட்சிப் பத்திரம் வேண்டுமா! அவள் இதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

* * *

ஒரு வாரம் சென்றது. அன்று மாலை, வண்டி வண்டியாகத் தேங்காய்கள் வனமாலையின் வீட்டுக்கு வந்தன. கொல்லைப் புறத்தில் கொட்டகையில் வடிவேலு அவற்றை எண்ணி மூட்டைகளில் கட்டிக் கொண்டிருந்தான். கூடத்தில் தலை முழுகுவதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள் வனமாலை. வாசற் கதவை மெதுவாக யாரோ இடிக்கும் சத்தம் கேட்டது. வனமாலை கதவைத் திறந்தாள். அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள் எதிரே நின்றது பட்டணத்து வாலிபன் திருமலைதான்! அவன் முகம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"உங்களை இங்கே யார் வரச் சொன்னது!'' என்று கேட்டாள் வனமாலை.

"நீங்கள் தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். எல்லா விஷயங்களையும் விசாரித்துத் தெரிந்து கொண்டேன். உங்களுக்கும் உங்கள் அத்தான் வடிவேலுக்கும் கல்யாணம் நிச்சயமாகி விட்டது என்பது எனக்குத் தெரியாது. இப்படியிருக்கும்போது நான் அன்று அவ்விதம் உங்களைக் கேட்டிருக்கக் கூடாது. அத்தைக்கு உடம்பு குணமாகிவிட்டது. நான் இன்று இரவு பட்டணம் போகிறேன். போவதற்கு முன் ஒரு தடவை உங்களைப் பார்த்து விட்டுப் போகாமலிருக்க என்னால் முடியவில்லை. அதனால்தான் வந்தேன்!'' அந்த வாலிபன் முகத்தில் தோன்றிய உணர்ச்சி வெள்ளத்தைப் பார்த்து வனமாலை ஒரு கணம் திகைத்துப் போனாள்.

"தயவு செய்து உங்கள் கையினால் ஒரு டம்ளர் தண்ணீர் எனக்குக் கொடுக்க முடியுமா!'' என்று கெஞ்சும் குரலில் கேட்டான் திருமலை.

"இல்லை!'' என்று சொல்ல முடியவில்லை அவளால். எங்கே வடிவேலு வந்து திருமலை பேசுவதைக் கேட்டு விடுவானோ என்ற பயம் வேறு! ஓட்டமாக உள்ளே வந்து டம்ளரில் ஜலத்தை எடுத்தாள். அதற்குள் உள்ளே வந்த திருமலையும் அவள் கொடுத்த ஜலத்தை ஆவலோடு வாங்கிச் சாப்பிட்டு விட்டு விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டான்.

சற்று நேரம் கழித்துப் பெஞ்சியில் தான் கழற்றி வைத்திருந்த நகைகளை எடுத்துப் பெட்டியில் வைக்கச் சென்ற வனமாலை திடுக்கிட்டு நின்று விட்டாள். "ஐயோ!'' என்ற வார்த்தை அவளையும் அறியாமல் வெளி வந்தது. "என்ன வனமாலை!'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் வடிவேலு.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இங்கே மோதிரத்தைக் கழற்றி வைத்தேன். அதைக் காணவில்லையே!'' என்றாள் வனமாலை.

"எங்கே போகும்! அதற்குள் இங்கே யாராவது வந்தார்களா!''

இதற்குப் பிறகும் வனமாலையால் நிஜத்தைச் சொல்லாமல் இருக்க முடியுமா! திருமலையின் திடீர் விஜயத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினாள். வடிவேலுவின் கண்கள் சிவந்தன. "நான் அப்பொழுதே சொல்லவில்லை. அவன் பெரிய திருடன் என்று! அவனை என்ன செய்கிறேன், பார்!'' என்று நாலா பக்கமும் ஆட்களை அனுப்பித் தேடச் சொன்னான். ஆனால் திருமலை அகப்பட்டால்தானே!

* * *

நான்கு தினங்கள் கழிந்தன. தபாலில் வனமாலைக்கு ஒரு பார்சல் வந்தது. பார்சலைப் பிரித்துப் பார்த்த போது உள்ளே ஒரு அழகிய புது மோதிரத்தைப் பார்த்து அவள் திடுக்கிட்டாள். பார்சலிலிருந்து ஒரு கடிதத்தைப் பிரித்து வடிவேலு உரக்கப்படித்தான்.

"ஸ்ரீமதி வனமாலைக்கு,

என்னைத் திருடன் என்று எண்ணியிருப்பாய். உண்மையில் உன் ஞாபகார்த்தமாக ஏதாவது ஒன்று வைத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் உன் மோதிரத்தை எடுத்துச் சென்றேன். அதற்குப் பதிலாக நான் அனுப்பியிருக்கும் மோதிரத்தை உன் திருமணப் பரிசாக வைத்துக் கொள். நீ உன் அத்தான் வடிவேலுவைக் கலியாணம் செய்து கொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று கடவுளை 'மனப்பூர்வமாகப்' பிரார்த்திக்கிறேன். —திருமலை''

"அவரைத் திருடன் என்று தவறாக நினைத்தோமே'' என்றாள் வனமாலை.

"அவன் திருடனே தான்! காத்திருந்தவன் பெண்ணை நேற்று வந்து கொண்டு போகப் பார்ப்பவன் திருடன்தானே! அவன் திருடன் மட்டுமா! யமனைப்போல் என் உயிரையே கொண்டு போகப் பார்த்தான்! ஆனால் பலிக்கவில்லை!'' என்று குதூகலப்பட்டான் வடிவேலு.

அவன் உயிர்—அத்தானின் காதலுக்கு இதைவிட அத்தாட்சி வேண்டுமா! தன்னைப் பற்றித் தாழ்வாக எண்ணிக் கொண்டு இத்தனை காலமும் வேதனைப் பட்டது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்! வனமாலையின் கண்களில் நீர் நிறைந்தது.



துருக்கி—5

துருக்கி தேசபக்தர்களின் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பு போலாகியது. ஒரு புறம் தங்கள் நாட்டை உள்நாட்டுச் சண்டைகள் உருக்குலைத்தன. மற்றொரு புறம், அன்னியர்களான கிரேக்கர்கள் படையெடுத்துப் பல இடங்களையும் கைப் பற்றிக் கொண்டிருந்தார்கள். சுல்தானுக்கும் கிரேக்கர்களுக்கும் பிரிட்டிஷார் பக்க பலமாக இருந்ததால், தேச பக்தர்களின் நிலைமை மிகவும் கஷ்டமாகியது.

இந்தச் சமயத்தில்தான் கெமால் பாஷா, "வெற்றி அல்லது மரணம்" என்ற மந்திரத்தைத் துருக்கி மக்களுக்கு உபதேசிக்கலானார். "தேசியப் போரில் உங்கள் கோஷ்டியினர் யாவரும் இறந்து விட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று அப்போது ஓர் அமெரிக்கர் கேட்டதற்கு, கெமால் பாஷா அளித்த அற்புதமான பதில், உலகத்திலே சுதந்திரப் போரில் ஈடுபட்டிருந்த எல்லா நாடுகளுக்கும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்தது.

"சுதந்திரத்துக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்யும் ஜனங்கள் எக்காலத்திலும் தோல்வி அடைய மாட்டார்கள். அவர்கள் தோல்வி அடைந்தார்கள் என்றால், அந்த தேசம் செத்து விட்டது என்று முடிவு செய்து விடலாம்" என்றார் கெமால்!

* * *

கடைசியாக 1920-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் துருக்கியின் எதிர்காலத்தை நிர்ணயித்து நேச தேசங்கள் ஓர் உடன்படிக்கையைத் தயாரித்தன. துருக்கியின் சுதந்திரத்துக்குச் சமாதி கட்டிவிட வேண்டும் என்பதே அந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். இதன்படி துருக்கி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இஸ்தான்புல் நகரம் நேச தேசக் கமிஷன் ஒன்றின் அதிகாரத்துக்கு உட்படுத்தப் பட்டது.

அந்த உடன்படிக்கை துருக்கி நாட்டு மக்களைத் துக்கத்தில் ஆழ்த்தியது. எனவே அதைக் கண்டித்துத் துருக்கி ஜனங்கள் துக்க தினம் கொண்டாடினர். எங்கு பார்த்தாலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

துருக்கிப் பத்திரிகைகள் எல்லாம் துக்கத்துக்கு அறிகுறியாகக் கறுப்புக் கட்டங்களுடன் வெளியாயின.

இவ்வளவு எதிர்ப்பு இருந்தும்கூடச் சுல்தானின் பிரதிநிதிகள் அந்த உடன்படிக்கையில் கையெழுத்திடத் தயங்கவில்லை!

ஆனால், தேசியக் கட்சியினர் அந்த உடன்படிக்கையை ஏறெடுத்தும் பார்க்க முடியாதென்று நிராகரித்து விட்டனர்.

நேசதேசத்தினர் வெளியிட்ட அந்த உடன்படிக்கை ஒரு விதத்தில் மகத்தான பலனைக் கொடுத்தது. நேச தேசத்தினருக்கு அல்ல, தேசபக்தர்களுக்கு எதிர்பாராத பலனைக் கொடுத்தது. நேசதேசத்தினரையும் சுல்தானையும் நம்பிக் கொண்டிருந்தால் தங்களுக்குக் கதிமோட்சம் ஏற்படாது என்பதைத் துருக்கி மக்கள் நன்கு உணர்ந்தனர். துருக்கியின் சுதந்திரத்தையும் தங்களுடைய கௌரவத்தையும் கெமால் பாஷாவின் தேசியக் கட்சியினரால்தான் காப்பாற்ற முடியும் என்பதையும் தெரிந்து கொண்டார்கள்.

துருக்கி மக்கள் சிறிதும் விரும்பாத ஓர் உடன்படிக்கையை அந்த நாட்டில் அமுலுக்குக் கொண்டு வரும் பொறுப்பை யார் ஏற்றுக் கொள்வது? அந்தப் பொறுப்பை நேச தேசத்தினர் அப்பொழுது ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

அப்போது பற்பல பிரதேசங்களையும் பங்கு போட்டுக் கொள்ளும் விஷயமாக நேச தேசங்களுக்குள் தகராறு ஏற்பட்டிருந்தது. சர்வதேச நிலைமையும் அவர்களுக்குச் சாதகமாக இல்லை.

பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்த சிரியாவில் மக்களிடையே அதிருப்தியும் அமைதியின்மையும் குடிகொண்டிருந்தன. எகிப்தில் ஏற்பட்ட கடுமையான புரட்சியைப் பிரிட்டிஷார் அடக்கியதும் அடக்காததுமாக இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் உக்ரமாக எழுந்தது.

இந்நிலையில், துருக்கியிலும் புதிய பிரச்னைகளைச் சிருஷ்டிப்பதற்குப் பிரிட்டிஷார் தயங்கினர். துருக்கி விஷயத்தில் தாங்கள் நேரடியாக எதுவும் செய்ய பிரிட்டிஷார் விரும்பவில்லை. எனவே திரை மறைவில் சூழ்ச்சி செய்ய முற்பட்டார்கள். துருக்கியின் மீது

போரைத் தொடர்ந்து நடத்தும்படி கிரேக்க மக்களைத் தூண்டினார்கள்.

அம்முயற்சியில் கிரேக்க ராஜதந்திரிகளில் சிறந்தவரான வெனிஸெலாஸ் பிரிட்டிஷாருக்கு உடந்தையாக இருந்தார். முதலாவது உலக மகா யுத்தத்திலும் அதற்குப் பிறகும் வெனிஸெலாஸ் ஐரோப்பாவை ஆட்டிவைத்த முக்கிய பாத்திரங்களில் ஒருவராக விளங்கினார். கிரீஸ்நாட்டில் இரண்டு தடவை பிரதம மந்திரி பதவியை வகித்த வெனிஸெலாஸ் இறுதியில் பிரஞ்சு தேசத்துக்கு ஓடி இறக்கும்படி நேர்ந்தது!



வெனிஸெலாஸ்

துருக்கிமீது படையெடுத்துச் சென்ற கிரேக்கர்களுக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது. அதிக ஆயுத பலம் வாய்ந்த கிரேக்கர்களின் முன்னிலையில் வீரர்களான துருக்கியர்கள் சிதறுண்டனர். எனினும் கெமால்பாஷா மனம் சோர்வடையாமல் துருக்கி ராணுவத்தை உருவாக்கி வந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கெமால்பாஷா கோஷ்டியினருக்கு எதிர்பாராத விதத்தில் பேருதவி கிடைத்தது. துருக்கியர்களுக்கு ருஷ்யா ஏராளமாக ஆயுதங்கள் கொடுத்ததுடன், பண உதவியும் செய்தது.

தாங்கள் தோல்வியடைந்து வருகையில் எதிர்பாராமல் தங்களுக்கு உதவி கிடைத்ததால் துருக்கியர்கள் உற்சாகம் கொண்டார்கள்; பன்மடங்கு வீராவேசத்துடன் போர் புரியலானார்கள்.

கெமால் பாஷாவின் கை சிறிது ஓங்கத் தொடங்கியதும், தந்திரசாலிகளான பிரிட்டிஷார் துருக்கியர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பினர். அவர்களுக்கு அதிகச் சலுகைகள் அளிப்பதாகக் கூறினர். எனினும் அவர்களுடைய கூற்றுகளுக்கெல்லாம் துருக்கியர்கள் இணங்கவில்லை.

இருந்தாலும், கெமால் பாஷாவுக்கு இறுதியில் வெற்றி கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற சந்தேகம் பிரிட்டிஷாருக்கு உண்டாயிற்று. எனவே அவர்கள் கிரீஸ்–துருக்கி யுத்தத்துக்கும் தங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று கைகழுவி விட்டார்கள். அந்தப் போர் சம்பந்தப்பட்ட வரையில் தாங்கள் நடுநிலைமை வகிப்பதாகவும் பறைசாற்றினார்கள்! முதலில் பிரிட்டிஷாரின் தூண்டுதலால் துருக்கிப் போரில் சிக்கிக் கொண்ட கிரேக்கர்கள் அவர்களுடைய மேற்படி கூற்றைக் கண்டு திகைத்துப் போயினர்.

பிரான்சும், இத்தாலியுங்கூட துருக்கியர்களுடன் இரகசியமாக கட்புக் கொள்ள இடை விடாமல் முயற்சித்தன!

1921-ம் வருஷத்தில் கிரேக்கர்கள் துருக்கியின் புதிய தலைநகரான அங்காராவைக் கைப்பற்ற எவ்வளவோ முயற்சி செய்தார்கள். அந்த நகருக்கு அருகிலும் வந்து விட்டார்கள். 'வெற்றி அல்லது மரணம்' என்ற கோஷத்துடன் கெமால் பாஷா துருப்புகள் உக்ரமாகப் போர் புரிந்து அந் நகரைக் காத்து நின்றனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்தப்போரில் இரு கட்சிகளிலும் ஏராளமானவர்கள் பலியாயினர்.

அங்காராவுக்கு அருகில் உள்ள சகேரியா நதிக் கரையில் மூன்று வாரங்கள் வரையில் அகோர யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில் இரு சாராரும் சோர்வடையும் தறுவாயில் இருந்தனர்.

அதிர்ஷ்டம் துருக்கியர்களின் பக்கத்தில் இருந்தது. முதலில் கிரேக்கர்களே சோர்வுற்றுப் பின் வாங்கினர். பின்வாங்கிய கிரேக்கர்கள் வழியிலிருந்த கிராமங்களையும் நகரங்களையும் அழித்தும் எரித்தும் சென்றார்கள். வெறிபிடித்த கிரேக்கர்களின் அச்செய்கையால் இருநூறு மைல் தூரத்துக்குச் செழுமையாக இருந்த பிரதேசங்கள் எல்லாம் பாழாகி, பாலைவனமாகியது!

சகேரியா நதிக்கரையில் துருக்கியர்களுக்கு ஏற்பட்ட வெற்றியை அவர்களுக்குக் கிடைத்த இறுதி வெற்றி என்று சொல்ல முடியாது. எனினும் அந்தப் போர் துருக்கியின் சரித்திரத்தில் மிகவும் முக்கியமான ஒரு யுத்தம் என்பதில் சந்தேகமில்லை. துருக்கியர்களின் விதியை அந்தப் போர் மாற்றியது என்பதிலும் சந்தேகமில்லை.

ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் நடந்த சரித்திரப் பிரசித்தமான போர்களில் சகேரியா நதிக் கரையில் நடந்த அந்தப் போரும் ஒன்றாகும்!

மேற்படி போரில் கெமால் பாஷா பெற்ற வெற்றி காரணமாக அவரது செல்வாக்கு எங்கும் பரவியது. அதற்கு முன் துருக்கியை அலட்சியமாகக் கருதிய பிரஞ்சு சர்க்கார் கெமால் பாஷாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

அங்காராவில் அமைக்கப்பட்ட கெமால் பாஷா சர்க்காரைப் பிரான்சும் ருஷ்யாவும் அங்கீகரித்ததால், பிரிட்டிஷாரின் நிலைமை சங்கடமாகியது. அவர்கள் தங்களுடைய பொம்மையான சுல்தானுக்கும் அவரது சர்க்காருக்கும் பக்க பலமாக இருந்து ஆதரித்து வந்தவர்கள் அல்லவா?


நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன்
செய்தீர்களா ?
" கடந்த சில ஆண்டுகளாக நான் மக்ளீன்ஸ் பற்பசையை உபயோகித்து வருகிறேன். அதிலிருந்து என் பற்களைப் பார்ப்பவர்கள் வெள்ளையாகவும் ஆச்சரியப்படுகிறார்கள்."
இன்றே மக்ளீன்ஸ் வாங்குக
MACLEANS
PEROXIDE
TOOTH PASTE
HTY-4 TAM.



டாடா
அக்ரிகோ
கருவிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுகின்றன

நம் நாட்டில் உள்ள விவசாயிகள் அனைவரும் அக்ரிகோ கருவிக ளையே பெரும்பாலும் விரும்புகின்றனர். ஏனெனில் அவை மிகவும் உறுதியானவை. நீடித்துழைக்கக்கூடியவை. கையாளுவதற்கு சுலபமானவை. வெற்றிகரமான உழவுக்கு இன்றியமையாதவை.

எல்லாவித உழவு வேலைகளுக்கும் ஏற்ற அக்ரிகோ கருவிகள் இருக்கின்றன.



மண்வெட்டிகள்:

பிரபலமான ஷவல்-டேக் டிசைன் உள்பட மூன்று நிறுவைகளில் கிடைக்கிறது. கூராக வெட்டும் முனைகள் வேலையை திறமையுடன் செய்து முடிக்க உதவுகின்றன. சீரான அமைப்பு வாய்ந்திருப்பதால் வேலை செய்ய இலகுவாக இருக்கிறது.



பாரைகள்:

விதவிதமான வேலைகள் புரிவதற்காக ஐந்து விதடிசைன்களில் கிடைக்கின்றன. இதர எல்லா அக்ரிகோ கருவிகளைப் போல், உயர்ந்த மதிக்கப்பட்ட உறை கார்பன் எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டது.



கோடாரிகள், செம்மட்டிகள்:

வெவ்வேறு வேலைகளுக்காக நான்கு விதமான அடிப்படையான நிறுவைகளில் கிடைக்கும். கூராக வெட்டும் முனைகள் பழுதில்லாமலிருப்பதற்காக விசேஷமாக உறுதியாக்கப்பட்டவை. மிகவும் உறுதி வாய்ந்தவை. நீடித்து உழைக்கக் கூடியவை.

டாடா அக்ரிகோ கருவிகள்

தி டாடா அயரன் அண்ட் ஸ்டீல் கம்பனி லிமிடெட்,

ஹெட் ஆபீஸ்: 33B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.
கிளைகள்: பம்பாய், மதராஸ், நாக்பூர், அஹமதாபாத், கான்பூர், செகந்திராபாத்,
விஜயநகரம் கன்டோன்மென்ட், ஜலந்தர் கன்டோன்மென்ட்.



Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon



முள்ளங்கி ஒரு சத்துள்ள உணவு

எலும்புகள், பற்கள், சுத்தமான இரத்தம் இவைகளுக்கும் பொதுவாக உடல் நலத்திற்கும் அவசியமான தாதுப்பொருள்களும் விட்டமின்களும் முள்ளங்கியின் கிழங்கிலும் இலைகளிலும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் எளிதில் கிடைக்கும் முள்ளங்கியை நமது சமதிட்ட உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். உடல் நலத்திற்கும் வன்மைக்கும் தேவையான சமதிட்ட உணவில் கீழ்தரப்பட்டுள்ள ஒவ்வொரு வகையிலிருந்தும் ஒன்றோ அல்லது மேற்பட்டோ உணவுகளை ஒவ்வொரு சாப்பாட்டிலும் சேர்த்துக்கொள்வது அவசியம். (1) விட்டமின்கள்: பழங்கள், சமைக்காத காய்கறிகள், கோதுமை, சால்; (2) தாதுப்பொருள்கள்: பால், முட்டைகள், பாலாடை, மீன், பசலைக்கீரை; (3) புரதசத்துக்கள்: பால், முட்டைகள், கொட்டைகள், இறைச்சி, பருப்புகள், மீன்; (4) மாவு சத்துக்கள்: பல்வகை தானியங்கள், உருளைக் கிழங்கு, வாழைப்பழம்; (5) கொழுப்புகள்: கொட்டைகள், தாவர எண்ணெய்கள், கொழுப்புள்ள மாமிசம். சமையலுக்கு, மிகவும் சிறந்த கொழுப்புகளில் ஒன்றான டால்டா உபயோகிக்கவும். இது எல்லாவித சமையல்களுக்கும் உகந்தது. அன்றியும் ஊட்டமளிப்பது. சீல் செய்த டின்களில் புதிதாகவும், துப்புரவாகவும் உங்களுக்கு கிடைக்கிறது.



உங்கள் குடும்பத்தினர் சரியான உணவுகளை சாப்பிடுகிறார்களா?

இவை ஆகியவைகளைப் பற்றி இலவச ஆலோசனை—அல்லது என்ன வேண்டுமானாலும்—

எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM 156-X30 TM